# ஞானச்சுடர்



கார்த்திகை

2018


சந்நிதியான் ஆச்சிரமம்

251 ஆவது மலர்

ஓம் முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு.

பொருள்: தமக்கு நேரும் துன்பத்தைப் பொறுத்தல், பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமை ஆகிய இவையே தவம் செய்பவரின் இயல்புகள். (261)

தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

பொருள்: தவஞ் செய்தல் முற்பிறப்பில் தவஞ் செய்தவர்களுக்கே முடியும். ஆகவே முன்னைத் தவமில்லாதவர் அதனை மேற்கொள்ளுதல் வீணாகும். (262)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### இலங்கை நம் நாடு




தூண்டு சுடர்ச்சோதி தொல்லுலகில் வந்துநமை
யாண்டுகொண் டானா மார்க்குங் குடியல்லோம்
வல்வினையும் போச்சு வரம்பிலின்ப மேயாச்சு
நல்வினை சேரிலங்கை நாடு 01

வேண்டுதல் வேண்டாமை யில்லான் விரும்பிவந்து
ஆண்டுதான் கொண்டானா மார்க்குங் குடியல்லோம்
பொய்பேசு கில்லேம் புறங்கூறு கில்லேம்யாஞ்
செய்யா ரிலங்கை நமது 02

இல்லையென்று சொல்கிலோம் யார்பாலு மன்புடையோம்
எல்லையில்லா வின்ப மெவர்க்குங் குடியல்லோம்
தில்லைவாழ் தெய்வத் திருவடியைச் சிந்தித்து
நைவோ மிலங்கைநம் நாடு. 06

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 251

2018 கார்த்திகை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இந்துப் பெண்மை | ச. வர்ணி | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -07 |
| மனிதனின் ஆன்மீகத்... | கு. சோமசுந்தரம் | 08 -09 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 10 -11 |
| திருவாலவாயான் திருநீறு | கு. சிவபாலராஜா | 12 -14 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 15 -17 |
| மகாபாரதத்தில் அரசியல்... | செ. பாலச்சந்திரன் | 18 -21 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 22 -23 |
| பதட்டத்தில் இருந்து... | க. நல்லையா | 24 -25 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 26 -30 |
| தல யாத்திரை | அ. சுப்பிரமணியம் | 31 -34 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 35 -36 |
| அகமும் புறமும் | இ. ஜெயபாலன் | 37 -39 |
| மூன்றாம் பிறை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 40 -41 |
| தன்னை அறியாமையே... | பு. கதிரித்தம்பி | 42 -43 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 44 -48 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 49 -54 |
| நீடு வாழி! | கி. குலசேகரன் | -55 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 56 -57 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | மோகனதாஸ் சுவாமிகள் | 58 -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்

# ஐப்பசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் 250ஆவது மலருக்காகிய வெளியீட்டுரையினை பேரவையின் பணிகளுக்கு உறுதுணையாக விளங்குபவரும் வில்லிசைக் கலைஞராக விளங்கும் திரு க. சத்தியதாஸ் அவர்கள் வழங்கினார்கள்.

அவர்தம் உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளின் தகைமை சொல்லுந்தரமன்று என்று கூறியதுடன் எத்தனையோ நூல் வெளியீடுகளில் கலந்து கொண்டுள்ளேன். அம்மலர் வெளியீடுகள் தொடராக வருவதில்லை. ஆனால் பேரவையினால் மாதம் ஒரு மலராக வெளியிடப்பட்டு வரும் ஞானச்சுடர் 250 மாதமாக வெளிவருவது ஒரு சாதனையே. அதற்குச் சந்நிதி வேலவனின் பூரண அருளாசிதான் காரணம் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

ஐப்பசிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சைவ சமய ஆசிரிய ஆலோசகரும், சைவப்புலவருமாகிய திரு கந்த சத்தியதாசன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

பல வருடகாலமாக ஐப்பசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆற்றிவரும் என்னை இம்முறையும் அப்பணியில் ஈடுபட வைத்த ஆற்றங்கரை வேலவனுக்கு நன்றி கூறி மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மை பற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு தனது சொல்லாற்றல்மூலம் திறம்பட உரைத்தார். இறுதியாக இராமகிருஷ்ண அமைப்பால் வெளியிடப்படும் "இராமகிருஸ்ண விஜயம்"போல் தொகையான பிரதிகளை அச்சடித்து வெளியிட வேண்டும் எனும் கோரிக்கைகளையும் பேரவையிடம் சமர்ப்பித்தார்.

கந்த சத்தியதாசனின் எண்ணக்கருத்துக்கு ஆச்சிரம சுவாமிகள் உடனேயே பதிலளித்தார். "விளம்பரங்களோடு கூடிய ராமகிருஷ்ண விஜயம் போன்றல்லாமல், விளம்பரம் எதுவுமின்றி தனி ஆன்மீக மலராக வெளிவரும் 'ஞானச்சுடர்' மலரினை ஒப்பிடுவது எந்தவகையிலும் பொருந்தாது" என்று கூறி அக்கருத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆற்றிய இருவருக்கும் நன்றிகூறி நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நூலகம் பவுண்டேசன் நிறுவனத்தின் ஈழத் தமிழர் வரலாற்றைப் பேணும் ஏட்டுச் சுவடிகளின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றிருக்கிறது. 185, ஆடியபாதம் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெற்று முடிந்த ஏட்டுச் சுவடிகளை ஆவணப்படுத்தலுக்கான இக் கண்காட்சியில் விநாயகபுராணம், தோம்பு, மாந்திரீகம், சித்த மருத்துவம், மாணிக்கவாசகர் சரித்திரம், தென் கோவில் புராணங்கள், கந்தபுராணம் என 100க்கும் அதிகமான சுவடிக் கட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்தோடு சுவடிகள் பாதுகாக்கப்படும் முறை மற்றும் கணனி மயப்படுத்தும் முறையும் விளக்கமளிக்கப்பட்டது.

ஈழத்தின் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள இந்நிலையில் நமது பங்களிப்பு என்ன? பத்தோடு பதினொன்றாக ஒரு செய்தியாக மட்டுமே இந்த விடயத்தை நோக்கப் போகிறோமா? எல்லாவற்றையும் இழந்து கையறு நிலையில் உள்ள நம் சமூகம், மிச்சம் மீதியாகவுள்ள நம் பழமைகளைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது நம் கடமையல்லவா? நம் வீடுகளில் தேடுவாரற்று மூலைகளில் எலியும் - கறையானும் அரித்துத் தின்றுகொண்டிருக்கும் ஓலைச் சுவடிகளை மனமுவந்து இந் நிறுவனத்திற்குக் கொடுத்துதவினால் அவர்கள் அதனைக் கணனிமயப்படுத்தி அதனைப் பாதுகாத்து நம் அடுத்த சந்ததிக்கு சமர்ப்பிப்பார்கள்.

காலத்தின் தேவையறிந்து - இத்தகைய ஒரு முயற்சிக்கு வித்திட்ட நூலகம் பவுண்டேசனையும், அதன் வளர்ச்சிக்காக ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களையும் நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

## 05.11.2018 திங்கட்கிழமை...

**இளைப்பாறிய அதிபரும், சைவப்புலவருமாகிய பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள் 05.11.2018 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு நாம் மிகவும் மனம் வருந்து கின்றோம். அவர் வாழுங் காலத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கியதோடு பேரவையினால் நடாத்தப் படும் வாராந்த நிகழ்வுகளில் கலந்து சொற்பொழிவுகளை நடாத்துவதில் முன் நின்றவர்.**

**அதேபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சப்பறம், தேர், தீர்த்தோற்சவங்களில் கலந்துகொள்ளும் அடியார்களின் தாகசாந்தி செய்வதில் பெரும் பங்காற்றுபவர். அத்தகை யவரின் ஆத்மா சந்நிதி வேலவனின் பாதார விந்தங்களில் அமைதிபெற சந்நிதியானை வேண்டி நிறைவு செய்கின்றோம்.**

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 11. திருக்கையில் வழக்க வகுப்பு

தருக்குவ செருக்களம் வெருக்கொள வதிர்ப்பன
தடக்கர நிமிர்த்துய ருடுக்குல முதிர்ப்பன
தடித்தெழு குலப்புவி நடுக்குற வதிர்ப்பன
தழைச்செவி படைப்பன திரட்கயிலை யொப்பன
சதுர்த்தச தலத்தையு மெடுத்தக டவுட்பணி
சகஸ்ர பணபத்தியு மொடுக்குற நடப்பன
சமுத்ர மதனத்தி லமுதத்துட னுதிப்பன
தரத்தன தலைச்சுர நதிப்புனல் குளிப்பன:.

அருக்கர் பதமுட்பட மிதித்திடு பதத்தன
அறப்படு கொலைத்தொழில் புறப்படு முகத்தன
அரக்கர்படை கெட்டுமுறி யப்பொரு பதத்தன
அயற்கு மமரர்க்கு மொருபொற்பதி யளிப்பன
அளித்தவ முதுக்கவள மொக்குவன முத்தெறி
யலைக்கடல் கலக்குவ குலக்கிரி குலுக்குவ
அடித்தெழு பொருப்பினை நெருப்பெழ விழிப்பன
அதிக்ரம கமப்ரவுட விக்ரம மதத்தன:,

மருக்குலவு கற்பக வனத்தலர் பறிப்பன
வளைத்தெழு தருக்களை மொளுக்கென முறிப்பன
மதிப்பிள வெனச்செருகி வைத்தென மணிச்சதுர்
மருப்பின விமைப்பற விழித்த நயனத்தன
வளைத்த கிரியைப் பொடிப்படுத்தி யிபமெட்டையு
மலைத்தவ ணடிப்பட மடப்பிடி யணைப்பன
மழைப்புயல் கிழிப்பன புனற்பசி தணிப்பன
மணிக்கண கனப்பண மதத்ரயம் விதிர்ப்பன:.

திருத்திய புனத்திடை வனத்தழை யுடுத்தினி
திருப்பவள் விருப்புறு வரைப்புயன் வினைப்பகை
செகுப்பவ னினைத்தவை முடித்தருள் க்ருபைக்கடல்
சிவத்த கமலச் சரவணத் தறுமுகப்பொருள்
செகத்ரய முகிழ்த்த வுதரத் திரிபுரைக்கொரு
திருப்புதல்வ னுற்பல கிரிப்பெயர் தரித்தருள்
திருத்தணி மலைக்கிறை திருப்புகழ் படிப்பவர்
சிறப்பொடு பெறத்தரு திருக்கையில் வழக்கமே.

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**

(கனடா)

**K. கனகசபேசன்**

(கனடா)

**உரிமையாளர்**

(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**ச. ஜெயதாசன்**

(கருகம்பனை, காங்கேசந்துறை)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**

(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**

(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**உரிமையாளர்**

(சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்)

**மா. ஞானலிங்கம்**

(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**க. தங்கராசா**

(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

**சி.வ. முருகையா**

(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**

(நல்லூர்)

**S. மங்களரூபன்**

(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**சின்னையா ரஞ்சிதமலர்**

(மல்லாகம்)

**த. கணபதிப்பிள்ளை**

(உடுப்பிட்டி)

**ம.க. ஸ்ரீதரன்**
(கரவெட்டி)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**P. நமசிவாய**
(அல்வாய் மத்தி)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**இ. சிவராசா**
(கரவெட்டி கிழக்கு)
**சி. விஜயகுமாரன்**
(உரும்பராய்)
**ம. தியாகலிங்கம்**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**சு. தில்லையம்பலவனார்**
(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரன் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**திரு செந்தில்நாதன்**
(கொக்குவில் கிழக்கு)
**R. பத்மா**
(சுண்டுக்குளி)
**கே.எஸ். ஆனந்தன்**
(இணுவில்)

**கி. பகவத்சிங்கம்**
(இளை. அதிபர், நீர்வேலி)
**யோகராசா குமார்**
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
**அ. தில்லைநாதன்**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**த. சந்திரசேகரம்**
(நாகர்கோவில்)
**கனகலிங்கம் மயூரன்**
(பாரதிவீதி, அச்சுவேலி)
**ச. வதனி**
(நீர்வேலி மேற்கு)
**மு. பாலசிங்கம்**
(சுண்ணாகம்)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**ஐயாத்துரை நடராசா**
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**திருமதி தயாநிதி சுசிகலா**
(தெல்லிப்பழை)
**செ. சுப்பிரமணியம்**
(யாழ்ப்பாணம்)

A. பிரதாபன்
(சந்திரபுரம். உடுவில்)
வை. இராசேந்திரம்
(இணுவில்)
C.H. புவனேஸ்வரி
(மானிப்பாய்)
திருமதி ஆறுமுகம் உமாதேவி
(பண்ணாகம், சுழிபுரம்)
திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்
(உரும்பராய்)
**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)
**அ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)
**செல்வி க. கமலாம்பிகை**
(ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை)
**க. திருச்செந்தூர்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)
**K. தங்கவேலாயுதம்**
(பருத்தித்துறை)
**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)
**வ. தம்பையா**
(கலட்டி வளவு, புலோலி மத்தி)
**மோகன் புவனா**
(புத்தூர்)
**திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்**
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)
**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)
திருமதி பிரதீபன் பிரதீபா
(அச்சுவேலி)
வைத்திலிங்கம் உதயமலர்
(கரணவாய் தெற்கு)

# இந்துப் பெண்மை

– ச. **வர்ணி** அவர்கள் –

"அரிது அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தலரிது அதனிலும் அரிது பேடு நீங்கிப் பிறத்தலரிது" என்ற ஔவையின் மொழி பெண்மை நீங்கிப் பிறத்தலைப் பெரிதாய்ப் பாராட்டியது. இம் மொழிக்கு சவால் விடும் வகையில் பெண்மையின் பெருமை பேச வாழ்ந்து காட்டியவர்கள் இந்துப் பெண்கள்.

பெண்மை என்றால் என்ன? மென்மை, அன்பு, இரக்கம், காருண்யம், வீரம், ஞானம், துணிவு, பக்தி, தியாகம், அடக்கம், பொறுமை என்பவற்றின் சாரமே பெண்மை. இப் பெண்மை, அன்பு நெறியாகத் திகழும் இந்து மதத்திற்கு பன்மடங்கு சேவையாற்றியது.

பெண்மையின் சக்தியைக் காட்டுவதற்காகவே இறைவன் மாதொரு பாகனாய் விளங்குகின்றான். சிவன், சக்தி இன்றி இயக்கமற்றவன் ஆதலால் "சிவமெனும் பொருளும் ஆதி சக்தியோடு சேரின் எத் தொழிலும் வல்லதாம் அவள் பிரிந்திடின் இயங்குவதற்கும் அரிது" என்பர்.

அவ்வகைதனில், இந்து மதத்தினை வளம்படுத்தி பெருமை சேர்த்தவர்களுள் காரைக்காலம்மையார், ஆண்டாள், மங்கையற்கரசியார், திலகவதியார், செம்பியன் மாதேவி, குந்தவைப் பிராட்டியார், பாஞ்சாலி, கண்ணகி, சீதை, ஔவை, கைகேயி, மண்டோதரி, இளையான்குடிமாற நாயனார் மனைவி, அகலிகை, சபரி, தங்கம்மா அப்பாக்குட்டி, மேருபுத்திரி அம்மையார் போன்றவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்.

முத்தமிழ் மூன்றும் பெற தொப்பையப்பனின் சரணம் புகுந்தவள் ஔவை. மனதை மகேசன் மகனிடம் கொடுத்து அருளைப் பெற்றவள். கல்வி, கேள்வி, ஞானமதில் மிளிர இப் பெண்மை கணபதி சரணம் பதிந்து வாழ்ந்து காட்டியவள். இதனை,

"அப்ப முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பையப்பனை தொழ வினையறுமே"

என்றும் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என கந்தன்மீது சிந்தை பறிபோய் பக்தி வழி மேன்மையடைந்தவள் ஔவை.

"பழம் நீயப்பா ஞானப்பழம் நீயப்பா தமிழ் ஞானப் பழம் நீயப்பா" என்று முருகனை மனமுருகி வணங்கி பெண்களும் பக்தியில் திழைத்து அருட்கடாட்சம் பெறலாம் என்று வாழ்ந்து காட்டிய பெருமை ஔவையைச் சாரும்.

மற்றும் பக்தி நெறிக் காலத்திற்கு அடித்தளமிட்டு வித்திட்ட நங்கை காரைக்காலம்மையார். சிவன்மீது சிந்தையை வைத்து சிவனடியார்களைப் பேணி இல்லறத்தில் கூட சிவநெறியை விடாது வாழ்ந்த பெண்மையிவள். பதிகம், மணிமாலை போன்ற இலக்கிய வடிவங்களையும் விருத்தப்பா எனும் பாவினத்தையும் முதன் முதலில் உதயமாக்கிப் பக்தியினைப் பாடப் பயன்படுத்தினார். சிவனிடம் உடலழகுதனை உதறி பேய் வடிவை வேண்டிப் பெற்றார்.

*இயற்கை ஒரு வேலையை முடிப்பதற்கே ஓர் அறிஞனைப் படைக்கிறது.*

"…. இவனுக்காக தாங்கிய வனப்பு நின்ற
தசை பொதி கழித்துன்பாலே
ஆங்கு நின் தாள்கள் போற்றும்
பேய் வடி வடியேனுக்கு"

என்று இம்மடந்தையின் பக்தியை பெரியபுராணம் புகன்று நிற்கின்றது. பேய் வடிவெடுத்து அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகிய ஏடுகளை முகிழ்க்கச் செய்தார். சிவனினால் "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என அழைக்கப்பட்டவள். பல்லவர் காலம் பக்தி நெறியாக விளங்க சைவ விளக்கை ஏற்றிவைத்த குல விளக்கே காரைக்கால் என்னும் பேதை.

அத்தோடு பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக விளங்கிய ஆண்டாள் பிரபக்தியின் சொரூபமாவாள். நினைவிலும் கனவிலும் கண்ணனையே காதலனாகக் கொண்டு முக்தியின்பத்தை சுவைத்த இந்துப் பெண்மை இவள். பக்திச் சுவையும் காதலும் கரைபுரண்டோட நாச்சியார் திருமொழி, திருப்பாவையை உலகிற்களித்தவள். கண்ணனிற்கு கட்டிச் செல்லும் மலர்மாலையை தானே முதலில் அணிந்து பார்த்து இறைவனுக்கு அனுப்பி வைத்து "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்ற பெயரைப் பெற்றாள். இவள் தம் பக்திக்கு,

"மானுடர்க் கென்று பேச்சுப்படின் வாழ்கிலேன்
கண்டாய் மன்மதனே"

என்ற பாவரிகளே சான்றாகின்றன.

மற்றும் பாண்டிமாதேவியான மங்கையற்கரசி இந்துமதத்தின் பால் பல சேவைகளை ஆற்றுவித்தாள். தன்னுடைய நாட்டில் சமணத்தைப் போக்கி சைவத்தினை மிளிரச் செய்தவள். நெறி பிறழ்ந்திருந்த தன் கணவனை, சம்பந்தரை அழைத்து வந்து மாற்றியவள். சம்பந்தரின்

"சூழலுமாகிய பரசமயத்திடைத் தொண்டு செய்து
வாழு நீர்மையீர் உமை காண வந்தனம்"

எனும் கவிவரி இதனைப் பறைசாற்றுகின்றது. சேக்கிழாரினால் "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" எனப் புகழ்ந்துரைக்கப்பட்டவள். இவ்விதம் இந்து மதத்திற்குப் பெருமை சேர்த்த பெண்ணாக மங்கையற்கரசி திகழ்கின்றாள். பாண்டி நாட்டில் ஆலயங்கள் புத்தொளி வீசவும், திருநீற்றின் பெருமையை சைவ உலகு அறியவும் வித்திட்ட பெண்மையாவாள்.

இவர்கள் மாத்திரமன்றி சிவஞான கண்டராதித்தரின் பட்டத்தரசியாக விளங்கியவள் செம்பியன்மாதேவி. இவள் ஏராளமான சிவன் கோவில்களைக் கட்டியவர். சோழப் பெரும் மண்டலத்தில் செங்கற் கோவில்களாகவிருந்த பத்து ஆலயங்களைக் கற்றளியாக்கியவர். அக்கோவில்களில் பூஜைகள் நேரம் தவறாமல் நடக்க இறையிலி வழங்கியவர். இவள் இந்து மதத்திற்கு ஆற்றிய சேவையின் பெருமை பற்றி திருவேள்விக்குடி சிவ தலத்துக் கல்வெட்டு பேசும். இவ்விந்துப் பெண்மையின் தன்னிகரற்ற மதச் சேவையை வியக்கும் வகையில் அவளது நாமம் மங்காது இருக்க இன்று பொன்னியின் செல்வன், பெரியபிராட்டி செம்பியன் மாதேவி, பெண்குலத் திலகம் செம்பியன் மாதேவி போன்ற இலக்கியப் படைப்புக்கள் முகிழ்த்துள்ளன.

அத்தோடு சுந்தர சோழனின் மகளாகவும், ஆதித்த கரிகாலனின் தங்கையாகவும், 1ஆம் இராஜராஜனின் அக்காவாகவும் விளங்கியவள் குந்தவைப் பிராட்டியார். இவள் சதுர்வேதி

*பிறரை விமர்சிக்கும் ஒருவன் தன் குறைகளை வெளிப்படுத்துகிறான்.*

மங்கலத்தில் விற்கப்பட்ட நிலங்களைத் தானே வாங்கி அவ்வூரிலுள்ள ஆலயங்களுக்குத் தானமாக வழங்கினாள். இராஜராஜசோழனுக்கு சிவாலயத் திருப்பணி செய்யும் அவசியத்தை நாளும் பொழுதும் உணர்த்தியதன் பேரிலே தஞ்சைப் பெருங்கோவில் கட்டி எழுப்பப்பட்டது. திருமுறை கண்ட சோழனுக்கு ஆதரவளித்து அப்பணியில் ஊக்கம் கொடுத்தவர்களில் சோழ அரசியான குந்தவைப் பிராட்டி தலைசிறந்தவள். சுந்தர சோழ விண்ணகர் என்ற ஆலயத்தின் மருத்துவமனைக்கு இவள் தவறாமல் தானம் வழங்கினாள். சோழ மண்டலத்திலே இராஜராஜபுரத்தில் சிவனுக்கு, விஷ்ணுக்கு, ஜீனருக்கு என மூன்று ஆலயங்களினை ஒரே இடத்தில் நிறுவினாள். தஞ்சைப் பெருங்கோவிலுக்கு 10000 களஞ்சு எடையுள்ள பொன்னையும் 18000 களஞ்சு எடையுள்ள வெள்ளிப் பாத்திரங்களையும் தானமாக வழங்கினார். இவர் தம் இந்துப்பணி வியக்கவல்லது.

ஆதி காவியமாகத் திகழும் இராமாயணத்தில் இந்து மணம் கமழும் பல பெண்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கற்புக்கரசியாகத் திகழும் சீதை இன்றும் இந்து மதத்தின் கற்பிற்கு அத்தாட்சியாவாள். இராமனை மாத்திரமே நினைவிலும், கனவிலும் தன் கணவனாக எண்ணி வாழ்ந்தாள். அக்கினிப் பரீட்சையில் கற்பானவள் என்று நிருபணமானவள். கம்பன் போற்றிய சொல்லின் செல்வனான ஆஞ்சநேயர் சீதையைக் கண்ட விடயத்தை இராமனிடம் கூறுகையில், "கண்டேன் கற்பினிற்கணியை கண்களால்" என்று கற்பிற்கு அணிகலனாய் விளங்கியவளை கண்டேன் என்றார். இந்துப் பெண்மை கற்பிற்கு இலக்கணமாய் விளங்கி இந்து மதத்திற்குப் பெருமை சேர்த்ததனைக் காண முடிகின்றது.

அத்தோடு இராமரின் சிற்றன்னையாக விளங்கும் கைகேயி, வீரம் மிகுந்த பெண் ஆவாள். தசரதனின் தேர் அச்சாணியை இழந்து போர்க்களத்தில் தடுமாறியவேளையில் தேரின் அச்சாணியாக கைகேயி தன் கட்டை விரலினைப் பயன்படுத்தி தேரினை ஓடச்செய்து தசரதனைப் போரில் வெற்றியடையச் செய்தாள். பெண் என்பவள் அஞ்சாத வீரம் உடையவளாகவும் இருக்க வேண்டும் என இந்துப் பெண்மைக்கு பெருமை சேர்த்தவளில் கைகேயியும் ஒருத்தியாவாள். கௌதம முனிவரின் மனைவியாக விளங்கிய அகலிகை, மனதாரப் பெண்கள் தவறிழைக்கக் கூடாது என்பதன் சாட்சிக்கு உரியவள்.

**"கற்பு என்பது உள்ளமடி அது கற்பப் பையில் இல்லையடி; அது மனதில் உள்ளது கண்மணியே"**

எனும் பாவரிகளுக்கு அகலிகையின் வாழ்க்கை சான்றாகும்.

இராவணனின் பட்டத்தரசியாக வாழ்ந்த மண்டோதரி பக்திக்கும் கற்பிற்கும் பெயர்போன இந்துப் பெண்ணாவாள். சிவன்மீது இடையறாத அன்பு கொண்டவள். இராவணன் இறந்த செய்தி கேட்டு உடனிறந்தாள். இவ்விதம் கற்புடைய இந்துப் பெண்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்.

ஐந்தாம் வேதம் எனச் சிறப்பிக்கப்படும் மகாபாரதமதில் பெண்மைக்குப் பெருமை சேர்த்தவள் பாஞ்சாலி. "ஐவருக்கும் தேவி அழியாத பத்தினி" என நாமம் கொண்டவள். கௌரவர்களின் அரண்மனையில் பாஞ்சாலி துகிலுரிக்கப்பட்டவேளையில் பாஞ்சாலி பிரபக்திமூலம் கண்ணனைச் சரணடைந்தாள். துகில் பெற்றாள். பெண்ணானவள் பக்திமூலம் எதனையும் எளிதில் பெற்றுவிடலாம் என்பதற்கு இப்பெண்மை தக்க சான்றாவாள்.

சிலம்பின் நாயகியாக விளங்குகின்றவள் கண்ணகி. சாதாரண பெண்ணாக இருந்து இன்று தெய்வமாக நாம் வணங்குமளவிற்கு இந்துவின் கற்புடைய வீரம் செறிந்த பெண்ணாக வலம் வருகின்றாள். தன் கணவனின்

*மலருக்கு மணமும் மனிதனுக்குக் குணமும் அவசியம்.*

உயிரின் நீதிகேட்டு பாண்டிய மன்னனையே எதிர்த்து மதுரையை எரித்து நீதியை நிலை நிறுத்தியவள் கண்ணகி.

இவை மட்டுமா? வயது முதிர்ந்த வேளையிலும் கூட இராமனை எதிர்பார்த்து அவன் வரும் வழியில் தினம் தினம் அன்று மலர்ந்த மலர்களினைப் பாதையில் தூவி தினம் தினம் பழுக்கும் பழங்களைக் கொய்து வந்து அவற்றுள் இனிப்பானவையைத் தானே சுவைத்துப் பார்த்து ராம நாமம் பாடி வழிமேல் விழி வைத்து அன்பு கரைபுரண்டோட வாழ்ந்த இந்துப் பெண்மைதான் சபரி.

ஈழத்திரு நாட்டிலே சைவத்திற்காகவும் தமிழிற்காகவும் தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாகட்டும் குருவின் சரணம் பதிந்து "ஆச்சார்ய தேவோ பவ" எனும் வேத மந்திரத்திற்கு சான்றாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார் இந்துப் பெண்ணான மேருபுத்திரி அம்மையார். இவ்விதம் வீரம், கற்பு, பொறுமை, கல்வி, பக்தி என அனைத்திலும் பெயர்பெற்று இந்து மதத்திற்கு. மறைந்தும் பெருமை சேர்த்துக் கொண்டிருக் கின்றனர் இந்துப் பெண்கள்.

சனாதன மதமாய்த் திகழும் இந்து மதம் இன்றும் பிற மதங்களினைத் தாண்டி பெரும் விருட்சமாய் வேரூன்றி தழைத்து நிற்கின்றதென்றால் அதற்கு இங்கு வாழ்ந்து தம் அளப்பரிய நற்குணங்களினால் மதத்தின் பெருமை காத்த இந்துப் பெண்களுக்கு ஒரு பங்குண்டு என்பதுவே காரணமாகும். ஆனால் இன்றோ பழைமைதனைப் பேணி அறவழி நடப் போர் அரிதாகி விட்டனர். இத்தகைய இந்து மதத்திற்கு பெருமை சேர்த்த பெண்களை வழி தொடர்ந்து இன்றைய அசுரத் தடைகளை உடைத்தெறிந்து இந்துப் பெண்கள் இந்து மதத்தின் பெருமை காக்க வேண்டும்.

"பெண்ணைப் பெற்றெடுத்தால்
பெண் பிள்ளை என்றுரைப்பார்
பெண்ணைப் பெறா விட்டால்
பெண் பொருத்தம் இல்லை என்பர்"

## செல்வச் சந்நிதியில் இருந்தாலே கவலைகள் தீரும்

செல்வச்சந்நிதி வேலை வணங்கிட மனம் இனிக்குது
உண்ண மதிய உணவும் கிடைத்துப் பசியைக் களையுது
கண்ணைப்போல் காக்கும் தெய்வம் கடலருகோடு இருக்குது
காவடி ஆட்டமும் கண்டு மகிழவே கண்கள் பனிக்குது
ஆண்டுக் கொருமுறை கொடியேற்றம் காண மனம் மகிழுது
வேண்டுவார் பெருவரம் வேண்டிப் பெறும் காலம் கந்தசஷ்டி ஆகுது
காண்டா மணிஒலி கவலைதீர்த்திடக் காதில் ஒலிக்குது
கந்தப் பெருமானின் அன்புப் பார்வைபட்டு கவலை பறக்குது.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*பிறர் உங்களை மதிப்பது பெருமை.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 07. காருணியத்திரங்கல்

71. எம்பிரான் போற்றி வானத் தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை கூற வெண்ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை ஆளுடை யொருவ போற்றி.

**ப-ரை:**

எம்பிரான் போற்றி- எங்கள் தலைவனே நினக்கு வணக்கம்; வானத்து அவர் அவர் ஏறு போற்றி- விண்ணுலகத்திலுள்ள பதவிகளில் இருக்கும் அவ்வத் தேவர்களுக்கெல்லாம் ஏறு போல்பவனே நினக்கு வணக்கம்; கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூற- பூங்கொம்பு போன்ற நுண்ணிய இடையினையுடைய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; வெண் நீற போற்றி- திருவெண்ணீற்றையுடையவனே நினக்கு வணக்கம்; செம்பிரான் போற்றி- செம்மேனியையுடைய பெருமானே நினக்கு வணக்கம்; தில்லை திருச்சிற்றம்பலவ போற்றி- தில்லையிற் திருச்சிற்றம்பலத்தையுடைய கூத்தப் பிரானே நினக்கு வணக்கம்; உம்பரா போற்றி- மேலாகிய சிவலோகத்தையுடையவனே நினக்கு வணக்கம்; என்னை ஆளுடை ஒருவ போற்றி- என்னை ஆளாகவுடைய ஒப்பற்றவனே நினக்கு வணக்கம். உடலிது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருள்வாயாக என்பதாம்.

எங்கள் தலைவனே வணக்கம்; விண்ணுலகத்துள்ள பதவிகளில் இருக்கும் அவ்வத் தேவர்களுக்கெல்லாம் ஏறு போல்பவனே நினக்கு வணக்கம்; உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே நினக்கு வணக்கம்; திருவெண்ணீற்றையுடையவனே நினக்கு வணக்கம்; செம்மேனியையுடைய பெருமானே நினக்கு வணக்கம்; தில்லையிற் திருச்சிற்றம்பலமுடைய கூத்தப்பிரானே நினக்கு வணக்கம்; மேலாகிய சிவலோகத்தையுடையவனே நினக்கு வணக்கம்; என்னை ஆளாகவுடைய ஒப்பற்றவனே நினக்கு வணக்கம்.

வானத்தவரவர் என்றது விண்ணுலகத்தில் ஆங்காங்குள்ள திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவத் தலைவர்களைக் குறித்தது அவர் என்றது அவரவர் என்று சுட்டு இரட்டித்தது, வெவ்வேறு பதவிகளில் இருக்கும் தேவர்களின் பன்மை தோன்றற் கென்பது. ஏறு- சிங்கேறு. "சிங்கமே யுன்னடிக்கே போதுகின்றேன்" (நாவு 313:2) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. இறைவன் விண்ணவர்க்கெல்லாம் தலைவனாதல் தோன்ற "வானத்தவரவர் ஏறு" என்றார். "வானவர் தலைவனே" "வானவர்க் கிறைவா", "சிவபுரத்தமர ரேறே", "விண்ணோர் தலைவனே"

உங்களை நீங்களே மதித்துக்கொள்வது ஆணவம்.

(திருநாவு 23:9; 42:4; 75:2; 250:7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. இனி, ஏறு- உயர்வு. ஆகுபெயராய் உயர்வுடைய இறைவனை உணர்த்தியது எனினுமாம்.

"கொம்பரார் மருங்குல் மங்கை" என்றது உமையம்மையை.
"கொம்பன்ன மின்னி னிடையாளோர் கூறன்" ஞான 224:5.
"கொம்பனைய நுண்ணிடையாள் கூறா" 246:7.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. கொம்பர்- கொம்பு என்பதன் போலி, ஆர் உவமவுருபு. மங்கை கூற, வெண்ணீற என்றதனால் இறைவன் உலகிற்கு ஆதியும் அந்தமு மாயினான் என்பது குறிப்பால் உணரப்படும்.

செம்பிரான்- செம்மேனியையுடைய பிரான். "சிவனெனு நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மானே" "செக்கரது திகழ்மேனிச் சிவனவன் காண்" (நாவு 112:9; 301:2) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. செம்பொருளாகிய தலைவன் எனினுமாம். தில்லை தலப்பெயர். திருச்சிற்றம்பலம்- கோயிற் பெயர். தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன் (9) எனத் திருக்கோவை யாரிலும் "சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்தினின்று பொற்புட னடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி" எனப் பெரியபுராணத்தும் (தில்லை வாழ் அந் 2) வருவன காண்க. உம்பரான் என்பது உம்பரா என விளி ஏற்றது. உம்பரான்- மேலாகிய சிவலோகத்தையுடை யவன் "உருநி லவு மொண் சுடரை உம்பரானை" (தே. நாவு 294:6) தன்னொப்பாரில்லாத பரம்பொருளே தன்னை ஆளாகக் கொண்டான். என்பார் "என்னை ஆளுடை யொருவ" என்றார்.

எம்பிரான், வானத்தவரவரேறு, மங்கை கூற, வெண்ணீற, செம்பிரான், திருச்சிற்றம்பலவ, உம்பரா, ஆளுடை யொருவ என இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றி என வணக்கம் தெரிவித்தமையால், "உடலிது களைந்திட்டு ஒல்லை யும்பர் தந்தருள்" (சத 64) என்பது அவாய் நிலையான் வருவித்துரைக்கப்பட்டது.

இதன்கண், இறைவனை முன்னிலைப்படுத்தி போற்றி என வணக்கம் தெரிவித்தமை கொண்டு, அவாய் நிலையான் வருவிக்கப்பட்ட உடலிது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருள் என்பதனால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 67.

72. **ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்**
**குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி**
**வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி**
**தருக நின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.**

**ப-ரை:**

ஒருவனே போற்றி- தனி முதல்வனே நினக்கு வணக்கம்; ஒப்பு இல் அப்பனே போற்றி- தனக்கு யாரும் நிகரில்லாத தந்தையே நினக்கு வணக்கம்; வானோர் குருவனே போற்றி- தேவர்களுக்கும் குருவாயுள்ளவனே நினக்கு வணக்கம்; எங்கள் கோமள கொழுந்து போற்றி- அடியேங்களது மென்மையான இளந்தளிர் போன்றவனே நினக்கு வணக்கம்; என்னை வருக என்று நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி- அடியேனை இங்கே வருகவென்று அழைத்து நின் பக்கலில் இழுத்துக் கொள்ளுதல் வேண்டும்; நினக்கு வணக்கம். தமியனேன் தனிமை

*சிறு துணிவு இல்லாததால் உலகில் பல திறமைகள் சிதறிப்போகின்றன.*

தீர்த்து நின் பாதம் தருக போற்றி- நின்னைப் பிரிந்த துணையில்லாதேனது பிரிவுத் துயரை ஒழித்து நின் திருவடியைத் தந்தருள வேண்டும்! நினக்கு வணக்கம்.

ஒருவனே நினக்கு வணக்கம்; தனக்கு யாவரும் நிகரில்லாத தந்தையே நினக்கு வணக்கம்; தேவர்களுக்கும் குருவாயுள்ளவனே நினக்கு வணக்கம்; கோமளக் கொழுந்து போன்றவனே நினக்கு வணக்கம்; அடியேனை இங்கே வருக என்று அழைத்து நின்பக்கலில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்; நினக்கு வணக்கம்; நின்னைப் பிரிந்த தமியேனது பிரிவுத் துயரை ஒழித்து நின் திருவடியைத் தந்தருள வேண்டும்; நினக்கு வணக்கம் என்பதாம்.

ஒருவன்- இரண்டாமவன் இல்லாதவன்; முழுமுதல்வன் என்றவாறு. "ஒருவனாய் நின்ற பெம்மான்" (ஞான 315:9) "தெளிவார்க்கெலாம் ஒருவனே", "ஒருவனாகி நின்றான் இவ்வுலகெலாம்", "உலகுக் கொருவனே" (நாவு 126:5; 210:11; 245:4) எனத் தேவாரத்து வருவன காண்க. "ஒப்பில்" என்னும் அடையை ஒருவன் என்பதனோடும் கூட்டுக. "ஒப்பொருவர் இல்லாத ஒருவன் (தே.நாவு 247:9) என வருதலுங் காண்க. அப்பன்- தந்தை. "தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தையாகி" (தே. நாவு 260:2) ஒப்பில் அப்பனே என்றார், உடலைப் பாதுகாக்கும் உலகியல் தந்தை போலாது பிறர் எவராலும் அளித்தற்கரிய வீடுபேற்றினை யளிக்கும் தந்தையாதல் பற்றி.

குருவன்- குருவாயுள்ளவன். "குருவனே யடியேனைக் குறிக்கொளே" (நாவு 127:5) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. பக்குவ முதிர்ந்த மக்களுக்கே யன்றித் தேவர்களுக்கும் குருவாயுள்ளவன் இறைவனாதல் பற்றி, "வானோர் குருவனே" என்றார். ஒருவனே என்பது எதுகை நோக்கிக் குருவனே என்றாயிற்று. கோமளம்- மென்மை; இளமையுமாம். கொழுந்து போன்றவனைக் கொழுந்து என்றார். ஆள்வதற்குரியவன் விரைமலர்த்திருப்பாதம் முற்றிலா விளந் தளிர் கோமளக் கொழுந்து என்பதற்கு அழகிய தீபச்சுடர் போன்றவன் எனினுமாம் ஈண்டு சுடர் சிவலிங்க வடிவினைக் குறிக்கும்.

வாங்குதல்- இழுத்தல் "கைபுனை வேழம், புரிபுனை பூங்கயிற்றிற்பைய வாங்கி" (கலி 80:6-7) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வாங்குதல் வேண்டும்- பாசபந்தத்தினின்றும் பிறவித் துன்பத்தினின்றும் இழுத்து நீக்குதல் வேண்டும். பாச பந்தத்தினின்றும் பிறவித் துன்பத்தினின்றும் நீங்குதற்கருமை தோன்ற "வாங்கிட வேண்டும்" என்றார். இனி நின்பால் வாங்கிட வேண்டும் என்பதற்கு நின்னிடத்து அணைத்துக்கொள்ளல் வேண்டும் எனினுமாம். வாங்கிட வேண்டும் என்பது வாங்கியருளி என எச்சப் பொருட்டாய் நின் பாதந் தருக என்பத னோடு முடியும். நின்பாதம் தருக என மாறிக் கூட்டுக. திருவடியைத் தந்தருள்க என அடிகள் வேண்டுதலை,

"தனியார் பாதம் வந்தொல்லை தாராய்" சத 89

"தணியா தொல்லை வந்தருளித் தளிர் பொற்பாதந் தாராயே" பிரார்த்8.

எனப் பிறாண்டு வருவனவற்றாலுமறிக. தமியனேன் என்பதற்கு உணர்விழந்த யான் எனினுமமையும். தனிமை என்றது இறைவனைப் பிரிந்தமையாலுளதாகும் துன்பத்தை.

இதன்கண், "நின்பால் வாங்கிட வேண்டும்", "தருக நின் பாதம்" என்பவற்றால் இறைவன் திருவருளைப் பெற இரங்குதலில் பெறப்படுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 68

(தொடரும்...

*வறுமை இனிய பண்புக்குச் சோதனைக் கருவி.*

# மனிதனின் ஆன்மீகத் தேவைகள்

– **திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

சமயம், மனிதனின் ஆன்மீகத் தேவைகளையும், ஒழுக்கத் தேவைகளையும் நிறைவு செய்துகொள்வதற்கு அவனுக்குத் துணையாக உள்ளது. இறை நம்பிக்கை, இறைபக்தி, இறைநாட்டம், இறைவனை அடைதல் என்பன பற்றிய விளக்கமும், தெளிவும் பெறுதலும்; அவ்வவற்றிற்குரிய வழிமுறைகளைத் தெரிந்து கொள்ளலும் ஆன்மீகத் தேவைகளாக உள்ளன. மனிதன் தான் வாழும் சமூகத்தில் தனது பங்கு என்ன? கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள் யாவை; தனது நடத்தைகளை நல்வழிப்படுத்துதல் எங்ஙனம்? ஒழுக்கங்களை நல்லொழுக்கங்களாக மாற்றுதல் எவ்வாறு? மனிதப் பண்புகள், விழுமியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், சமூகத்தினரிடையே பரஸ்பர மனித உறவுகளை ஏற்படுத்தி உயர்வான வாழ்வினை வாழ்வாங்கு வாழ்வது எப்படி? போன்ற வினாக்கள் பலவற்றிற்கு விடை காணவேண்டிய தேவை மனிதனுக்கு உள்ளது. இந்தத் தேவையையே மனிதனின் ஒழுக்கத் தேவை எனக் கூறப்படுகிறது. இந்த வினாக்களுக்கு விடை தேடும் முயற்சியில் மனிதனுக்குச் சமயம் உதவுவதோடு, விடைகளையும் தருகின்றது.

மனித நாகரிக வரலாற்றின் ஆரம்பம் தொடக்கம் இற்றைநாள் வரை, மனிதனுக்குத் தேவையான ஆன்மீக வழிகாட்டலுக்கும்; வாழ்க்கை ஒழுக்க வழிகாட்டலுக்கும், சமயத்தையே நாடி வருபவன் மனிதன். சமயத்திற்கு மாற்றீடாக அதன் பணிகளை ஆற்றுவதற்கு, மற்றொரு சாதனம் மனிதனால் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. சமயம் என்பது வாழ்க்கை நெறி அல்லது வாழ்க்கைப் பாதை என்று கொண்டு சமயம் காட்டும் பாதையில் செல்பவர்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெறுகின்றனர். சமயம் பாதை அன்று; அது போதை என்போரும் ஒரு சாரார் உளர். அவ்வாறு சமயத்தைப் புறக்கணித்தவர்கள் வாழ மறுத்தவர்கள் ஆகின்றனர். அதற்குச் சரித்திரச் சான்றுகள் உண்டு.

சமயத்தை, மனித வாழ்க்கையோடு தொடர்புபடுத்துவதன்மூலம் மனிதனுக்கு ஆன்மீகப் பாதுகாப்பு, உளப் பாதுகாப்பு, ஒழுக்கப் பாதுகாப்பு, பண்பாட்டுப் பாதுகாப்பு ஆகியன உறுதியாகி விடுகின்றன. இதிலிருந்து பிறக்கின்ற இன்னொரு கருத்து, சமயஞ் சாராத, சமய நெறியில் செல்லாத மனித வாழ்க்கை பாதுகாப்பு அற்றது என்பதாகும். தனியாள் நல்லொழுக்கமுடையவராக மாற்றம் பெறும் அளவுக்கு சமூகமும் ஒழுக்கமுடையதாக மாற்றம் பெறும் என்பது சமயம் தரும் கருத்து. சைவ சமயம் இக்கருத்தை நன்கு ஆதரிக்கின்றது. சைவநெறி மனிதர்கள் செவ்வையான, சீரான வாழ்க்கையை வாழ்வதன் மூலமே இறைவனை அடையமுடியும் என வலியுறுத்துகிறது.

சைவம் ஒரு வாழ்க்கை நெறி. எல்லோரும் உத்தமர்களாக, உயர்ந்தவர்களாக இவ்வுலகில் வாழவேண்டும் என்பது சைவத்தின் குறிக்கோள். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பது சைவத் தமிழ்க் கருத்து. மனிதப் பிறவி, பிறப்பினால் உயர்வானது என்பதில் சந்தேகமில்லை. பிறப்பினால் உயர்வாகக் கொள்ளப்படுகின்ற மனித இனம், ஏனைய விலங்கினங்கள் போன்ற தாழ்ந்த உயிர

*உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடைசெய்துவிட முடியாது.*

இனங்களின் கீழ்நிலைக்கு இறங்கித் தன் உயர்நிலையைக் கெடுத்துக்கொள்ளாதபடி, பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதற்கு மானுடப் பண்புகளை வளர்த்து அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, உத்தமர் களாகத் திகழும்போதுதான் உலகம் என்கின்ற உயர்ந்தோர் குழாத்தில் சேர்ந்து கொள்ளக் கூடிய தகுதியையும், தகைமையையும் பெறு கிறார்கள். மானுடம் பண்பு சார்ந்தது. அது மனித உரிமை. எப்பொழுது மனிதன் மானுடத் தைக் கைநழுவ விடுகின்றானோ, அதாவது தனது உரிமையை இழக்கின்றானோ, அப் பொழுது அவன் மனிதனாக வாழ மறுக்கின் றான். அவன் விலங்காகி விடுகின்றான். எனவே, மானுடம் என்னும் மனித உரிமை மனிதனால் பேணப்படும்போது, மனிதன் மனிதன் ஆகின் றான்; உத்தம மனிதன் ஆகின்றான்; உயர்ந்த உத்தம மனிதன் ஆகின்றான். "உலகம் என் பது உயர்ந்தோர் மாட்டு" எனும் சைவத் தமிழ்க் கருத்து இப்பொழுது புரிகிறதல்லவா?

இந்த உயர்ந்தவர்கள், மானுடத்தை அறிந்து கொண்டமையால் மாத்திரம், உயர்ந்த வர்களாகி விடவில்லை. அந்த உயர் மானு டத்தை, நல்லொழுக்கங்களாகவும், நண்டைத்தை களாகவும் மாற்றி, வாழ்க்கையில் நடந்து காட்டியமையினாலேயே உயர்ந்தோர் ஆயினர் என்பது ஆழ்ந்து நோக்கற்பாலது. "மானுடம் வென்றதம்மா" என்பது கம்பநாடார் கூற்று.

உயர்ந்தன எல்லாவற்றிற்கும் ஒரு மரபு உண்டு என்று பெரியோர் கூறுவர். மானு டம் உயர்ந்தது; அதற்கும் மரபு உண்டு. அதுவே சைவ சமய மரபாக வளர்ந்துள்ளது. சைவசமய மரபு உண்டு. அதுவே சைவ சமய மரபாக வளர்ந்துள்ளது. சைவசமய மரபு தெய்வீகம் நோக்கியது; மானுடம் தழுவியது. எனவே, சைவசமயம் முழுமையான நெறி ஆகும். மானுடத்தைப் புறக்கணித்துவிட்டு, ஒருபோதும் இறைவனை அடைய முடியாது; அதேவேளை இறைசிந்தனை இல்லாத மானு டம், மானுடமாகாது. சைவசமயம் வளர்த்து வருகின்ற மரபு இந்த அடிப்படையிலானது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் அத னால்த்தான் சைவ மரபு, வாழும் மரபாகத் தொன்றுதொட்டு இன்றும் வாழ்ந்து வருகிறது.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்.

## வருடாந்த
## திருவாசக விழா - 2018

வழமைபோன்று வருடா வருடம் நடைபெற்றுவரும் திருவாசக விழா 21.12.2018 வெள்ளிக்கிழமை காலை 09.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

விசேட நிகழ்வாக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ச. விநாயகமூர்த்தி அவர்களின் "எங்குப் புகுவேனோ" எனும் சிறப்புச் சொற்பொழிவும் திருவாசகப் பண்ணிசையோடு கூடிய முருகநாம பஜனையும் அடியார்களால் நிகழ்த்தப்படும்.

வழமைபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நாயன்மார்களது திருவுருவப்படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக ஆச்சிரம மண்டபத்திற்கு திருவாசக பாராயணத்துடன் எடுத்துவரப்படும்.

*களங்கமற்ற மனது மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*

[தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## [விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 85. ஊன நடனத்தால் பாசநிலை நீங்காமை

மால்ஆர் திரோதம் மலம் முதலா மாறுமோ
மேலா சி மீளா விடின்.

**பொருள்:**

மயக்கம் பொருந்திய திரோதான சக்தியைக் குறிக்கின்ற நகாரமும், ஆணவ மலத்தைக் குறிக்கின்ற மகாரமும் முதலாய் நிற்க, சிவத்தைக் குறிக்கின்ற சிகாரம் முதலாகும் படி மீளுதல் இல்லையென்றால் பாசநிலை நீங்குமோ? நீங்காது.

**சொற்பொருள்:**

(திருவைந்தெழுத்தை ஓதும் முறையில்) சி- சிவத்தைக் குறிக்கின்ற சிகாரம், மேலா- முதலாய் நிற்கும் வகையில், மீளா விடின்- முறை மாறாமல் உள்ள தாயின், மால் ஆர் திரோதம், மலம்- மயக்கம் நிறைந்த திரோதான சத்தியைக் குறிக்கின்ற நகாரமும், ஆணவ மலத்தைக் குறிக்கின்ற மகாரமும், முதலா- முதலாய் நிற்பதால், மாறுமோ- மலம் முதலிய பாசங்கள் நீங்குமோ? அவை நீங்காவாம்.

**விளக்கம்:**

நமசிவாய எனப் பாச எழுத்துக்களாகிய நம முற்பட்டு நிற்க ஓதிவரின் பாசநிலை நீங்காது. முற்பட்டு நிற்பதே தலைமைப் பொருளாகும். அதன் பின் நிற்பது அடிமைப் பொருளாகும். அம்முறையில் பாசங்களே முற்பட்டு நிற்க, உயிர் அவற்றின் பின் நின்றால் உயிர் பாசங்களுக்கு அடிமைப்பட்டதாய் அவற்றினின்றும் மீள இயலாது. ஆதலால் பாசங்களின் வழிப்பட்ட இந்நிலை மாறவேண்டும்.

சிகாரத்தை முதலாகக் கொண்டு சிவாய நம என ஓதிவரின், சிவமும் அருளும் முன் நிற்க, உயிர் அவற்றின் பின் நிற்பதாய் அமையும். இங்ஙனம் சிவமும் அருளும் தலைமைப் பொருளாய் முன் நிற்க, உயிர் அவற்றிற்கு அடிமைப்பட்டு அவற்றின் வழி நின்று பாசம் நீங்கப் பெறும். இதனை வலியுறுத்தி,

"நம் முதலா ஓதில் அருள் நாடாது; நாடும் அருள்
சிம் முதலா ஓதுநீ சென்று"

என உண்மை விளக்கம் கூறுவதும் அறியத்தக்கது.

*பெற்றுக்கொள்பவன் அல்ல; கொடுப்பவனே பேறு பெற்றவன்.*

இதனால் ஊன நடனத்தின் வழி நிற்பின் பாசம் நீங்காது என்பதும், ஞான நடனத்தின் வழி நிற்றல் வேண்டும் என்பதும் கூறப்பட்டது.

இச்செய்யுளால், பஞ்சாக்கரத்தின் வகைமையையறியலாம். நகாரம் முதலாக அமைவது தூல பஞ்சாக்கரம் எனப்படும். சிகாரம் முதலாக அமைவது சூக்கும பஞ்சாக்கரம் எனப்படும்.

### ௬௬. உலகப் பற்று இரங்கத்தக்கது

ஆராதி ஆதாரம்; அந்தோ! அது மீண்டு
பாராது மேலோதும் பற்று.

**பொருள்:**

விசேடதீக்கை பெற்ற மாணவனே, நீ எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் உள்ள சிவத்தை வழிபடு. (அஃதாவது, சிகாரத்தை முதலாக வைத்துத் திருவைந்தெழுத்தை ஓது). அவ்வாறு சிகாரம் முதலாக மீளுமாறு ஓதாமல் மேலும் மேலும் நகாரத்தை முற்படக் கொண்டு ஓதுவதற்கு ஏதுவாகிய உலகப் பற்று, அந்தோ! மிகவும் இரங்கத்தக்கது.

**சொற்பொருள்:**

ஆதாரம்- (விசேடதீக்கை பெற்றுக்கிரியை நெறியில் நிற்கும் மாணவனே) அனைத்துப் பொருளுக்கும் ஆதாரமாய் உள்ள சிவத்தை, ஆராதி- நீ வழிபடுவாயாக. (அஃதாவது, சிகாரத்தை முற்பட வைத்துத் திருவைந்தெழுத்தை ஓதுக.) அது சிகாரம், மீண்டு- முதலெழுத்தாக மீளுமாறு வைத்து ஓதுதலை, பாராது- கருதாமல், மேல்- முன் போலவே, ஓதும்- நகாரத்தை முற்பட வைத்து ஓதுதற்குக் காரணமாகிய, பற்று- உலகப் பற்று, அந்தோ- ஐயோ! (பெரிதும் இரங்கத்தக்கது.)

**விளக்கம்:**

(மாணவனே) ஆதாரம் ஆராதி; அது (முதலாக) மீளப் பாராது மேல் ஓதும் பற்று, அந்தோ; (இரங்கத்தக்கது) என வேண்டும் சொற்களை வருவித்து அமைத்துக் கொண்டால் பொருள் நன்கு விளங்கும்.

உலகப் பற்றை விட விரும்பாதவர் முதலில் சமய தீக்கை பெற்றுத் திருவைந்தெழுத்தை நகாரம் முதலாகக் கொண்டு உச்சரித்தற்கு உரியர். அங்ஙனம் ஓதி வரவர, உலகப் பற்றும் ஓரளவு நீங்கிவரும். அந்நிலையில் அவர் விசேட தீக்கை பெற்றுத் திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாகக் கொண்டு உச்சரித்தற்கு உரியர். சிகாரம் முதலாகிய திருவைந்தெழுத்து பற்றினைவிட விரும்புவோர் ஓதுதற்குரியது.

இத்தகைய விசேடதீக்கை பெற்றும் சிகாரம் முதலாக ஓதும் முறைமையை நோக்காமல், நிட்காமியமாக வழிபாட்டினைச் செய்யாமல், உலகப் பயனில் பற்று நீங்காமல் நிற்கும் மாணவரை நோக்கியே இச்செய்யுளைக் கூறுகின்றார் ஆசிரியர்.

நம என்னும் எழுத்துக்கள் ஊன நடனத்தைக் குறிப்பன எனப் பார்த்தோம். நகாரம் முதலாக ஓதி ஊன நடனத்தின் வழி நின்றால் அது பிறவி நீங்குதற்கு வழியாகாது. சிகாரம் முதலாக ஓதுதலே ஞான நடனத்தின் வழி நிற்றலாகும். சிகாரம் முதலாக ஓத முயலாமல், உலகியலில் பற்று நீங்காமல் இருப்பது இரங்கத்தக்கது என்கிறார் ஆசிரியர்.

(தொடரும்...

*எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக்கூடாது.*

# திருவாலவாயான் திருநீறு

– **திரு கு. சிவபாலராஜா** அவர்கள் –

திரு ஆலவாய் என்பது திருவாலவாய் ஆயிற்று. இது மதுரைக்குரியதொரு வேறு பெயராகும். இங்கு ஆட்சி புரிந்த வம்மிச சேகர பாண்டியன் காலத்தில், மக்கள் வசிப் பதற்கு இடம் போதாத நிலை காணப்பட்டமை யால், அவன் சிவபெருமானை வேண்டினான். அவனது வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான், தனது திருக்கரத்தில் அணிந்துள்ள பாம்பை, இந் நகரத்திற்கு எல்லையைக் காட்டுமாறு பணிக்க, பாம்பு தன் வாலும், வாயும் ஒன்று படும்படி வட்டமாக வளைத்துக் காட்டியமை யால் திருவாலவாய் எனப் பெயர் பெற்றது. திருவாலவாய் என்பதற்கு வேறு பெயர்களாக, நான்மாடக் கூடல், கடம்பவனம், பூலோக கைலாயம், சிவராசதானி, துவாத சாந்தத் தலம் என்பன. மதுரையில் இத்தலம் அமைந்துள்ளது. மதுரைக்கு கிழக்குத் திசை யில் குறுகிய தூரத்தில், வைகை ஆற்றின் தென் பகுதியில் அமைந்துள்ள தலமாகும். இங்குள்ள இறைவனின் திருப்பெயர் சொக்க லிங்கப் பெருமான். இறைவியாரின் திருப்பெயர் அங்கையற்கண்ணி. வடமொழியில் மீனாட்சி தேவி என்பர். தலவிருட்சம் கடம்பு. தீர்த்தம் பொற்றாமரை, வைகை ஆறு, கடல் திருஞான சம்பந்தப் பெருமான் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவத்தைப் பாண்டி நாட்டில் நிலை பெறச் செய்த பதி. மேலும், சம்பந்தப்பெரு மானார் இத்தலத்தில் மங்கையற்கரசியாரை நோக்கி "உம்மைக் காண வந்தனம்" என்று கூறியதோடு, அவரை நேரில் கண்டு பாடியருளி னார்கள். அதனால் மங்கையர்க்கரசியார் பெருஞ் சிறப்புப் பெற்றார். மங்கையர்க்கரசி யாரை உமாதேவியாரோடும், சிவபிரானோடும் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். குலச்சிறை யாரைக் குறிக்கும்போது சிவபெருமானோடு மாத்திரம் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். இத னால் மங்கையர்க்கரசியார் தம் கணவரோடு வாழவேண்டுமென்று ஞானசம்பந்தர் திரு வுளம் கொண்டதுபோலத் தெரிகிறது. மங்கை யர்க்கரசியார் திருநீறு அணிந்திருந்தமை "முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு நீறுந்தன் மார்பினின் முயங்கப் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி" என்னும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய தேவாரப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

பாண்டிய மன்னனின் வெப்புநோய் தீர வேண்டுமானால் சம்பந்தப்பெருமானாரின் அருட் பார்வை கிடைக்கவேண்டுமென குலச்சிறையார் கூறியதுமே மன்னனின் வெப்பு நோய் சற்றுத் தணிந்தது, போலாயிற்று. எனவே சம்பந்தரை அழைத்துவர மன்னன் ஆவன செய்தான். அமைச்சர் முதலியோர் சம்பந்தரிடம் சென்று எழுந்தருளுமாறு வேண்டினர். திருவுளம் பற் றிய பிள்ளையார் அவர்கள் எழுந்தருளினார். பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீர திரு நீற்றுப் பதிகம் பாடியருளினார். இதனால் வெப்பு நோயும் குணமாகியது.

"மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு" எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகங்கள் பத்து சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்றது. மந்திரம்- என்பது நினைத்தவற்றைத் தருவது எனப் பொருள்படும். மந்திரம்- நினைத்தவரைக்

*உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்.*

காக்கும் சக்தி படைத்தது. ஆகவே, பாண்டிய மன்னவனின் நோய் தீர்ப்பதற்கான முதல் மந்திரமாக இது விளங்கியது. சிவலோகத்தில் உள்ளவர்களது திருமேனியில் எப்போதும் பூசப்பெற்றது திருநீறாகும். திருநீறு பூசியோர் முகமும், உடலும் அழகு மிக்கதாகத் தோற்றம் அளிக்கும். சிவபிரானை துதிக்கும் இப்பதிகம் திருநீற்றுப் பதிகத்தில் முதலாவது பதிகம் ஆகும். சிவ சமயத்தில் அழியாத பொருள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள். பசு- உயிர். எனவே, உயிரின் கண் இருந்து வரும் பாசங்களை பதி நீறாக்கி அருளினார். இந்த உண்மையை உணர்த்துவது திருநீறு.

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.**

-"திருவாலவாயான் திருநீறு"-

என்பது ஆறாதாரங்களை முறைப்படி அறிந்து கடைப்பிடிப்பவர்களுக்கு திருநீறே சிவகதி தரும் என்னும் உண்மையை சைவ சமயம் எடுத்தியம்பும். ஆறாதாரங்கள் என்பவை- மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அனாகதம், ஆஞ்ஞை என்பனவாம். "சிவவேடம்" பற்றிக் கூறிய திருமூலர் தனது திருமந்திரத்தில் திருநீறு பற்றிக் கூறும்போது,

**கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை**
**மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்**
**தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி**
**சிங்காரமான திருவடி சேர்வரே.**

யாவரேனும் எலும்புக்கூட்டைத் தன் தோளில் சுமக்கும் சிவபெருமான் பூசுவதும், அணிந்தோர் யாவர்க்கும் கவசமாய் நிற்பதும் ஆகிய திருநீற்றை, அதன் வெள் ஒளி விளங்குமாறு பூசி மகிழ்ச்சியுறுவராயின், அவரிடத்து வினைகள் தங்கியிருக்காது. சிவகதி கூடும். சிவனது அழகிய திருவடியையும் அவர் அடைவர்.

**அரசுடன் ஆலத்தி ஆகும் அக்காரம்**
**விரவு கனலில் வியன் உருமாறி**
**நிரவிய நின் மலந்தான் பெற்ற நீத**
**ருருவம் பிரம உயர் குலமாமே.**

என்பது திருமந்திரம்.

பிறப்பால் உயர்ந்தோராகிய அந்தணர் உயர்வாக மதிக்கப்படுவதற்கு காரணமாய் அமைவது திருநீற்றினாலேதான் என்பது இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது. திருநீற்றை பூசாதவர் கடவுளை உணரமாட்டார். அரசு முதலிய சமித்துக்கள் சேர்த்து ஓம குண்டத்தில் மூட்டப்பட்ட சிவாக்கினியில் நன்கு வெந்து சாம்பரான பசுச்சாணமானது, தனது முன்னைய நிலை மாறி அமைந்த திருநீற்றை உடல் முழுவதும் பூசி தூய்மைப்படுத்திய நலலோரது உடம்பே பிரமஞானத்தையடையும் உயர்ந்த குலத்தினராகிய அந்தணர்களாம். பசுவினது சாணமே ஆலத்தி எனவும் ஆப்பி எனவும் கூறப்படும். தக்க பசுவின் சாணமானது, தக்க வகையில் பெறப்பட்டு, சிவ சிவ மந்திரத்தை யாவது உச்சரித்துக்கொண்டு, கோசலம் கொண்டு பிசைந்து உலர்த்திச் சிவ வேள்வியில் இட்டுப் பெற்றதே உண்மையான திருநீறாகும்.

பிறப்பால் அந்தணர் பிரமகுலமாகார். அவர்தம் உடல் முழுவதும் திருநீற்றைப் பூசினால் ஒழிய அவர்தம் உயர்வு அவர்களுக்கு கிடைக்காது. திருநீறு வேறு பெயர்களாலும் அழைக்கப்படும். அவை க்ஷாயம், சாம்பல், சுடலைப் பொடி என்பன திருநீற்றை "சாம்பல்" என ஒதுக்குவோர் அது அவர்களுக்கு கிடைத்த சாபக்கேடாகும். கற்பம் என்பதும், அநுகற்பம் என்பதும், உப கற்பம் என்பதும் திருநீற்றையே சிறப்பாகக் குறிக்கும்.

"**கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல்லாடை**"

என்பது திருச்சாழல்.

"**பூசுவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கரவம்**"

என்பதும் திருச்சாழல்.

*அஞ்சாமையைவிட நேர்மையாக இருத்தலே அழகானது.*

"நீறாவது இறைவனது திருவருளே"

"தவ வேட்கையுடையோர் யாவர்க்கும் முதற் சாதனமாவது திருநீறணிதல்"

-திருமந்திரம்.

"அகத்து நீறணி" என்பது திருமந்திரம். உடல் முழுவதும் நீறணிதல் வேண்டும். அதுவே தவ வேடமாகும். அது மட்டுமன்றி. தன்னை வணங்குவோர் அனைவர்க்கும் திருநீறு வழங்குதல் வேண்டும் என்பது சைவ மரபு அதற்காக திருநீற்றுப் பை வைத்திருத்தல் தவ வேடமாகும்.

"தவமும் தவமுடையார்க் காகும் அவம்
அதனை அஃதிலார் மேற் கொள்வது"

-குறள்.

திருநீற்றினை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும், தரிக்கவேண்டிய உடலின் பகுதிகளில் தரிக்கலாம். இதனால் ஆணவம், கன்மம், மாயை மலங்களை வேரறுக்கும். சைவ நாயன்மார்கள் வரிசையில் மெய்ப்பொருள் நாயனார் ஏனாதி நாயனார் இருவரும் சிவ வேடமே மெய்ப்பொருள் எனப் போற்றி நீறணிந்த நெற்றிதனைக் கண்டவிடத்து தம் படைக்கலன்களைத் தூக்கி எறிந்துவிட்டு போரில் தோற்று வெளியேறி காயமடைந்து பின் இறந்துபட்டனர். ஏனாதி நாதரை அதிசூரன் வெற்றி கொள்வதற்கு, அவனது நீறணிந்த நெற்றியே ஈற்றில் காரணமாகியது. -கந்தபுராணம்-

அனந்தன் சாபம் நீங்கு படலத்தில் ஒரு பாடல் திருநீற்றின் மகிமையை உரைக்கும்.

பேசரிய மறைகள் எல்லாம் பராபரன் நீ என வணங்கிப்
பெரிதும் போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றொடு கண்டிகையினையும்
இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும் பிறந் திறந்து
கதியுறாது
பாசமதி னிடைப்பட்டு மறையுரையா நெறியதனிற்
படுதி ரென்றான்.

அணிந்தோரை அழகுபடுத்துவது திருநீறு. பார்ப்பவர்களுக்கெல்லாம் அழகாகக் காட்சி தருவதும், அணிவோர்க்கு சிவப்பொலிவு தருவதும் திருநீறு. தவம் செய்வோர் அணிய வேண்டியது திருநீறு. அவர்கள் அவ்வாறு அணிந்தால் அவர்களது வாழ்க்கைப் பற்றுக்கள் அறுந்துபோகும். திருநீற்றின் அருமை பெருமைகளை நாம் பேசிக்கொண்டிருப்பது மிகவும் இனிமைதரும் செயலாகும். சிறப்பாகச் சொல்லப்போனால் திருநீறானது சைவ மக்கள் அணிவதற்காக சிறப்பித்துக் கூறப்பட்டது. ஆனால் ஏனைய மதத்தினரும் திருநீறணிவது பொருத்தமான செயலாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பொருள் திருநீறே. திருநீற்றை அணிந்து பழகினாலன்றி அதன் பயனையடைவது அரிது. திரிலோக சஞ்சாரியான இராவணன் எப்போதும் அணிந்திருப்பது திருநீறு. அவன் பெரும் செல்வந்தனாக இருந்தும் தன் செல்வத்தை மதித்தும் திருநீற்றை மதித்தும் அதை எப்போதும் அணிந்திருப்பான். அதனால் சிவபெருமானின் அருளைப் பெற்றான். இந்த உண்மையை நன்மக்கள் யாவரும் எண்ணத்தில் கொள்ளல் வேண்டும். வீடுபேற்றினை அளிக்கும் திருநீற்றினை நாம் அணிதல் வேண்டும். திருநீறானது பராசக்தி சொரூபமானது. இதனால் உயிர்களின் பாவம் களையப்படும்.

*கல்வி என்பது வளமையில் ஒரு ஆபரணம். வறுமையில் ஒரு புகலிடம்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள் (தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## கட்டுண்ட கிருஷ்ணன்

ஒருநாள் யசோதை தயிர் கடைந்து கொண்டிருந்தாள். முத்துப்போன்று வியர்வை துளிர்க்க, கூந்தல் அவிழ, மலர்கள் கீழே சிதற கடைந்து கொண்டிருந்த அவளிடம் கிருஷ்ணர் வந்தார். அவருக்குப் பாலருந்த வேண்டும். மத்தைக் கையால் பிடித்துக்கொண்டு அவளைக் கடையவிடாமல் தடுத்தார். அவளும் சிரித்தபடியே கடைவதை விட்டுவிட்டு, கிருஷ்ணரை மடியிலேந்தி பாலருந்தக் கொடுத்தாள். அவர் பால் குடித்துக்கொண்டிருக்கும் போது, அடுப்பில் வைத்த பால் பொங்குவதைக் கண்டு, குழந்தையை அவசரமாக கீழே இறக்கிவிட்டு அடுப்பருகில் விரைந்தாள். கிருஷ்ணருக்கோ கோபம். அம்மிக் குழவியை எடுத்துத் தயிர்ப்பானையை உடைத்துவிட்டு, கண்களில் பொய்க் கண்ணீர் வழிய உள்ளே ஓடி, மறைத்து வைத்திருந்த வெண்ணெயை எடுத்து ஓரிடத்தில் போய் உட்கார்ந்து உண்ணத் தொடங்கினார்.

பாலை இறக்கி வைத்துவிட்டு வந்தாள் யசோதை. தயிர்ப்பானை உடைந்து கிடந்தது. கிருஷ்ணன் வேலைதானென்று, கிருஷ்ணனைத் தேடிக் கொண்டு வந்தாள். கிருஷ்ணன் திருடிய



வெண்ணெயை தானும் உண்டு குரங்குகளுக்கும் போட்டுக் கொண்டு இருந்தான். தன்னை யாரும் பார்க்கிறார்களோ என்று கண்களைச் சுழற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

கிருஷ்ணரின் குறும்புகள் அதிகமாகிவிட்டன. கொஞ்சம் அடக்கி வைக்க வேண்டுமென யசோதை ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு போனாள். கிருஷ்ணர் தாயைக் கண்டு விட்டார். உரலிலிருந்து இறங்கிப் பயந்தவன் போல் ஓடினான். யசோதை பின் தொடர்ந்து ஓடினாள். பிள்ளையின் ஓட்டமும் அன்னையின் ஓட்டமும் ஒரு முடிவுக்கு வந்தபாடாயில்லை.

*துன்பத்தைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.*

யசோதைக்கு ஓடியதில் மூச்சுவாங்கி களைத்துவிட்டாள். ஒரு வழியாகத் தாவிப் பிடித்துவிட்டாள். கிருஷ்ணர் மைதீட்டிய கண்களைக் கசக்கிக்கொண்டு அழுததில் முகத்தில் மை வழிய, மிகவும் நடுங்கிப் போன பாவனையில் கண்களை மலங்க மலங்க விழித்தான். யசோதைக்கு பாவமாகப் போய்விட்டது. பிரம்பை எறிந்துவிட்டு, "இரு, உன்னைக் கட்டிப்போடுகிறேன் பார்" என்று கயிறு எடுத்து உரலில் ஒரு முனையைக் கட்டி, மறு முனையால் கிருஷ்ணனைக் கட்ட வந்தாள். இரண்டு அங்குலம் கயிறு குறைவாக இருந்தது. வேறு கயிறு எடுத்து அந்தக் கயிற்றோடு இணைத்து கட்ட முயல அப்போதும் இரண்டங்குலம் குறைவாகவே இருந்தது. இப்படி திரும்பத் திரும்ப எத்தனை கயிறு கொண்டு வந்தும் கட்ட முடியவில்லை. வியர்த்து சோர்ந்துபோன அன்னையைக் கண்டதும் கிருஷ்ணன் இரங்கி அவள் விருப்பம்போல் உரலோடு கட்டுண்டான்.

பகவான்மீது உள்ளம் வசப்பட்டிருக்கும் பக்தர்களுக்கு தான் வசப்பட்டிருப்பதை இந்த லீலையால் காட்டினார். யசோதை பெற்ற பாக்கியம் பிரம்மதேவரும் பெறவில்லை. சிவபிரானும் பெறவில்லை. ஏன் பகவான் சரீரத்திலே வாசம் செய்யும் லக்சுமிபிராட்டியும் பெறவில்லை.

**என்ன தவம் செய்தனை யசோதா எங்கும் நிறைப் பரப்பிரம்மம்**
**அம்மா என்றழைக்க என்னதவம் செய்தனை**
**ஈரேழு புவனங்கள் படைத்தவனை கையிலேந்தி**
**சீராட்டி பாலூட்டி தாலாட்ட (என்ன தவம்)**
**பிரம்மனும் இந்திரனும் மனதில் பொறாமை கொள்ள**
**உரலில் கட்டி வாய் பொத்தி கெஞ்ச வைத்தாய் கண்ணனை (என்ன தவம்)**
**சனாகாதியர் தவயோகம் செய்து சாதித்ததைப்**
**புனிதமாகப் பெற (என்ன தவம்)**

ஸ்ரீ கிருஷ்ணருடைய பாலலீலைகளை, பெற்றவர்களான வசுதேவருக்கும், தேவகிக்கும் அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. அந்த லீலைகளை இன்றும் கவிகள் பாடிப்பரவசமாகிய வாறிருக்கிறார்கள். அந்த லீலைகள் கேட்ட அளவில் உலகத்தாரின் பாவங்களைப் போக்கக் கூடியது. பெற்றோருக்குக் கிட்டாத பெறும்பேறு நந்தகோபருக்கும் யசோதைக்கும் கிட்டியது அவர்கள் செய்த புண்ணியமே.

நந்தகோபர் அஷ்டவசுக்களில் ஒருவரான துரோணர். இவருடைய மனைவி தாரை என்பவள். இவர்கள் பிரம்மதேவனுடைய கட்டளையால் நந்தனாகவும் யசோதையாகவும் பிறந்தார்கள். பகவானிடம் பக்தி ஒன்றையே வரமாகக் கேட்டுப் பெற்றவர்கள். எனவே அவர்களுக்கு கண்ணனை மகனாகப் பெரும்பேறு கிடைத்தது.

கண்ணனுடைய பாலலீலைகளைப் பார்க்க முடியவில்லையே என தேவகிக்கு பெரும் மன வருத்தம். கண்ணா! என்னை உனக்குத் தாய் என்கிறார்கள். உலகிலே உள்ள தாய்மாரில் நான் கடைசியாக இருப்பவள். பாக்கியமில்லாதவள். உன்னைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்ட வில்லை. நீ படுத்திருக்கும் அழகைக் காணவில்லை. உன் இளம்பருவ லீலைகளை நான் அனுபவிக்கவில்லை. உனக்குப் பால் கொடுக்கும் பாக்கியத்தையும் பெறவில்லை. ஒன்றும் கண்டிலப் பெறேன். திருவிலேன். எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே! தேவகி கண்ணனைப் பெற்றும் குழந்தையின் ஜாலங்களைக் காணவில்லை. அந்தப் பேரின்பத்தைப் பெறவில்லை. கண்ணனின் லீலைகளையும், மாயையையும், அவன் அழகையும், குறும்புகளையும்

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*

அனுபவித்து இன்பத்தின் எல்லைக்கே போய்விடுகிறாள் யசோதை. யசோதை செய்த மாதவம் தான் என்னே!

முழுதும் வெண்ணெய் அளைந்தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறு தாமரைக் கையும்
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கும் நிலையும்
வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையும் அஞ்சி நோக்குமந் நோக்கும்
அணி கொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையு மிவை கண்ட அசோதை தொல்லை
இன்பத்திறுதி கண்டாளே.

யாருக்குமே கிடைக்க முடியாத இன்பத்தின் நிறைவல்லவா! எங்கும் நிறைந்த பரம்பொருள் அம்மா என்றழைக்க எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்! தெய்வ நங்கை யசோதா அந்தப் பாக்கியம் பெற்றாள். ஸ்ரீ கிருஷ்ணர் பக்தர்களுக்கு எளிதில் வசப் படக் கூடியவர். பக்தர்களால் அவரை எளிதில் அடைய முடிந்த அளவுக்கு தபசிகளோ, ஞானிகளோ அடையமுடியாது. பகவான் எந்தெந்த அவதாரங்களில் என்னென்ன லீலைகள் செய்தாரோ அவை காதுகளுக்கும், மனதுக்கும் இன்பமளிப்பவை. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய பால லீலைகளைக் கேட்பதால் மனச்சோர்வும், ஆசைகளும் நீங்கி பகவானிடம் பக்தியும், அன்பும் ஏற்படும். பெருமானின் கருணா கடாட்சத்தை எதிர்பார்த்து, பற்றற்று, மனதாலும் வாக் காலும் உடலாலும் அவரை வணங்கி வாழ்பவர்க்கு மோட்சம் கிட்டும்.

"வெண்ணெய்க்காடும் பிள்ளையே வேதனை தீர்க்க வாராயோ
பால், தயிர், வெண்ணெய் திருடிய மாயக்கள்வனே
உனை யன்றி வேறு துணையேது கிருஷ்ணா
வருந்தும் ஏழைமுன் வந்தருளத் தயக்கம் ஏனோ மணிவண்ணா"

(தொடரும்...

---

## ஆன்மீகச் சிந்தனை

உலகத்தில் நடப்பது எதுவுமே மனிதன் தேடிக்கொண்டு அடைவதுதான். முந்தைய பிறவியில் அவன் செய்தவற்றுக்கு இப்போது கஷ்டத்தையோ சௌக்கியத்தையோ அடைகிறான். இந்தப் பிறவியில் அவன் செய்வன அவனுடைய எதிர்காலத்தை அமைக்கிறது. நல்லதோ, கெட்டதோ, அதை உருவாக்கிக்கொள்வதும் நாம்தான். அதை அனுபவிக்க வேண்டியதும் நாம்தான். இதிலிருந்து நாம் தப்பமுடியாது. ஆனால் ஞானம் ஒளிவிடும்போது இதன் அவஸ்தை நம்மைப் பாதிப்பதில்லை. நீங்கள் உங்கள் உள்ளத்தில் ஒளியைக் காண முயலுங்கள். அந்தத் தியானத்திலேயே ஈடுபடுங்கள். உங்கள் மனத்திலேயே இறைவனைப் பார்க்க முயலுவதுதான் மிகச் சிறந்த பூஜை. அவரைத்தேடி வெளியே அலையாதீர்கள். மறு பலனைப் பாராமல் மற்றவர்களிடம் அன்பு காட்டுங்கள். அப்போது அங்கே இறைவன் வெளிப்படுவார். அவரை நீங்கள் உங்கள் உள்ளத்திலேயே அடையாளம் கண்டுகொள்ள அப்போது முடியும். அது உடல், மனம், புத்தி, பிராணன் மற்றும் அன்றாட அலுவல்கள் அனைத்திலும் பரவி இருக்கும்.


*உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்குத் தனிமை என்பதே இல்லை.*

# மகாபாரதத்தில் அரசியல் சிந்தனைகள்

– **திரு செ. பாலச்சந்திரன்** அவர்கள் –

மகாபாரதத்தில் நற்சிந்தனைகள் பலவாறாக தோற்றம் பெற்றுள்ளன. குருஷேத்திர யுத்த களத்தில் பகவத்கீதை, தூது நிலையில் விதுரநீதி, மரணப்படுக்கையில் (சாந்திபர்வம்) பீஷ்மரின் அரசியல் சிந்தனை என மக்களை மாண்புடையவர்களாக்க உதவிய இந்தச் சிந்தனைகள் ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் மகாபாரத இதிகாசத்தின் கருவூலம் என்றால் மிகையல்ல.

பகவத்கீதை எந்த யுத்தகளத்தில் உதயமாகியதோ அதே யுத்தகளத்தில் பீஷ்மாச்சாரியார் மரணப்படுக்கையில் இருந்தவாறு பல நீதிக் கருத்துக்களையும் அரசியல் விடயங்களையும் பாண்டவர், கிருஷ்ணர், ரிஷிகள் புடைசூழ உபதேசிக்கின்றார். அம்புப் படுக்கையில் இருக்கும் பீஷ்மாச்சாரியாரிடம் போய் அவருக்கு வணக்கம் செய்து, பெரியோர்களுக்கும் வணக்கம் செய்து நின்றனர். அப்படி நின்ற பேரனாகிய தருமனைப் பார்த்து பீஷ்மர் ஆசீர்வாதம் கூறி



"அப்பனே இன்னமும் நீ கேட்கவேண்டிய தரும சந்தேகங்களைக் கேட்டிடுக" என்று சொல்ல "ஐயா! பூலோகத்திற்குத் தெய்வமென்கின்ற ராஜன், ராஜ்ஜபாரம் பண்ணவேண்டிய முறைமை எப்படி? அதை எனக்கு விரித்துரைக்க வேண்டும்" என்று கேட்க, "விவேகம் பெற்ற வேந்தனே! அரசனுக்கு

*நேரத்திற்கு ஏற்ப பண்பை நிலை நிறுத்திக்கொள்.*

ஒற்றைக்குடை
மங்கல வாத்தியம்
செழிப்பாகிய பயிர்
சேதி அறிந்த தந்திரி
பொறியமைந்த அரணம்
கொடி படர்ந்த மேடு
வேத மந்திர வேள்வி
வெற்றிக்கொடி
துஸ்தரமாகிய படை
கொழுப்பாகிய உயிர்
மேலுயர்ந்த மதில்
செடிநிறைந்த சயிலம்
குடிகள் அடர்ந்த நாடு
ஜெஜ முரசு
விஸ்தாரமாகிய குடி
நீதி தெரிந்த மந்திரி
ஆழ்ந்து அகன்ற அகழி
அநேக பொக்கிஷம்
கொலுக்கூடமைந்த பதி

நான்கு வேதம், ஆறு அங்கம், பதினெண் புராணம், முப்பத்திரண்டு உபநிடதம், 64 கலைகள், தருமசாஸ்திரம், நீதி சாஸ்திரம் இவைகளெல்லாம் இருக்கவேண்டும்.

இவற்றைவிட

சாது சங்கப் பழக்கம்

சாதுர்யவான்கள் இணக்கம்

உரியாரின் உறவும், பெரியாரின் துணையும் கொள்ளவேண்டும்.

மேலும் நல்ல மனத்தினளாயும், மிருதுவசனமுடையவளாயும் உள்ள மாசற்ற மனைவியும், புகழாபரணம் பூணும் பிள்ளையும், சத்தியவாக்கும், அன்பு பாராட்டும் சகோதரங்களும், பிராணனை விரும்பாத மானம் உள்ள வீரனும் உடையவராதல் வேண்டும்.

தான் எப்போதும் ஆசாரம் தப்பாதவனாகவும், சோர்வு, அதைரியம் இல்லாதவனாகவும் இருத்தல் வேண்டும்.

தன்பலம், எதிரிபலம் எப்போதும் அறிந்தவனாக இருக்கவேண்டும்.

செங்கோல் செலுத்தும் திறமையும், கண்ணுக்கினிய கண்ணோட்டமும், எண்ணித் துணியும் கருமமும் இருக்கவேண்டும்.

விருந்தோம்பும் பண்புடையவராய் இருத்தல் வேண்டும்.

ஆபத்துக் காலத்தில் தைரியம் விடாது இருத்தல்.

திரவியம் சேர்க்கும் திறன் உடையவனாயிருத்தல் வேண்டும்.

கடமை, வழங்கும் அறம் கொண்டு இருத்தல்

நால்வகை உபாயத்தை கைக்கொள்ளல். அதாவது சாமம், தானம், பேதம், தண்டம். கூடிய வரை சமாதானமாகவும், பின்னர் தானம் வழங்கியும், அதன்பின் பேதமாகவும், நடந்து அதற்கும் முடியாதபோதுதான் தண்டம் என்ற நான்காவது யுக்தியைக் கைக்கொள்ள வேண்டும்.

அவசரப்பட்டு ஆத்திரமாய்க் கோப மூர்த்தண்ணியங் கொள்ளக்கூடாது. அதனால் பழியும் பாவமும், பட்டத்திற்கு இடையூறும் வரும்.

படை மாட்சியை விளக்க "அம்பரீசன் கதை" என்ற ஒரு சூரிய வம்ச அரசன் கதையையும் கூறினார்.

*உனக்குத் தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதே அறிவு.*

சிற்றின்பம் சேராமை பற்றியும் அதை விளக்க "அனுமரிசி" என்பவரின் கதையையும் பீஷ்மர் கூறினார். அது விரிவாகும் எனக் கருதி இங்கு தரப்படவில்லை.

மன்னன் நடுநிலையோடு ஆட்சிசெய்ய வேண்டும்.

இராஜன் சத்தியம் தப்பி நடப்பானாகில் எத்தனை செழிப்பாகிய பூமியும் விழுப்பாகிப் போகும். பலப்பிராப்தி கிடைக்கமாட்டாது. பூமிதேவியும் நடுங்கி ஒடுங்கிப் போவாள். இராஜனுக்கும், குடிகளுக்கும் தரித்திரம் உண்டாம். ராஜபகை மேலிடும். ஆகையால் இராஜன் நெறிமுறை தப்பாது தருமத்தை அனுசரித்து நடுநியாயஞ் செலுத்தி தேவதா பத்தி வைத்துச் செங்கோல் செய்ய வேண்டும். அப்போது தானியவிளைவு அபரிமிதமாக இருக்கும். பூமி வளங்கொளிக்கும். குடி, படைகளும் தழைக்கும். கோவில்கள் செழிக்கும். சத்துரு ஜெயம் உண்டாகும். சத்தியமும் தைரியமும் களிக்கும்.

மாரி வறண்டு பஞ்சம் ஏற்படுமாகில் குடிகள் எல்லாம் குன்றிப்போம். அக்காலத்தில் அரசன் கிலேசப்படாமல் நமக்கென்ன குறை என்று இராமல், பொருட்செலவு என்று பின்னடையாமல் குடியானவர்களுக்குத் திடம் சொல்லிப் பொருள், விதை, மாடு இவைகளெல்லாம் உதவி பண்ணி எரு, தழை முதலியவைகளிட்டு ஏரி, குளங்கள் தூர்வாரிப் பார்வையிட்டுக் கீழ்நீர் கொண்டு இறைப்பித்துப் பூமியை மேடுபள்ளம் திருத்தி உழுது பயிரிடும்படி முயற்சிபண்ணி அந்த வருடத்தில் வந்த பலனைக் குடியானவர்களே அனுபவிக்கும்படி கொடுத்து மறுவருஷப் பலனில் பாதியிறை வாங்கி அப்பால் ஓங்கியபோது தன் கடமையை (வரி) பூர்த்தியாய்ப் பெறல் வேண்டும். அரசனுக்குப் பூமியே ஆதரவு, பூமியே பிராணன்; பூமியே சாமி; பூமியே கதி இதுவே அரசருக்கு விதி. இதை உன்னுள்ளத்தில் பதி" என தருமருக்குப் பீஸ்மர் உபதேசித்தார்.

அடுத்து மன்னனுக்கு அவன் எவ்வளவு சாமர்த்தியமானவனாக இருந்தாலும் நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்னும் மூன்று காலமும் அறிந்து மொழியும் பொருள் தெரிந்து பரிந்து சொல்லத்தக்க மதியூகியான மந்திரி இருக்கவேண்டும். இதற்கு உதாரணமாக ஒரு கதையையும் கூறியுள்ளார். (கேமதரிசி மகாராஜன் கதை)

பெரியார் மகத்துவமும் அவரைத் துணைகொள்ளுதலினால் உண்டாகும் பெருமையும் கூறுதல் வேண்டும். நல்ல மந்திரி கிடைத்திருந்தாலும் உலகாளும் அரசர்களுக்குப் பெரியவர்களுடைய சகாயம் இருக்க வேண்டும். சகல அறிவும் நிரம்பிய பெரியாரின் சகவாசம் வேண்டும். எந்நேரமும் அவர்களுடைய தரிசனமும், சகவாசமும் பெறவேண்டும். வீண்காலம் போக்காமல் சத்காலகோடிபம் பண்ணவேண்டும். சகலநீதி, நெறி முறைமை களைத் தூண்டிக் கேட்கவேண்டும். தருமம், தானம், தவம், சாந்தம் இவைகளையெல்லாம் கேட்டுத் தெரிதல் வேண்டும். எந்தக் காரியங்களையும் மந்திராலோசனையுடன், தன் மதியையும் கூட்டிப்பார்த்து இது சரியோ? அல்லவோ? எனக்கூறும் பெரியவர் கிடைப்பது அருமையாக இருக்கும். அப்படி இருந்தபோதிலும் எப்பாடுபட்டாயினும் பெரியாரைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அது ஏன் என்றால் பெண்டு பிள்ளை, பந்துமித்திரர் முதலியபேர்களெல்லாம் அவனுடைமையைச் செலவழித்துச் சாப்பிடுவார்களேயல்லாமல்

*நம்பக் கற்றுத்தராதீர்கள், எதையும் சிந்திக்கக் கற்றுத்தாருங்கள்.*

அவனைக் கடைத்தேற்றுவாரில்லை. அவனுக்கு ஒரு ஆபத்து வந்ததனால் தாங்களும் கூட இருந்து அழுவார்கள். அல்லது தூரப்போய் விடுவார்கள்.

பெரியாரைத் துணை பற்றியிருந்தால் நல்ல கேள்விகளினாலும் சாஸ்திரப் பயிற்சியினாலும், தெய்வ நிர்ணயம் தெரிந்து, இப்பிரபஞ்சம் பொய் என்று அறிந்து போகாதி விடயங்களில் புத்திகெட்டலையாமல் நிலைபெற்ற நெறிபற்றி நன்மையைப் பெறலாம். பெரியோர் எந்த வருணத்தில் பிறந்திருந்தாலும் அவர்களிடம் ஜாதி, பேதம் பாராட்டலாகாது. பெரியார்கள் நன்மை தீமைகளைச் சரியாய் நடத்துவார்கள். தருமமும் சத்தியமும் தவறார்கள்.

பெரியோர்களின் கேள்வியும், சகவாசமும் இல்லாமற் போனால் இராஜன் எத்தனை பலமிருந்தாலும் எவ்வளவு செல்வம் இருந்தாலும் உண்மைப் பொருள் தெரிந்து ஒரு போதும் கதிபுகமாட்டான்.

தன் வலியுடன் துணை வலியும் சேர்ந்து இருக்கும்போது இராஜனுடைய செங்கோல் சாயாது இருக்கும்.

ஒரு நாட்டு இராஜன் நல்லோர் நட்பைப் பெறல் வேண்டும். தீயோர் நட்பு தீங்கை வருவிக்கும் என நல்லோர் நட்புக்கும் தீயோர் நட்புக்குமான உபகதைகளைக் கூறினார்.

செல்வர்களுடன் சிநேகம் ஆகாது என்பதைப் "பிரமதத்தன்" கதைமூலம் விளக்கினார்.

ஒரு மன்னனுக்கு பகுத்தறியும் தன்மை வேண்டும் எனக்கூறி அதற்கு நரி, கழுகு என்பவற்றின் கதை கூறினார்.

ஒரு மன்னர் ஒழுக்கம் உடையவனாக இருக்க வேண்டும், என்று கூறி "இந்திரன் கதை" கூறினார்.

செங்கோல் சீராக இருக்கவேண்டுமாயின், ஒருவன் பொல்லாக் காரியம் செய்வானாயின் "தண்டனை நூலிற் செப்பியவாறு தண்டிக்கப்பட வேண்டியது அவசியம். உடனுக்கு உடன் தண்டித்தால் அவன் சொன்னபடி கேட்பான். அவன் செய்த தீவினையும் அற்றுப் போய்விடும். அவ்வாறு தண்டிக்காமல் போனால் காரியம் முடியாது. தீவினையும் நீங்காது.

முன் ஜாக்கிரதை அவசியம்.

மந்திர ஜபம் செய்தல் அவசியம்

சத்கருமங்களை விரைவிற் செய்து முடிக்க வேண்டும்

புருடார்த்தங்கள் (அறம், பொருள், இன்பம், வீடு) பற்றி விரிவாக விளக்கினார்.

தவச் சிறப்பைக் கூறினார்.

பரம தருமம் பற்றிக் கூறினார். (பல்லுயிரையும் தன் உயிர்போல் பாதுகாத்தல் வேண்டும்)

**ஒரு குறிப்பு:**

இது ஒரு சிறிய நூல் வடிவில் வரக்கூடியவிடயம். விரிவு அஞ்சி சுருக்கமாக எழுதப்பெற்றது.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| Dr குகதாசன் (கண் வைத்திய நிபுணர்) | கோண்டாவில் | 10000. 00 |
| வி. கேசவன் | கரவெட்டி (முதியவர்களுக்காக) | 10000. 00 |
| திரு கோகுலன் | கொழும்பு | 20000. 00 |
| வசந்தாதேவி ராசகுமார் | ஜேர்மன் | 10000. 00 |
| சத்தியவாணி நந்தகுமார் | மானிப்பாய் | 5000. 00 |
| பாலச்சந்தர் ரஞ்சினிதேவி | சிறுப்பிட்டி | 12000. 00 |
| Dr சிவஞானசூரியர் | கொழும்பு | 24000. 00 |
| க. கோகிலாதேவி | மானிப்பாய் 15 தேங்காய் | 10000. 00 |
| மு. சிவதர்ஷனன் (கண்ணன்) | லண்டன் | 15000. 00 |
| சதாசிவம் துரைராசா | கொம்மந்தறை | 10000. 00 |
| கிஷோகுமார், சாளினி, பிரியா, சசிஷா, கிஷால் | கனடா | 5000. 00 |
| வி. விமலேஸ்வரன் | லண்டன் (வாழ்வாதாரம்) | 100000. 00 |
| K. மிஷானி | கொழும்பு | 2புட்டி பருப்பு 4மூடை அரிசி |
| பா. ராஜேஸ்வரி | வல்வெட்டி 2மூடை அரிசி | 10000. 00 |
| மாதவன் அனுஷியா | லண்டன் | 20000. 00 |
| பகீரதி தியாகலிங்கம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சாந்தகுமாரி மகேந்திரன் | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| க. ஆனந்தராசாமூலம் செல்லையா ரத்தினம் | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| மனோகரன் நேரு | வெள்ளவத்தை | 10000. 00 |
| நிரோசன்மூலம் ந. சிவகுமாரன் | மயிலிட்டி | 21600. 00 |
| தே. செந்தூரன் | மீசாலை | 5000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| திரு ராஜகுலசிங்கம் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| செ. காந்திமதி | கொக்குவில் | 10000. 00 |
| த. ரதி | நெல்லியடி | 3000. 00 |
| சிவரஞ்சன் குடும்பம் | கனடா | 2000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| கோ. நிதுஷன் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. சிவாஜினி | உடுப்பிட்டி (கனடா) (வலுவிழந்தோருக்காக) | 10000. 00 |
| R. ஞானி | கனடா | 5000. 00 |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஆ. தங்கமயில் | கரவெட்டி | 2000. 00 |
| K. பாலேந்திரா (லக்சுமி கிறேசர்) | மண்டான் | 10000. 00 |

*எங்கே உண்மை இருக்கிறதோ அங்கே தன்னலம் இருப்பதில்லை.*

| | | |
|---|---|---|
| லோகானந்தன் மூலம் (பெரியண்ணா நினைவாக) இணுவில் | | 1மூடை அரிசி |
| சறோஜினிதேவி மாணிக்கராசா | பருத்தித்துறை | 15000. 00 |
| க. லோகநாயகி | சங்குவேலி | 5000. 00 |
| ச. கிருஷ்ணபிள்ளை | பிரான்ஸ் | 30000. 00 |
| திருமதி புனிதவதி சண்முகலிங்கம் | கரவெட்டி | 10000. 00 |
| கமலா குணசிங்கம் | சாவகச்சேரி | 500. 00 |
| கதிர்காமத்தம்பிமூலம் வி. சிவகுமாரன் | பொலிகண்டி | 28000. 00 |
| மு. ஸ்ரீகந்தா மூலம் பொ. தம்பிராசா | சிட்னி (நீர்வேலி) | 15000. 00 |
| S. சேவித் | லண்டன் | 16000. 00 |
| மார்க்கண்டு பசுபதி | லண்டன் (கரவெட்டி) | 10000. 00 |
| க. செல்லத்துரை நினைவாக டச்றோட் | சுன்னாகம் | 10000. 00 |
| செ. உமாகாந் | திருநெல்வேலி | 5000. 00 |
| வை. சரஸ்வதி | சாவகச்சேரி | 500. 00 |
| சதீஸ் திருமகள் | குப்பிளான் | 3000. 00 |
| ரா. ரஞ்சி | புலோலி | 5000. 00 |
| ஐ. சந்திரதேவன் | புன்னாலைக்கட்டுவன் | 2000. 00 |
| சி. விமலாதேவி | சிலாபம் | 25000. 00 |
| ந. பகீரதன் | லண்டன் | 3000. 00 |
| ச. வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| இ. கைலாயநாதன் | கொழும்பு | 5000. 00 |
| E. கனகசபாநாதன் வரலஷ்மி | கனடா | 10000. 00 |
| S. கதிரவேலன் | நீர்வேலி | 5000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | 11000. 00 |
| திரு சண்முகநாதன் | நல்லூர் | 1000. 00 |
| பா. சஞ்சீவ் | புத்தூர் | 2000. 00 |
| சு. வேலுப்பிள்ளைமூலம் வே. கிருபாகரன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| வி. ராசேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| ம. சுவேனியா | கரவெட்டி | 5000. 00 |
| ஏ. ஐங்கரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| லோ. தர்ஷிகா | ஆவரங்கால் | 2000. 00 |
| ஐ. பிரசன்னா குடும்பம் | கனடா | 2000. 00 |
| குமுதினி வாகீசன் | லண்டன் | 5000. 00 |
| மா. அருள்ராஜா | லண்டன் | 15000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| க. செல்வஞானம் | கரவெட்டி | 1000. 00 |
| கே. தமிழ்மாறன் | புங்குடுதீவு | 2000. 00 |
| பொ. சந்திரமோகன் | யாழ்ப்பாணம் | 6000. 00 |

(தொடரும்...

# பதட்டத்தில் இருந்து விடுபடுவதற்கு

– **திரு க. நல்லையா** அவர்கள் –

ஒரு பட்டினத்தில் ஒரு பெரிய முதலாளி இருந்தான். ஒருநாள் மாலை நேரம் தனது கார் சாரதியைக் கூப்பிட்டு நாளைக்குக் காலையில் விமான நிலையம் செல்ல வேண்டும். காலை 6.00 மணிக்கே வேலைக்கு வந்திடவேண்டும். அந்த விமானத்தைப் பிடிக்காது விட்டால் என்னுடைய வாழ்வே முடிந்துவிடும் என்று கூறி வருவாயா? என்று கேட்டான். அதற்கு அந்தச் சாரதியும் கண்டிப்பாக வருவேன் என்று கூறிவிட்டுச் சென்றான். அதன் பின் விமானத்தை வெகு சீக்கிரமாகச் சென்று பிடிக்கவேண்டும் என்ற நினைவில் முதலாளிக்கு தூக்கமே வரவில்லை. ஒரே பதட்டமான சூழ்நிலை. ஒரு மாதிரி காலை 5.00 மணிக்கு விழித்து ஆயத்தமாகி வெளியில் வந்து கார் சாரதி 6.00 மணிவரை வராததால் மேலும் பதட்டமடைந்தான். கார் சாரதி ஒரு வழியாக 6.30 மணிக்கு வந்து சேர்ந்தான். இப்போதாவது வந்துவிட்டானே என்று கோபப்பட்டால் காரியம் கெட்டுவிடும் என்று நினைத்து 6.30 மணியளவில் விமான நிலையத்திற்குப் புறப்பட்டார்கள். அரை மணிநேரத்தின் பின் நடுவீதியில் கார் நின்றுவிட்டது. மேற்கொண்டு செல்லமுடியாது என்று கார் சாரதி கூறிவிட்டான். இதனால் அவரது பதட்டம் மேலும் அதிகரித்தது. அப்போது அந்த வழியாக வந்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து தன்னை விமான நிலையத்தில் இறக்கிவிடும்படி கேட்டார். அந்த விமானத்தைத் தவறவிட்டால் என்னுடைய வாழ்வே முடிந்துவிடும் என்று கூற அவரும் முதலாளி மேல் இரக்கம் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்று விமான நிலையத்தில் விட்டான். விமானம் புறப்படுவதற்குச் சிறிது நேரமே இருந்தது. இவரது பதட்டமோ மிக வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு வழியாக விமானத்தில் ஏறி அவரது இருக்கையில் அமர்ந்துவிட்டார். அவருடைய பதட்டம் சிறிது தணிந்தது. இப்படி மேலும் ஒரு அரைமணி நேரம் போயிருக்கும் விமானத்தில் இருந்து ஓர் அறிவிப்பு வெளிவந்தது. இந்த விமானம் இன்னும் அரைமணி நேரத்தில் விழுந்து நொருங்கி விடும் என்பதாகும். இப்போ முதலாளியின் பதட்டம் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

இனி எங்கள் கதாநாயகன் முதலாளியை எடுத்துக் கொள்வோம். அவருடைய உயிரிலும் பார்க்க ஏதோ பெரியது ஒன்று கிடைக்கப்போகின்றது என்ற எண்ணத்தினாலேயே அந்த விமானத்தை பிடிக்காது விட்டால் வாழ்வே முடிந்துவிடும் என்று கூறினார். அவருக்கு கிடைக்கின்ற பொருள் கிடைக்காது போய்விடுமோ என்ற எண்ணத்தினால் பதட்டம் ஏற்பட்டது. அந்தப் பதட்டமே அவர் எதனையும் சிந்திக்கவிடாது இப்படி ஒரு நெருக்கடியில் கொண்டு வந்து அமர்த்தியது. முதலாவது அவருடைய எண்ணம், இரண்டாவது கார் சாரதி வரப் பிந்தியமை, இடையில் கார் ஓடாமல் நின்றமை போன்ற சில அபசகுனங்கள் ஏற்பட்டதோடு அவசர அவசரமாக விமானத்தைப் பிடிக்க மோட்டார் சைக்கிளில் சென்று அமர விமானம் அரை மணி நேரத்தில் வெடித்துவிடும் என்ற அறிவிப்பும் அவரது பதட்டத்தை மேலும் அதிகரித்ததே தவிர அவர் சிந்திப்பதற்கு கூட

*சொந்தக் காலில் நிற்க உதவுவதே சிறந்த கல்வி.*

நேரம் இருக்கவில்லை. அவர் நடந்தவை களைப் பற்றி சிந்தித்திருந்தால் இவர் இந்தப் பாரிய பிரச்சினையில் இருந்து தப்பித்திருக் கலாம். இதற்கெல்லாம் அவரது பதட்டமே காரணமாகும்.

தொடர்ந்து அரைமணி நேரத்தில் விமானம் வெடித்துவிடும் என்ற அறிவிப்பு வந்தவுடன் எல்லாமே முடிந்துவிட்டது என்று பிரயாணிகள் பதட்டத்தினால் கத்திக் குளறி அடித்து அல்லோலப்பட்டனர். இது பத்து நிமிடம் வரை நீடித்தது. இவற்றை அவ தானித்த அங்கிருந்த ஆன்மீகவாதி ஒருவர் சத்தம் போடாதீர்கள். அனைவரும் உங்கள் உங்கள் தெய்வங்களான யேசு, புத்தர், அல்லா, இந்துக்கள் தமது தெய்வங்களை மனமுருகி வேண்டுங்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடாது, அவர்களை மனம் உருகிப் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. விமானமோ இரண்டு பக்கமும் ஆடி அசைந்து பயங்கர வேகத்தில் சென்று கொண்டிருந்தது. அப்போது பிரயாணிகள் தங்களை மறந்து தத்தமது தெய்வங்களை வேண்டிக்கொண்டார்கள். அவர்களுக்கு என்ன நடக்கிறது என்று தெரியாத வேளையில் 28ஆம் நிமிடத்தில் மீண்டும் ஒரு அறிவிப்பு வந்தது. இனிமேல் எந்தப் பயமும் இல்லை. விமானம் கட்டுப்பாட்டினுள் வந்துவிட்டது. ஒழுங்காக அடுத்த விமான நிலையத்தில் இறங்கலாம் என்பதாகும். அப்போது பயணிகள் எல்லாம் தங்களுக்கு உயிர்ப்பிச்சை தந்த தெய்வங்களை நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். இதுதான் ஆன்மீக பலம்.

இதனை நாங்கள் ஒவ்வொரு விநாடி யும் ஒவ்வொரு நாளும் கடைப்பிடித்து வரு வோமாக இருந்தால் எம்மில் எந்தப் பதட்டமோ பயமோ மனதில் குடிகொள்ளாது. எந்நேரமும் எக்காலமும் ஆனந்தமாக வாழலாம்.

## பார்வை ஒன்றே போதும்

ஒரு காட்டில் ஒரு துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பார்வை கிடையாது. அந்த வழியாக வந்த ஒருவன் "ஏ கிழவா! இந்த வழியாக சற்றுமுன் யாராவது சென்றார்களா?" என்று அதிகாரத்தோடு கேட்டான். அதற்குத் துறவி, "இதற்கு முன் இந்த வழியாக யாரும் சென்றதாகத் தெரியவில்லை" என்றார். சிறிது நேரத்தில் மற்றொருவன் வந்து, "ஐயா, இதற்கு முன் யாராவது இப் பக்கமாகச் சென்றார்களா?" என்று கேட்டான். அதற்கு அத்துறவி, சற்றுமுன் இந்த வழியாகச் சென்ற ஒருவன் இதே கேள்வியைக் கேட்டுவிட்டுச் சென்றான்" என்றார். மேலும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் வந்தான். அவன் "துறவியாரே, வணங்குகிறேன். இதற்கு முன்பு இந்த வழியாக யாராவது செல்லும் சத்தம் தங்களுக்குக் கேட்டதா? தயவு செய்து கூறுங்கள்" என்று பணிவோடு வினவினான். உடனே துறவி, "மன்னர் பெருமானே, வணக்கம். இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான். அடுத்து ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே நீங்கள் கேட்ட இதே கேள்வியைத்தான் கேட்டனர்" என்றார். மிகவும் வியந்துபோனான் அரசன். "துறவியாரே, தங்களுக்குப் பார்வை இல்லை. அப்படி இருந்தும் நான் அரசன் என்றும், முன்னால் சென்றவர்கள் வீரன், அமைச்சர் என்றும் எப்படி அறிந்தீர்கள்?" என்று கேட்டான். "அரசே, இதைக் கண்டறியப் பார்வை தேவையில்லை. அவரவர் பேசுவதை வைத்தே அவர் யார், அவர் தகுதி என்ன என்பதை எல்லாம் அறியமுடியும்." முதலில் வந்தவர் சிறிதும் மரியாதையின்றி கேள்வி கேட்டார். அடுத்து வந்தவர் பேச்சில் அதிகாரம் தெரிந்தது. ஆனால் தாங்களோ மிகவும் பணிவாகப் பேசுகிறீர்கள்" என்று விளக்கினார் அந்தப் பார்வையற்ற துறவி....!

*வாழ்க்கையை ரசிப்பவர்களே நீண்டகாலம் வாழ்கின்றனர்.*

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் நிதிவளம்

வேண்டுவார் வேண்டுவதைத் தமது அருவ வழிபாடு செய்வோரின் உய்விற்காக மறைவில் இருந்து நிறைவாக அருள் பாலிக்கும் மண்டூர்த் திருமுருகன் அற்புதமானவர். முருகப்பெருமானின் ஆலயம் என்றும் சிறப்புடன் இயங்கும் வண்ணம் இன்றைய கோயிலைக் கட்டுவித்து வளர்த்த அன்றைய மன்னர்கள் 280 ஏக்கர் நிலத்தை மானியமாக வழங்கினர். இவ்வாலயப் பணியேற்றவர்களுக்குப் பின்வரும் அளவான நிலங்கள் சந்ததி சந்ததியாக அழியாத மானியமாக வழங்கப்பெற்ற நிலங்கள் நீங்கலாக மிகுதிக் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டு ஒரு தொகைப் பணம் ஆலய வரவாக ஏற்கப்படுகிறது. இங்கு குடிகொண்ட பெருமானின் அருட் பார்வையில் உய்யும் அடியார்கள் அப்பன் பேரில் நேர்த்தி வைத்து இவ்வாலயப் பெருவிழாக் காலத்தில் கால் நடைகளாகவும், கோழிகளாகவும், தங்கம், வெள்ளிப் பொருட்களாகவும், காணிக்கை செலுத்துகின்றனர். ஆலயத்தில் வழிபடுவோர் இக்காலங்களில் உண்டியலில் நிதி சேர்க்கின்றனர். பெருவிழாக் காலத்தில் ஆலய வளாகத்தில் வியாபார நிலையங்களை நடாத்துவதன் பேரில் நில வாடகைக்காக குறிப்பிட்டளவு சிறப்பான நிதி கிடைக்கிறது.

மேலும் பெருவிழாக் காலத்தில் அர்ச்சனையாகவும் காவடி எடுப்போரின் காணிக்கையாகவும் கிடைக்கும் ஆலய வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி சேர்க்கப்படும். மிகுதி மூன்றில் இரண்டு பங்கு ஆலயப் பணியாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இப்பணியாளர்களுக்கு வேதனம் ஏதும் வழங்குவதில்லை. மானியமாக வழங்கப்பட்ட நெல் வயலில் விவசாயஞ் செய்யும் விளைவும், காலத்திற்குக் காலம் ஆலயத்தால் வழங்கும் படிகளுமே பணியாளர்களின் ஊதியமாகும்.

பெருவிழாக் கால வரவு செலவுகளைக் கண்காணிக்கும் பணியை துறைநீலாவணை, பெரிய கல்லாறு, கோட்டைக் கல்லாறு குறுமண்வெளியைச்சேர்ந்த பிரதிநிதிகளான கணக்கப் பிள்ளைமார் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

## மானியமான வயல்நிலம் (பணியாளர்களுக்கானவை)

மண்டூர் கந்தசுவாமி கோயிலின் அன்றாடப் பூசைகள், விழாக்கள், பெருவிழாக்கள் சிறப்புடன் இயங்குவதன் பேரில் அன்று மன்னர்களால் மானியமாக வழங்கப்பெற்ற நெல்வயல் 280 ஏக்கர் ஆலயப் பொறுப்பில் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வாலய அன்றாடப் பணியைத் தொடர்ந்து நடத்துவதன்பேரில் முன்னர் தீர்மானித்தபடி பின்வருமாறு செயற்படுகிறது.

| | |
|---|---|
| 01) வண்ணக்கர் | 06 ஏக்கர் |
| 02) பெரிய கப்புகனார் | 06 ஏக்கர் |
| 03) மாதக்கப்புகனார் | 12 ஏக்கர் (நால்வருக்கு 03 ஏக்கர் வீதம்) |

*எதையும் தாங்கிக் கொள்வது என்பது நம் விதியை வெல்ல சிறந்த வழியாகும்.*

04) கங்காணிமார் 05 ஏக்கர்

05) கவடாக்காரர் 05 ஏக்கர்

06) பணிவிடை செய்யும் கோயிலார் 16 ஏக்கர்

மொத்தம் 50 ஏக்கர் மானியமாக வழங்கப்பட்டவை. இதனைப் "பரவணி" என்றழைப்பர்.

மிகுதிக் காணிகள் நீண்ட கால ஒத்தியாகவும் குத்தகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதன் வருமானம் ஆலய நிதியில் சேர்க்கப்படுகிறது.

இவ்வாலய வழிபடுவோர் தமது நேர்த்திக் காணிக்கையாக வழங்கிய தங்கம் முப்பது பவுண் மற்றும் வெள்ளி (நகை, பொருள், வேல்) புதிய வண்ணக்கரிடம் கிடைத்த 75 இலட்சம் ரூபா வங்கியின் சேமிப்பில் உள்ளது.

மண்டூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடம் முழுவதும் கிடைக்கும் நிதியாவன,

01) நெல்வயல் மூலம் கிடைக்கும் வருடாந்த குத்தகை நிதி.

02) உற்சவகாலக் காணிக்கை நிதி (உண்டியல் மூலம்)

03) பெருவிழாக் காணிக்கையான ஆடு, மாடு, கோழி யாவும் ஏலமாக விற்கும் நிதி முழுவதும்

04) பெருவிழாக் காலத்தில் ஆலய வளாகத்தில் வியாபார நிலையங்களுக்கான நில வாடகை.

05) ஆலயத்தில் நடைபெறும் அர்ச்சனை மற்றும் காவடி எடுப்போர் மூலம் கிடைப்பதில் மூன்றிலொரு பகுதி.

எந்தவொரு புனிதமான அற்புதங்கள் நிறைந்த ஆலயத்தினதும் வருமானத்தை அண்ணளவாக எடுத்துரைக்கக்கூடாது. நாம் குறிப்பிடும் ஒரு ஆலய மூர்த்தி குறிப்பிட்ட வருமானத்தின் பெறுமதிக்கு அப்பாற்பட்டவர். கணக்கின் விபரங்களை உரியவர்கள் கூடி அறிந்து செயற்படுவர். எம்பணி ஒரு தெய்வத்தின் அற்புதங்களை நோக்குவதாகும். குறிப்பாகச் சொல்வதாகில் பல்லாயிரக்கணக்கானோர் பெருவிழா மற்றும் விழாக்களுக்கு இன மத பேதமின்றி வந்து வழிபடும் ஆலயமாகும். வழிபடுவோர் தமது நேர்த்திக்காகவும் மன நிறைவிற்காகவும் தருவதால் இவ்வாலயத்திற்கெனப் பெருநிதி பல வகையாகவும் சேர்கிறது.

குறிப்பிடும் வருமானத்தில் வண்ணக்கர், பெரிய கப்புகனார், பூசைக்கப்புகனார் நால்வர், கவடாக்காரர், கங்காணிமார் கோயிலின் தொண்டூழியர் (நாளாந்தம், பெருவிழாக்கால) பலர் பணியாற்றுவர். இவர்களின் பணிக்கமைவாக ஏற்கெனவே வழங்கப்பெற்றவை மானியமான நெல் வயல், வருடத்தில் இப்பணியாளர்களுக்குப் பின்வரும் வகையில் "பரவணி" என்று வழங்கப்படும் படிகள் வருமாறு.

01) வருடம் முழுவதும் கிடைக்கும் அர்ச்சனை, காவடி வருமானம் ஆகியவற்றில் மூன்றில் இரு பங்கு.

02) பெருவிழாக் காலத்தில் உபயகாரர்களின் உதவியாக ஒரு தொகை.

03) கார்த்திகைப் படியாக முன்நெல் வழங்கப்பெற்றது. 2007இன் பின் நெல்லுக்குப் பதிலாக உரிய பணம் வழங்கப்படுகிறது.

*சொல் என்பது மனித ஆற்றலை ஒழுங்குபடுத்துவதாகும்.*

04) இன்றைய சூழலுக்கமைய ஊக்குவிப்புப் பணம்.
05) சித்திரை வருடப்பிறப்பில் கணிசமான கைவிசேடம்.

பெருவிழாக் காலத்தில் மட்டும் பணியாளர்களான மேலதிகமான உள்பணிவிடைக் காரர், சுவாமி தூக்கும் வேளாளர், வில்லம்பு ஏந்துபவன், ஐயர், தேசத்து வண்ணான், பரிவேட்டு வண்ணான், தவில் அடிப்போர், மடப்பள்ளிக்காரன், எண்ணெய்க்காரன், கொடி பிடிப்போன், பந்த விளக்குகள் தூக்குவோர், குடை பிடிப்போர், ஆலவட்டம் பிடிப்போர், பாதுகைக்காரன் (நாற்காலி தூக்குபவன்) ஆகியோருக்கு பெருவிழா உபயகாரரால் வழங்கப்படும் (நெல்) தற்போது நெல்லுக்கான நிதி யாவருக்கும் பகிர்ந்தளிக்கப்டும்.

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் புராணபடனமும் பாடப்பெற்ற ஆக்கங்களும்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் கூறியதை மண்டூரில் புலவர்கள் பலர் சிலேடையாகவும் மண்டூர் முருகன் மீதிருந்த பக்தியாலும் வாயாரப் பாடியும் புராணப் பயன் சொல்லியும் இளையவர்கள் பலரைத் தோற்றுவித்தும் மண்டூர் முருகனைத் தம் அகத்தினில் ஏற்றிப் போற்றினர்.

மட்டக்களப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நாநிலத்தின் உறைவிடமாகும். மட்டக்களப்பில் மண்டூர் மேற்கூறிய நாநிலம் சூழ்ந்த பெருமைக்குரியது. பிற்கூறிய புலவர்களின் சிலேடையான பாடல்களிலிருந்து வெளிவரும் அழகிய சிந்தனையை அறிவோம். குறிஞ்சி நில மரங்களில் நறுங்கனிகள் தொங்க, அக்கனிகள் முற்றி வெடித்துத் தேனான கனிச் சாறு சொரிய மலையிலிருந்து வரும் நீரிற் சங்கமமாகிறது. இத்தேனாறு மலையின் மரங்களின் உதிர் சருகுகள் உக்கிப் பசளைப் பருவத்தேயமைந்த வண்டல்களையும் வாரி வந்து (குறிஞ்சியிலிருந்து) கீழிறங்கி மண்டூர் வாவியுடன் கலந்து மண்டூர் முருகன் உறைந்துள்ள பிரதேச வயல்களில் பாய்கிறது.

மண்டூர் முருகனை அகத்திலிருத்திப் பாடிய புலவர்களினால் எம்மினிய தமிழ், செந்தமிழ் நாடாகிறது. இச் செந்தமிழ் நாட்டை எண்ணும்போது வயல்களில் பாயும் தேனாறு போல புலவர்களின் செந்தமிழில் முருகனின் பக்திப் பாடலைக் கேட்டால் இன்பத் தேன் எமது காதினில் அடைந்து முருகனின் புகழை நாட வைக்கிறது.

மண்டூர் முருகனின் பேரருட் சக்தியால் தமிழ்ப் பற்றுடன் சைவ சமயப் பற்றையும் இணைத்துத் தம் திறமையைக் காட்டியும் பக்திப்பாடல் வகைகளை ஆக்கித் தந்த மண்டூரப் பாவல்லோர், நாவல்லோர் பலர் அன்றுமுதல் இன்றுவரை சைவத்தையும் தமிழையும் அரியணை ஏற்றினர். மேலும் தமது கல்விப்பணி, விவசாயம், வியாபாரம் போன்ற பணிகளால் ஈர்க்கப்பெற்று யாழ் மண்ணில் இருந்து மட்டக்களப்பில் குடியேறி மண்டூர் முருகனைப் பாடி மகிழ்ந்தவர்களுள் வித்துவான் வைத்திலிங்க தேசிகர் பண்டிதர் முருகேசபிள்ளை ஆகியோர் சிறப்புடையவர்கள். மேலும் மண்டூரைத் தாயகமாகக் கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, அயலூரைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தர் ஆகியோர் மண்டூரப் பதிகம் பாடியுள்ளனர்.

மண்டூரப் புலவர் விநாசித்தம்பி அவர் தம் புதல்வர் வி.சீ. கந்தையா உபாத்தியாயர், கவிமணி க. அழகரத்தினம் ஆகியோர் மண்டூர் வேலன் குறம் காவடி விருத்தம், திருமண்டூரப்

*வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்கிறவனே சிறந்த அறிவாளி.*

பதிகம். மண்டூர் முருகன் ஊஞ்சல், தில்லை மண்டூர் முருக இரசம் ஆகியவைகளைப் பாடி னர். மேலும் பலர் பக்திப் பாடல்களைப் பாடி னர். இவர்களுடன் பூ. சின்னையா, வைத்திய சிகாமணி, கோ. நாராயணபிள்ளை, வே. ஆறு முகம் ஆகியோரின் பக்திப் பனுவல்கள், மண்டூர் சோமசுந்தரம் பிள்ளையின் திருமண்டூர் முருகன் மாலை தில்லை மண்டூர் அந்தாதி மற்றும் பண்டிதர்கள் பாடிய மண்டூர் முருகன் பிள்ளைத் தமிழ் சைவப் புலவர் தில்லைநாதன் வேறு சிலரின் ஆக்கங்களும் மண்டூர் முரு கனை வேண்டித் துதிக்கத் தூண்டுகிறது.

யாழ் புலோலியூர் வைத்திலிங்க தேசிகர் மண்டூர் முருகன் மீதிருந்த பக்தியால் மண்டூர் மற்றும் அயலூர்களில் புராணபடன வகுப்புக் கள் சிலேடையாகப் பாடி முத்தமிழ் வளர்க்கும் துரித பணிகளை வளர்த்தவர். மண்டூர் முரு கன்மீது முதன் முதல் மண்டூர்ப் பதிகம் பாடியவராவார். இப்புலவரின் சிறப்புக்களை வேறாக அறிவோம்.

புலவர் விநாசித்தம்பி 1887இல் மண்டூ ரில் பிறந்து வேளாண் தொழிலுடன் யாழ் மண்ணின் கல்விமான் முருகேசு உபாத்தியாய ரிடம் தமிழைத் துறைபோகக் கற்றதுடன் சிறு வயதிலிருந்தே புராண உரை சொல்லும் ஆற்ற லும் பெற்றவர். இவர் புராண உரைமூலம் பெருமை தேடினார். இவர் தமது திறமையால் திருச்செந்தூர் புராணபடனத்தைப் பல மாணவ பரம்பரை மூலம் உருவாக்கினார். இவர் தமது சாதனையாக பன்னிரு உயிரெழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு முதன் முதல் இயற்றிய "மண்டூர் முருகன் காவடிப் பாட்டு" என்னும் பக்திநூல் வெளிவந்தது.

மேலும் மண்டூரின் வயல் வளத்தை யும் மண்டூரில் உறைந்துள்ள முருகனின் அருள் வளத்தையும் வியந்து பாடியது மண்டூர் வடிவேலர் குறம் என்னும் பாடற்றொகுதி நூல் ஆகும். இப்புலவரின் சிறப்பால் மண்டூர் முருகன்மீது பல பாடல்களமைந்ததாக மண்டூர் முருகனின் புகழ் யாவராலும் போற்றப்படுகிறது.

மண்டூர் கந்தசுவாமி கோயில் புராண படனம் புலோலியூர் வைத்திலிங்க தேசிகரின் காலத்திலிருந்தே புராணங்கள் வாசிக்கப் பெற் றுப் பல உரையாசிரியர்களால் பயன் சொல்லும் பெருமை அன்றுமுதல் இன்றுவரை கிழக்கிலங் கையில் மண்டூர் கந்தசுவாமி கோயிலுக்கே உரியதாகும்.

மண்டூர் கிராமத்தில் பிறந்து தமது தந்தையார் பத்ததைக்குட்டி ஆசிரியர் புராணங் களை வாசிக்கப் பல சான்றோர்கள் சிறப்பான பயன் சொல்வதை நன்கறிந்து அதன் சிறப்பை உணர்ந்தவர். பத்ததைக் குட்டி ஆசிரியரின் மகன் பேராசிரியர் சந்திரசேகரம். இணுவில் திருவூரைப் புகுந்த இடமாகக் கொண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பதவி ஏற்றவர். இவர் இணுவில் திருவூரின் ஆலயங் கள் சைவ மரபு ஆலயங்களின் சிறப்பையும் நன்கறிந்தவர். (இணுவிலின் ஆறு பேராசிரி யருள் இவரின் வரவே முதன்மையாகும்.)

பேராசிரியர் சந்திரசேகரம் 1981இல் இணுவில் பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக் கரசு என்பவர் எழுதிய இணுவை அந்தாதி என்னும் நூலுக்கான அணிந்துரையில் பின்வரு மாறு குறிப்பிட்டார். "ஈழத்தில் திருமுருகன் கோயில்கள் பல. முருகன் புராணமாம் கந்த புராணம் மற்றும் புராணங்களைப் படித்து மற்றொருவர் உரை சொல்லும் புராணபடனம் என்னும் சிறப்பு வட பகுதியில் இணுவில் கந்தசுவாமி கோயிலிலும் கிழக்கில் சின்னக் கதிர்காமம் என்னும் மண்டூர்க் கந்தசுவாமி கோயிலிலும் தொடர்ந்து நடைபெறுவது நற் பண்பாகும் என்றார். இப்பேராசிரியரின் பிறந்த மண் பற்றும் மண்டூர் முருகன் மீதிலிருந்த பக்தியும் சிறப்பாக அமைந்தது. மண்டூர் பதிக்குச் சைவத்தமிழ்ப் பணியால் பெருமை சேர்த்த புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

*நகைச்சுவை பக்க விளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.*

இப்பெரியார் 32 வருடகாலம் மண்டூர்க் கந்த சுவாமி கோயிலின் வண்ணக்கராகப் பணியாற்றிய ஏகாம்பரம் பிள்ளையின் மூத்த மகன் அவராவார். இவர் இளமையிலேயே மண்டூர் முருகனால் ஈர்க்கப்பெற்று முத்தமிழிலும் துறைபோகக் கற்றவர். கிழக்கிலங்கையில் அவதரித்த விபுலானந்த அடிகள் யாழ்ப்பாணம் நாவலர் பெருமானுக்கு இணையாக பெருமை சேர்ந்தவர். மட்டக்களப்பில் அதியுயர் சிறப்புப் பெற்ற விபுலானந்தருக்கு அடுத்த பெருமதிப் பிற்குரியவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆவார். இவர் யாழ் நாவலர் காவிய பாடசாலையிற் துறைபோகக் கற்றவர். தமது புலமையால் புலவர்மணி என்னும் பெயர் பெற்றார். இவர் யாழ்ப்பாணத்தில் பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளையுடன் இணைந்து கல்விச் சிறப்பால் பண்டிதமணிக்கு நிகரான பெருமை உடையவர். தமது இளமைப் பருவத்திலேயே மண்டூர் முருகனின் பக்தி மேலிட முதன் முதல் மண்டூர் முருகன்மீது "மண்டூர்ப் பதிகம்" என்னும் நூலை எழுதினார். இந்த நூலுக்கு பண்டிதர் மயில்வாகனனார் (விபுலானந்த அடிகள்) எழுதிய சிறப்பு விருத்தப்பாவை அறிவோம்.

"மண்டூர் முகிற் குலங்கள் எமதிறைவர் முருகர் திருப்
பதியீதென்ன
மண்டூர்மழை பொழியுஞ் சிறப்பதனால் வளம் மலிந்து
மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர் திருப்பதிகம்
மரபிற் சொற்றான்
மண்டுரு மினிய மொழிப் பெரியதம்பிப் பிள்ளையெனும்
கலை வல்லோனே"

விபுலானந்தரின் சிறப்புப் பாவின் பெருமையால் 1922இல் இந்நூல் வெளிவந்தது. இருவருக்கும் பெரும் புகழைத் தேடியது. (முற்றும்)

## ஆற்றங்கரையானே! ஆதரிக்க வேண்டுமையா!

ஆற்றாது அழுகின்ற எங்களது துயர்தீர
மாற்றாக மருந்தாக மாலவன் மருகனே
தேற்றம் தருவாயே! தெய்வானை நாயகனே!
ஆற்றங் கரையினிலே அமர்ந்த வேலவனே!

ஏற்றம் எதுவுமின்றி எங்கள்நிலை தொடருவதோ?
மாற்றம் வேண்டுமையா! மஞ்ஞை வாகனனே!
ஆற்றல் மிக்கவனே! ஆறுமுகப் பெருமானே!
ஆற்றும் பலமுடையாய்! ஆதரிக்க வேண்டுமையா!

-ப. மகேந்திரதாசன்-

*இயற்கை என்ற புத்தகத்தின் ஆசிரியர் இறைவன்.*

# தல யாத்திரை

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

எமது வாழ்வில் ஒருமுறையேனும் தல யாத்திரைசெய்வது அல்லது தல யாத்திரை "சென்றவர்கள் எழுதியுள்ள தகவல்கள் அடங்கிய நூல்களைப் படிப்பதால் அதி விசேட பலன் கிடைப்பதுடன் வாழ்வும் வளமாகும்" என்பர் ஆன்மீகச் செல்வர்.

இவ்வகையில் சந்நிதியான் ஆச்சிரம வெளியீடாகிய "ஞானச்சுடர்" மலர் தரும் உயர் திரு மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் வட இந்திய யாத்திரை, மலேசிய தல யாத்திரையாகியவையும், மற்றும் வல்வையூர் அப்பாண்ணா தரும் பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளின் தல விசேடங்களும் புலம் பெயர்ந்த நம் தமிழ் மக்களுடன் அந்தந்த நாடுகளின் மக்கள் பழகும் பண்பும் எமது வாழ்வை வளப்படுத்துவது கண்கூடு.

வேற்றுமதத்தினர் அதிகம் வாழும் நாட்டில் அமெரிக்கா சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமதப் பேராளர் மகா சபையில் இந்து மதம் பெருமையுற வழிவகுத்த பெருமை சுவாமி விவேகானந்த அடிகளாரையே சாரும் என்பதில் மிகையில்லை. சிறுவனாக இருந்த போது அழையாவிருந்தாளியாகப் புகைவண்டியில் நித்திரையாகி மாற்றுமதப் பெண்ணின் உதவியால் சபையில் பேச முடிந்தது.

சிவநேயச் செல்வர்களாய அன்பர்கள் ஆன்மீகப் பெரியவர்கள் இணைந்து நோயுடன் போராடிக் கொண்டிருந்த வயது முதிர்ந்த என்னை 2017 மார்கழியில் சிதம்பரம் ஆதிரை தரிசனத்துக்காகவும் மற்றும் தென்னிந்திய தல யாத்திரைக்காகவும் தம்முடன் அழைத்துச் சென்றனர். யாத்திரையில் கண்டவற்றையும் மனப்பதிவு செய்வதோடு நில்லாது எழுத்துரு வாக்குதலே அன்பர்களது நோக்கமாயிருந்தது, அதன் வெளிப்பாடே இக்கட்டுரையாகும்.

முருகப்பெருமானுக்கு ஏராளமான திருத்தலங்கள் தென்னிந்தியாவில் அமைந்துள்ளன. அங்கெல்லாம் தரிசனம் செய்து சந்தத் தமிழில் அருணகிரிநாத சுவாமிகள் இனிய கனியமுதான திருப்புகழ் பாடியுள்ளார்.

அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ள முருகனுக்கு மூன்று ஆலயங்கள் என்ற கோவிலை நோக்குகிறோம். அங்கு சுவாமிகள் அருளிய இரண்டு பாடல்கள் கண்டோம். தூய தமிழ் எழுத்தினால் வடிக்கப்பெற்ற ஒரு கல்வெட்டு கண்டோம். 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கக்கூடும்.

திருமுறைகளைக் கல்வெட்டில் தனி மனிதன்மூலம் மனப்பாடம் செய்வித்துள்ளதாக ஐதீகமுண்டு. அவர்கள் அத்த நாயனார் என்று பெயருடையர். "சந்தத் தமிழ்க் கொண்டல்"

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ் பாடல்களால் போற்றிப் பரவிய முருகப் பெருமானது திருத்தலங்கள் ஏராளம். அவற்றுள் அடி, நடு, முடியென மூன்று தலங்கள் பற்றிப் பாடியுள்ளார். "கொத்துவார் குரவடியிலும் அடியவர் சிந்தை வாரிஜ நடுவிலும் நெறிபல கொண்ட வேத நன் முடியிலும் மருவிய குருநாதா? இந்த வரிகள் குறிப்பிடும் மூன்று தலங்கள் எவை தெரியுமா?

*உலகில் தன்னம்பிக்கையே நிகரில்லாத செல்வம்.*

**கொத்துவார் அடி- திருவிடைக் கழி**
**அவனி சிந்தை வாரிஜ- நடு சிறுவாபுரி.**
**நெறிபல கொண்ட வேதநன்முடி- திருப்போரூர்**

எமது வாழ்நாளில் ஒருமுறையேனும் மூன்று தலங்களையும் தரிசிப்போமாயின் வாழ்வு வளமுறும். வறுமை அகலும். நோய், பிணி ஒழியும், அறிவாற்றல் மிகும். கல்வி வளரும். செவிக்கு இன்பம் கிட்டும்.

முருகப் பெருமான் குராவடி மரத்தருகில் இருந்து அடியவர்களுக்குத் திருவருள் புரி கின்றார் "வேண்டுவார் வேண்டுவதைத் தந் தருளும்" சண்முகப் பெருமான் வள்ளி தேவ சேனா சமேதராக இங்கு வீற்றிருந்து அடியவர் கள் வேண்டுவதை ஈந்தருளுகின்றார். "குரா" என்பதை முன்பின்னாக மாற்றினால் ராகு என் னும் கிரகத்தின் பெயராகும். எனவே ராகு வழிபாட்டுக்குரிய தலமாகவும் திருவிடைக்கழி திகழ்கிறது.

முருகப்பெருமானுக்குரிய முதல் ஆல யமாகத் திருவிடைக்கழி தலம் விளங்குகிறது. "கொத்துவார் குரவடி" என்பது "குராமரத்தின் அடி" என்பதாகும். முருகப் பெருமானுடைய திருப்பாதங்கள் பதிந்த புண்ணியபூமி "திரு விடைக் கழி". திருக்கடவூரில் இருந்து சுமார் 6கி.மீ தூரத்திலுள்ளது. போக்குவரத்து வசதிகளுண்டு.

சூரபன்மனின் மகன் இரண்யாச் சுரனைச் சங்காரம் செய்தமையால் பீடித்த "பிரமகத்தி" தோசம் நீங்க இத்தலத்தில் சிவ லிங்கம் அமைத்து வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. தலவிருட்சமும் குரா மரமாகும். "குரா" என்பதை முன்பின்னாக மாற்றினால் "ராகு" என்ற பெயர் வரும். எனவே ராகு பூசை வழிபாடும் இங்கு நடைபெறுகிறது.

கருவறையில் முருகனும் சிவனும் காட்சி தருவது திருவிடைக் கழி ஆலயத்தின் அற்புதக் காட்சியாகும். திருவிடைக்கழியை "நாகதலம்" என்றும் தலபுராணம் கூறுகிறது. நாகபாம்பு குரா மரத்தடியிலிருந்து முருகனை வழிபட்டதால் இப்பெயர் வந்ததாக ஐதீகம்.

**நடுவனாக விளங்கும் அடியவர் சிந்தை**
**வாரிஜ நடு சிறுவாபுரி.**

திருவள்ளுவர் மாவட்டம் பொன்னேரி மேற்கில் சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ளது காரனோடை பஞ்செட்டி வழியாகக் கும்மிடிப் பூண்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 5கி.மீ உள்ள, சாலையின் இடது பக்க மாக 2கி.மீ தூரம் உள்ளே சென்றால் கோவிலை அடையலாம்.

சிறுவாபுரி என்ற பெயர் அமைந்த காரணம் மிகவும் சுவாரஸ்யமானது என்று கோவில் தர்மகர்த்தா கூறினார். இராமபிரானின் புதல்வர்களான லவன் குஜன் ஆகிய சிறு வர்கள் தந்தையால் அசுவமேத யாகத்தின் பொருட்டு அனுப்பப்பட்ட குதிரையைப் பிடித் துக் கட்டி வைத்து விட்டனர். அதை விடுவிக்க நால்வகைச் சேனையுடன் சென்ற ராமனைத் தந்தை என்று அறியாது கோதண்டபாணியாகப் போரிட்டனர். சிறுவர் இருவரிடம் போரிட்ட இடம் சிறுவாபுரி ஆயிற்று என்பர். சிறுவர் புரி சிறுவா புரி ஆயிற்று.

சிறுவாபுரி ஆலயத்தின் அற்புத அழகு வடிவில் முருகப்பெருமான் வீற்றிருந்து திரு வருள் புரிகிறார் என்கின்றனர் ஆன்மீகப் பெரி யோர். நாமும் வழிபாடு செய்து நல்லருள் பெறு வோம். கோவில் சுவர் முழுமையும் அருண கிரிநாத சுவாமிகளின் சந்தத் திருப்புகழால் நிரம்பி வழிந்தன.

இங்குதான் பிரமனைத் தண்டித்து முருகன் படைப்புத் தொழில் செய்ததாக ஐதீகம். சிவன் உபதேசம் பெற்ற செப்புச்சிலை காணப்படுகிறது. முருகப்பெருமானது இதய கமலமாக விளங்கும் நடுவனாக மிளிரும் இரண்டாவது திருத்தலம். "அடியவர் சிந்தை வாரிஜ நடு; "சிறுவாபுரி" என்றார் "பூஜகர். திருவள்ளுவர் மாவட்டம் பொன்னேரியிலிருந்து

*ஒரு முள் குத்திய அனுபவம் கடலளவு எச்சரிக்கைக்குச் சமம்.*

சுமார் 10கி.மீ தூரத்தில் இருப்பது "சிறுவாபுரி" என முருகப் பெருமான் திருவருள் புரியும் நடு ஆலயம்.

இத்தலத்துக்கு "சிறுவாபுரி" எனும் பெயர் வந்த வரலாறு மிகவும் சுவாரஸ்ய மானது. என்கின்றனர் பெரியார்கள்.

இராமபிரானின் புத்திரர்களாகிய, லவன், குஜன் ஆகிய இருவரும் கானகத்தில் இருந்து வில்வித்தை பயின்று வில் வீரராயினர். இந்நிலையில் அசுவமேத யாகம் செய்ய நினைத்த இராமபிரான் தமது பட்டத்து அசுவம் எனும் குதிரையை தேசத்தைச் சுற்றிவர விடுத்து இலக்குவனனையும் காவலாக அனுப்பி வைத்தான்.

குதிரை சிறுவர் வசித்த வனத்துள் புகுந்ததும் சிறுவர். அதனைப் பிடித்துக் கட்டி விட்டனர். இலக்குவன் பொடிப் பசங்களே எமது குதிரையை அவிழ்த்து விடுங்கள் என் றான். சிறுவர் சற்றும் கலங்காது எங்கள் கோதண்டத்துக்குப் பதில் கூறி விட்டுக் குதிரையை அவிழ்த்துச் செல்" என்றனர். இது கேட்டுக் கோபம் கொண்ட இலக்குவன் சூரன் முருகப் பெருமானைப் பாலன் என்று எண்ணி னாற் போன்று "சிறார்களே என்னுடன் விளை யாடாதீர். மூட்டைப் பூச்சியை நசுக்குவது போன்று நசுக்கி விடுவேன்" ஜாக்கிரதை. "மூட் டைப் பூச்சியானாலென்ன, காட்டுப்புலியானால் என்ன எமது காண்டீபத்துக்கு நீ பதில் தந்தே யாக வேண்டும்" என்றனர்.

சிறுவர் இருவரும் போரிட்ட ஊரா தலின் இது சிறுவாபுரியானதென்பர். இங்கு முருகப்பெருமான் பின் இரு கைகளிலும் ஜப மாலையும் கமண்டலமும் முன் ஒரு கை அபய கரமாகவும் இடது கை இடுப்பிலும் திகழ்கிறது.

இக்கோவில் திருக்கள்ளில் அடியவர் சிந்தைகவர் சிறுவாபுரியிலிருந்து 10கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கேள்விக்கு விடை சிறுவாபுரி. சிறுவர் வாழும் இடம் என்பது பொருள். இத்தலத்துக்கான திருப்புக ழில் "புந்திநிறை அறிவாளன் அண்டர்பதி" என்று அருணகிரிநாத சுவாமிகள் கூறுகிறார்.

இத்தலத்தை வழிபடுவதால் விசேட மாக மனைவளம் சேரும். காணி மனை சம்பந்தமான வழக்குகளில் வெற்றி பெறவும் நீதி கிடைக்கவும் திருவருள் புரிகிறார். "சிறுவாபுரி" முருகப் பெருமான் "இதயக் கமல மாகிய நடுவணிருந்து" என்கின்றனர் ஆன்மீக அன்பர்கள்.

முருகப்பெருமானுடைய மூன்றாவது திருத்தலம் "வேதநன்முடி" எனப்படுகின்ற திருப்போரூர் என்பதாகும். முருகப்பெருமான் அசுரருடன் மூன்று இடங்களில் நின்று போர் புரிந்தார். அவைகடல், நிலம், ஆகாயம் என்பன. இவற்றில் முருகப்பெருமானின் ஆகாய தலமாகவுள்ளது "திருப்போரூர்" இ∴து வேத நன்முடி எனப்படும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் எமதுடலில் படிந்துள்ளன இவை பற்றி உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் மூலம் மிகத் தெளிவாக விளக்குகின்றார். முருகப் பெருமான் சூரன், சிங்கன், தாரகன் ஆகிய அசுரர்களை மும்மலங்களாக வர் ணித்து "நிலத்திலும் கடலிலும் ஆகாயத்திலும் நின்று போரிட்டார். மாயை (தாரகன்) அடங்கிய இடம் திருச்செந்தூர். கன்மம் (சிங்கன்) அடங்கிய இடம் திருப்பரங்குன்றம். ஆணவம் (சூரன்) அடங்கி அழித்து திருவருள் புரிந்த தலம் "திருப்போரூர்" என்பது ஐதீகம்.

திருமாலுக்கும் இலக்குமிக்கும் கண்ணு வரினால் ஏற்பட்ட சாபம் "சிவனாரால் நீக்கப் பெற்று அருளிய தலம் இது என்று கூறினார் அர்ச்சகர். இங்கு முருகப்பெருமான் அகத்திய முனிவருக்கு உபதேசம் அருளியதாகக் கூறப்படுகிறது. "திருப்போரூர்" கோவில் வாசலில்

*நல்ல செயல்களே சமுதாயத்தை மாற்றும் காரணியாக உருப்பெருகிறது.*

என்றும் வற்றாத திருக்குளம் ஒன்று திகழ்வது கண்டோம். "வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும்" முருகப்பெருமான் கோவில் வேதநன்முடி திருப்போரூர் கொண்டருளுகின் றார். அவரிடம் வந்து வேண்டியதைப் பெற்று மகிழுங்கள். பிரசித்திபெற்ற இக்கேணியை சரவணப்பொய்கை எனவும் "வள்ளையார் ஓடை" என்றும் அழைப்பதாகக் கூறினர். கோவில் அபிடேகத்துக்குரிய புஸ்கரணி இது.

"பிரணவம்" மலையடிவாரத்திலிருந்து முருகப்பெருமானைப் பூஜித்த தலமும் இது" என்று கூறினர். இன்றும் அதே நிலையில் மலைமேல் ஸ்ரீ கயிலாசநாதர் ஸ்ரீ பாலாம்பிகை யுடன் எழுந்தருளியிருக்கின்றார். மலைச் சார லின் வடபுறமாக ஸ்ரீ வேம்படி விநாயகர் கோவில் அமைந்துள்ளது. இங்கு மகா இலக் குமி வேம்பாக வடிவெடுத்து சாப விமோ சனம் பெறத் தவம் இயற்றியதாக புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் எழுதிய தலபுராணம் குறிப்பிட்டுள்ளதையும் பார்த்தோம். "வெளியே ஒளியே வியனறிவே வேதநாவின் முடிமணியே அணியார் அமிழ்ந்த போரூரா" என்று சிதம்பர சுவாமிகள் போற்றும் திருப் போரூர் பதிகம் கோவில் சுவரில் பதிக்கப்பட் டிருப்பதைப் பார்த்தோம். படித்தோம்.

திருப்போரூரில் மூலஸ்தானத்தில் சிவாச்சாரியார் காட்டும் தீப ஜோதியில் சுயம்பு மூர்த்தியாக வள்ளி தேவசேனை சமேதரராக அருளும் ஞானவேலனான முருகப் பெருமானின் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கின்றோம்.

இங்குள்ள உபதேச மூர்த்தியின் திரு வடிவம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. சிவ னார் மடியில் அவர் முகத்தை நோக்கி தந்தை யாய சிவனார் வாய் புதைத்துக் குழந்தையிடம் பிரணவப் பொருளின் உபதேசம் பெறும் காட்சி யினை தமிழகத்தில் உள்ள வேறு எந்தக் கோவில்களிலும் காணமுடியாது என்கின்றனர் அங்குள்ள பெரியவர்கள். அத்துடன் இங்குள்ள உபதேச மூர்த்தி திருவடி நம்மை ஆச்சரியப் பட வைக்கிறது. இஃது மிக அற்புதமான செப்புத் திருவாயுள்ளது.

இக்கோவிலில் அமர்ந்தருளும் இன் னொரு மூர்த்தி முத்துக்குமாரசாமி ஆவர். வலது காலை மயிலின்மேல் ஊன்றி வில் ஏந்திய கோலத்தில் வேலவன் காட்சி தரும் அற்புத கலைப்படைப்பு இது. திருப்போரூர் கோவிலின் வட கிழக்கில் சிதம்பர சுவாமிகள் அமைந்துள்ள யந்திரஸ்தாபனமும் மிகவும் அழகு தருவதாகும்.

இக்கோவில் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களில் அபிடேக மும் தீபாராதனையும் இடம்பெறுகிறது. மாசி யில் பெருவிழாவும் வைகாசி விசாக நட்சத் திரத்தில் பிறந்த தின பெரிய குருபூசை அபி டேகமும் 300 படி திருப்பாவனா நிவேதனமும் சிதம்பர சுவாமிகளுக்கு காட்சி உற்சவமும் நடைபெறுகிறதெனச் சிவனடியார்களும் முரு கன் தொண்டர்களும் கூறினர். பெரிய அன்ன தான கூடத்தில் விமரிசையாக அன்னம் பாலிக்கிறது.

ஆவணிமாத விநாயக சதுர்த்தியில் வேம்படி விநாயகருக்கு 100 தேங்காய் சிதற அடித்து அபிடேக ஆராதனையும் கொளுக் கட்டை நிவேதனமும் விளா, மாதுளை, மாங்கனிகளும் படைப்பராம்.

"பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்"
"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

-அநுபூதி.

# வழித்துணை 17

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 ஆண்டவனார் அளித்திட்ட இதயத்தைக் கொண்டவர்கள்
இதயமே நெஞ்சத்துள் போதுமென்று இருக்கலாமோ
இதயத்தை இயக்குவோனை இடையறாது எண்ணுதற்கு
நெஞ்சுக்குள் ஓர்கோயில் உருவாக்க வேண்டாமோ.

02 முன்னவர்கள் நிறுவிவைத்த பள்ளிகளில் படிப்பவர்கள்
பள்ளிப் படிப்புமட்டும் போதுமென்று இருக்கலாமோ
பள்ளியினைத் தந்தோரும் படித்தெம்மை மகிழ்வதற்கு
நெஞ்சுக்குள் ஓர்பள்ளி உருவாக்க வேண்டாமோ.

03 நீதிமன்றை நாடியே நீதிகேட்டுப் போகிறவர்கள்
மன்றுதரும் நீதியதே போதுமென்று இருக்கலாமோ
மன்றமதன் வேலையையும் நீளாமல் குறைத்திடவே
நெஞ்சுக்குள் ஓர்நீதிமன்றம் உருவாக்க வேண்டாமோ.

04 நூல்நிலையம் பலநாடி நூல்களைப் படிப்பவர்கள்
நிலையத்துப் படிப்பதுவே போதுமென்று இருக்கலாமோ
நுண்ணறிவை மற்றையோற்கும் நுணுக்கமாகப் படித்தளிக்க
நெஞ்சுக்குள் ஓர்நூல்நிலையம் உருவாக்க வேண்டாமோ.

05 பேரறிஞர் கல்லறையை பெருங்காட்டில் தான்தேடி
மலர்வளையம் சாத்திவிட்டு மனமாறி இருக்கலாமோ
கல்வியாளர் கல்லறையும் கதைகள்பல சொல்லுமென்று
நெஞ்சுக்குள் ஓர்கல்லறையை உருவாக்க வேண்டாமோ.

06 செத்தபின்னால் சுடுவதற்கு சுடலையதே போதுமென்று
மொத்தத்தில் நாம்போகும் வரைகாத்து இருக்கலாமோ
உத்தமனார் என்றபேரை கெடுப்பவற்றை சுட்டெரிக்க
நெஞ்சுக்குள் ஓர்சுடலை உருவாக்க வேண்டாமோ.

*கல்வியே மனிதனைச் செம்மைப்படுத்துகின்றது.*

07 கருமங்கள் பலவாற்றக் கச்சேரி போதுமென்று
கருமங்கள் பார்த்துவிட்டுக் கவலையின்றி இருக்கலாமோ
நாளாந்தம் நற்கரும நெறிகளைநாம் செயற்படுத்த
நெஞ்சுக்குள் ஓர்கச்சேரி உருவாக்க வேண்டாமோ.

08. வைத்திய சாலைசென்றோர் நோயைக் குணமாக்கிவிட்டு
அடுத்தநோய் வரும்வரைக்கும் காத்துத்தான் இருக்கலாமோ
நோயற்ற வாழ்வுவாழ தடையானவற்றை தடைநீக்க
நெஞ்சுக்குள் ஓர்வைத்தியசாலை உருவாக்க வேண்டாமோ.

09. வங்கிக் கணக்குவைத்து வாடிக்கையாளராகி
தங்கியதில் வாழ்ந்திட்டால் போதுமென்று இருக்கலாமோ
நன்றிக் கணக்குவைத்து நாடியவற்கு உதவிசெய்ய
நெஞ்சுக்குள் ஓர்நன்றி வங்கி உருவாக்க வேண்டாமோ.

10. காவல்துறைநாடி கனபிணக்கைத் தீர்த்துவிட்டு
பிணக்குவந்தால் காவல்துறை உண்டென்று இருக்கலாமோ
பிணக்கதுதான் ஏற்படாமல் உணர்ச்சிகளை அடக்கிவிட
நெஞ்சுக்குள் ஓர்காவல்துறை உருவாக்க வேண்டாமோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com

*வாழ்வது முக்கியமல்ல, சிறப்பாக வாழ்வதே முக்கியம்.*

# அகமும் புறமும்

– திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள் –

புலன்கள் வழி புலப்படும் அறிவு, அகத்தினுள் சேமிக்கப்பட்டு மீட்கப்படுதல் அகம் புறம் சார்ந்த நிகழ்வு, இது இறைவனின் படைப்பில் முக்கிய இயங்கியல், தவிர உயிரினங்களில் மனிதன் சுயமாகச் சிந்தித்து செயற்படவும் அறிவு ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக அகமும் புறமும் அமைந்தது, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விசேட இயல்பாக இருந்தாலும் கூட, மனித எண்ணங்களைத் தீரமானிக்கும் காரணிகள் பலவுண்டு, இவற்றை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## இறையும் இயல்பும்:

இறைவனின் படைப்பில் தன்னைத் தானே உணரும் பக்குவம் மனிதருக்கு கிடைத்த பெரும் கொடையாக இருந்தாலும், இறைவனை எப்படி நாம் தேடியறிய முடியாது சிரமப்படுகின்றோமோ அப்படியே எமது மனத்தையும் நாமே தேடியறிவதற்கு ஒத்ததாகும். காரணம் எங்களுடைய கண்கள் புறக்காட்சிகளை மட்டுமே காண்கின்றன. எங்கள் அகத்தையே எங்கள் கண்களால் காணமுடியாது, ஆனால் இறைவனைக் கற்பனையில் காண்பதுபோல் கற்பனையில் தான் எங்கள் அகத்தையும் நாம் காண்கின்றோம். அதற்காக இறைவனும் இல்லை, எங்கள் மனமும் இல்லை, வெறும் கற்பனையென்று சொல்லத்தான் முடியுமா? மேலும் எமது, எண்ணங்களை, எண்ணத்துக்குள்ளேயே மீட்டுப் பார்க்கிறோம். எண்ணிலடங்காத நினைவுகள் முடங்கிக் கிடக்கிறது. எம்மாலே அவற்றைக் கணக்கிட முடியாது. தவிர எமது மனமே எமது கட்டுப்பாட்டில் இல்லாது சிரமப்படுகிறோம். அவற்றைக் கட்டிவைக்க பெரும் மனப்போராட்டத்தில் ஈடுபடுகிறோம். மேலும் நாம் எமது அறிவினாலும் உடல் அசைவுகளாலும் பல்வேறு செயல்களைச் செய்கின்றோம். ஆனால் நாங்கள் தூங்கும்போது எமது உள்ளுறுப்புக்கள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அவ்வாறு இயங்குவதால்த்தாம் உயிர்வாழ்கின்றோம். இவ்வாறு எமது உடல் இயக்கமும் மனமும் எமது பூரண கட்டுப்பாட்டில் இல்லாதபோதும் எம்மை நாம் என்றே நினைக்கிறோம். ஆனாலும் சில சித்தர்கள், தமது அகத்தை (மனத்தை)யும் அதேபோல் உடலின் இயக்கங்கள் அனைத்தையுமே தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள் என்பதும் அறியக்கிடக்கிறது. எவ்வாறாயினும் இறைவனே அனைவருக்கும் அகமும் புறமுமாக இருந்து அவரவர் விதிப்படி இயக்குகின்றான்.

*கடமையில் கருத்தாக இருப்பதே கடவுளுக்குச் செலுத்தும் முதல் பிரார்த்தனை.*

### மெய்ஞானமும் விஞ்ஞானமும்

இயற்கை என்றும் இறைவன் படைப்புகள் அனைத்தையும் பரிணாமத்தின் வழி படைத்தாலும், அவற்றின் இயங்கியலைப் படைக்கும்போதே, தன்னியக்க முறையில் இயங்கக்கூடியதாகப் படைத்தது மட்டுமல்ல மனிதன் அந்த இயங்கியலை அறிந்து மாற்றங்களைச் செய்யவும் இணையாகச் செயற்கைகளை உருவாக்கவும், இரண்டையும் இணைத்தும் செயற்பட வைக்கவும், பல்வேறு கண்டுபிடிப்புக்களை ஆராய்ச்சிகளைச் செய்யும் வண்ணமே, படைத்துள்ளான். இந்த வகையில் மனிதன் இயற்கையை வென்று வாழ எடுத்துக்கொண்ட இரு ஆயுதமே மெய்ஞானமும் விஞ்ஞானமுமாகும்.

இந்தவகையில் எமது அறிவுக்கு அப்பாற்பட்டு, இன்று விஞ்ஞானம் பல்வேறு சாதனைகளைச் செய்கின்றது. உதாரணமாக நாம் ஒரு தொலைபேசியூடாக, பல்வேறு வலை அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் பல்வேறு செய்திகளைப் பதிவு செய்துவிட்டு அந்தத் தொலைபேசியை அடித்து உடைத்து விட்டாலும் புதிய தொலைபேசிமூலம் எங்கிருந்தாலும் உள் சென்று எமது ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்யமுடியும். மேலும் கண்காணிப்பு ஒலி ஒளிப்பதிவுக் கருவிகள் மூலம் உலகில் நடக்கும் பல்வேறு சம்பவங்களின் உண்மைகளைக் கண்டறிவதற்கும் இன்றைய நவீன விஞ்ஞானம் துணைபுரிவதுபோல் அன்று மனிதன் மெய்ஞானத்தின்மூலம் மறையருள் வலைப்பின்னலூடாக பல்வேறு சாதனைகளைச் செய்தான் என்பது புராண இதிகாசங்கள் வாயிலாகவும் இன்றும் இருக்கும் சிறு சிறு ஆதாரங்கள் மூலமும் உறுதிப் படுத்தக்கூடியதாகவுள்ளது.

### இறையும் மறையும்

படைப்பின் மூல சக்தியாக இறைவனும் பஞ்சபூதங்கள் உட்பட பல்வேறு பரிணாம சக்திகளும், மற்றும் மெய்ஞான மறையருள் வலைப்பின்னல்களும், பல்வேறு வகையில் மனித அகம் புறம் சார்ந்து மனிதனை இயக்குவதை காலக்கிரக விதியாகக் கொண்டு வழிபாடுகள் வாயிலாக நாம் நிவர்த்தி செய்ய முனைவது எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தாலும், சில சித்தர்களும் ஞானிகளும் நேரடியாக இவற்றின் அருளைப் பெற்றவர்களாக இருப்பதும் அவர்கள்மூலம் பல்வேறு நன்மைகள் தீமைகள் மனித சமூகத்திற்கு கிடைத்திருப்பதும் புராண இதிகாசங்கள் சான்று பகர்கின்றன. எனவே இறையும் மறையும் எல்லோர்க்கும் பொதுவான இயக்கமாகவும் எமக்கு அப்பாற்பட்ட செயலாகவும் இருக்கின்றது.

### வேதாந்தம்

புலன்களை ஒடுக்கி தன்னிலை மறந்த சித்தர்கள் வாயிலாக வெளிப்படும் அருள்வாக்கு, வேதங்களாக எழுதா மொழியாக, ஒரு சிலரால் எழுத்துருவில் ஆவணப்படுத்தப்பட்டு மிகவும் புனிதமாகப் போற்றப்படுகின்ற மறை வேதங்களாகப் போற்றப்படுகின்றது. தவிர இவை அருளப்பட எந்த அறிவையும், இவற்றை அருளிய சித்தர்களுக்கு இருக்கவேண்டிய அவசியமும் இல்லாது இருந்தது. காரணம் முழுவதும் மறையருள் சக்திகளால் அருளப்பட்டமையாகும். இது முழுக்க முழுக்க அகநிலை அறிவு சம்பந்தப்பட்டது.

*நாம் உண்மையாக வாழ்வதென்பது கடமையைச் சரியாகச் செய்வதாகும்.*

### சித்தாந்தம்

மறையருளும் மனித சிந்தனையும், இணையப் பெற்றதுவே சித்தாந்தம். உதாரணமாக முதலடி எடுத்து ஆண்டவன் கொடுக்க மிகுதியை மனிதன் பாடியதை சொல்லமுடியும். எவ்வாறாயினும் அறிவை அறிய முடியாதவனுக்கு அந்த இறைவனே நேரில் வந்தாலும் அறிவை அறிவிக்க முடியாது. இந்தவகை அகமும் புறமும் இணையப்பெற்று இறைவனால் அகம் புறம் சார்ந்து பல வழியில் அறிவு பக்குவப்படுத்தப்பட்டு, சகல ஆற்றல்களும் உள்ளவர்களால் சொல்லப்பட்டவைதான் சித்தாந்தம். இறைவன் எல்லாம் வல்லவன் என்றால் ஏன் ஒருவனுடைய அறிவை உயர்த்த முடியாது? அதாவது ஔவைப்பிராட்டியின் அகத்தில் நின்றவன் முருகன். அவனே புறத்திலும் வந்து சுட்டபழமா? சுடாதபழமா? என ஔவைப் பிராட்டியின் அறிவை சோதித்ததை கூறமுடியும். இவ்வாறு நாயன்மார்களை தடுத்தாட் கொண்டதைக் கூறமுடியும்.

### தத்துவங்கள்

இது முழுக்க முழுக்க மனித சிந்தனை என்று சொன்னாலும் கூட, இறைவன் விதியின்றி, உலகில் எதுவும் நடக்க முடியாது. இந்தவகையில் தர்க்கரீதியான, ஆய்வு ரீதியான கண்டுபிடிப்புக்களுடன் கூடிய, மனித சிந்தனைகளின் வெளிப்பாடுதான் தத்துவங்கள். மேலும் கடவுள் மறுப்புக்கொள்கைகள் கூட தத்துவங்களாகச் சொல்லப்பட்டும் இருக்கின்றன. தவிர நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என வாதிடுவதும், தத்துவம் வெளிப்பாடுதான், எவ்வாறாயினும் இங்கு மறைபொருள்மூலம் சில செய்திகள் சொல்லாமல் சொல்லப்பட்டும் இருக்கின்றன. உதாரணம் இயற்கையிலே பெண்களின் கூந்தலுக்கு மணம் உண்டா? என்ற கேள்வி மனிதருக்குச் சாத்தியமாகாவிடினும் மனிதரல்லாத உயிரினங்கள் பெரும்பாலானவை மணத்தின் மூலமே தமது உறவுகளை இனங்காணுகின்றன. தவிர மனிதர்கள் முத்தமிடுவதற்கும் இந்தப் பரிணாமமே காரணம். அதனால்தான் திருமணம் என்ற சொல்லும் வந்தது. மேலும் எவ்வளவு பொன், பொருள் இருந்தாலும் உரிய உணவு இல்லாவிட்டால் அவற்றை உண்ண முடியாததுபோல், எவ்வளவுதான் வாசனைத் திரவியங்கள் இருந்தாலும் பெண்ணின் கூந்தல் இல்லாது வாசனைகள் சிறந்ததாகுமா? இது இல்லறத்தின் சிறப்பைக் காட்டும் தத்துவமாகும். இவைதான் அகமும் புறமும் இறை செயலேயெனச் சொல்லாமல் சொல்கின்றனவாகும்.

---

## குழந்தைகள் புண்படலாமா?

**வீட்டிலும் சரி, வீதியிலும் சரி, பாடசாலைகளிலும் சரி, விற்பனைக் கூடங்களிலும் சரி, ஆலயங்களிலும் சரி, வாகனங்களிலும் சரி, தனியார் கல்விக்கூடங்களிலும் சரி குழந்தைகள் நாட்டின் அதியுயர் சொத்துக்களாகப் போற்றுகின்ற வாய்ப்பையும், வரத்தையும் இறைவன் எல்லோர்க்கும் தந்துள்ளான். ஆனால் ஊடகங்களில் வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது, அங்கொன்றும், இங்கொன்றுமாக குழந்தைகள் புண்படுகின்ற வேதனைகளை உணர்ந்து நாமும் புண்படுகின்றோம். இத்தகு வேதனைகளுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்க இனியாவது வழி பிறக்காதா? அசம்பாவிதங்கள் இனியும் நடக்காதபடி எல்லோரும் எச்சரிக்கையாக, குறிப்பாகப் பெற்றோர்கள் விழிப்படைய வேண்டும். குழந்தைகள் தெய்வங்கள் என்பதை உணர்வோமாக.**

-கே.எஸ். சிவஞானராஜா-

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தது.*

# மூன்றாம் பிறை

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

சைவர்களாகிய நாம் மாதம்தோறும் ஆவலோடு தேடித் தரிசிக்கும் மூன்றாம் பிறை பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள் வோம்.

மூன்றாம் பிறை. இந்த மிகத் துல்லிய மான, அழகான, ஒளிக்கீற்றாக ஒளிரும் மூன் றாம் பிறையானது தெய்வீகமானது என்பது எமது அசையாத நம்பிக்கை. இதனால்த்தான் 16 கலைகளாக சுந்தரவானில் வளர்ந்துவரும் மூன்றாம் பிறைக்கு நாம் ஆத்மீக முக்கியத் துவம் கொடுத்து வருகின்றோம்.

மூன்றாம் பிறையை நாம் தேடி வானிலே கண்டுவிட்டோமேயானால், எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கோடி புண்ணியம் கிடைத் தது போன்ற ஒரு உணர்வு. எம்பெருமான் சடாமுடியிலே இந்த ஒளிக்கீற்று அமர்ந்திருப் பதாக எமக்கு அசையாத நம்பிக்கை. நீல வானிலே துல்லியமாக அழகாக ஒளிரும் ஒளிக்கீற்றாக, ஒரு சில கால அளவு நேரங்கள் மாத்திரம்தான் இது எமக்குத் தோன்றும். இந்த மூன்றாம் பிறையை 16 கலைகளுள் சிறந்த தாக, ஆத்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக நாம் காலங்காலமாக நேசித்து போற்றி வரு கின்றோம்.

அதிகமாகக் கோடை காலத்தில்த்தான் மேக மூட்டங்கள் குறைவான வானிலே நாம் இப் பிறையைக் காண முடியும்.

கார்த்திகை, மார்கழி மாதங்களிலே மழை மேகங்கள் வானில் நிரம்பியிருப்பதால் இம்மாதங்களில் நாம் எத்துணை முயன்றாலும் இப் பிறையைத் தரிசித்துவிட முடியாது. இதன் காரணமாகத்தான் எவரையாவது நீண்டகாலத் தின் பின்னர் அரிதாகச் சந்தித்து விட்டோமே யானால் உங்களைச் சந்தித்தது கார்த்திகைப் பிறை கண்டது போலிருக்கின்றது என்று உவ மித்துக் கூறுகின்றோம்.

வானில் மிகக் குறைந்த கால அளவில் காணப்படும் இந்த மூன்றாம் பிறைத் தரிசனம் உண்மையில் தெய்வீக சக்தி வாய்ந்த இறை தரிசனமாகக் கருதப்படுகின்றது. ஈஸ்வரனே தனது திருக்கரங்களால் தன் சிரசில் சூடியது இந்த மூன்றாம் பிறையை என்கிறது புராண வரலாறு.

இத்தகைய மூன்றாம் பிறையின் பின்னணியில் உள்ள ஒரு கதையை இப்போது உங்கட்குச் சொல்கிறேன். தக்கனது 27 பெண் களையும் மணந்தவர் சந்திரபகவான். ஆனால் சந்தர்ப்பவசத்தால் தக்கனது சாபத்துக்கு ஆளாகித் தனது 16 கலைகளையும் இழந்த போது சந்திரபகவான் அவற்றை மீண்டும் பெற இறைவனை நோக்கித் தவம் செய்யலானார். அவரது உருகும் தேகநிலையைக் கண்டு அவரது 27 மனைவியரும் தமது தந்தை யாகிய தக்கனிடம் சென்று சந்திரனுக்கு இட்ட சாபத்தை திரும்பப் பெறுமாறு வற்புறுத்தினர். ஆனால் தக்கனோ அறியாமையினால் சந்திர னுக்கு யான் இட்ட சாபத்தால் எனது தபோபல மும் புண்ணியமும் வலுவிழந்துவிட்டன.

*புத்தகங்கள் நிறைந்த வீடு மலர்கள் நிறைந்த தோட்டம் போன்றது.*

எனவே கொடுத்த சாபத்தைத் திரும்பப் பெறும் வல்லமை என்னிடம் இல்லை என்று உண்மையைக் கூறிவிட்டான்.

இதனால் குழப்பமடைந்த சந்திரனது தேவியர் சூரிய மண்டலத்தில் அமர்ந்து எம் பெருமானை நோக்கிக் கடும் தவம் புரிந்தனர். அவர்களது தவத்தால் மகிழ்ந்த சிவனார் "உங்கட்கு யாது வரம் வேண்டும்" எனத் திருவாய் மலர்ந்தருள அவர்கள் தாம் உத்தம மான தெய்வீக நிலையை அடைய அருளல் வேண்டும், என வேண்டிக் கொண்டனர். இறை வனும் அவ்வாறே வரம் அருளி வானில் சுடர் விடும் 27 நட்சத்திரங்களாக அவர்களைப் பிரகாசிக்க வைத்தார்.

இந்நேரத்தில் சந்திரபகவான் ஆற்றிய தவமும் கனியவே அவருக்கு இறை தரிசனம் கிடைத்தது. ஆனால் தனது தேவியரை ஸ்தூல உருவத்தில் காண முடியாமைக்கு வருந்தவே அவருக்காக இரங்கிய இறைவன் 27 நட்சத்திர தேவியருக்கும் மீண்டும் அவர் களது முன்னைய உருவை வழங்கியருள, சந்திர பகவானும் மனம் களிப்புற்று மீண்டும் தம் தேவியருடன் சேர்ந்து தவமியற்றி சிவனாரின் சிரசில் மூன்றாம் பிறையாக அமரும் பேற்றினைப் பெற்றார். அதேநேரம் 16 கலைகளையும் இழந்த சந்திரன் மாதத்தில் 15 நாட்கள் கலைகள் வளர்வதாகவும் அடுத்த 15 நாட்களில் கலைகள் தேய்வதற்குமான மாறுபட்ட வரத்தையும் பெற்றுக்கொண்டார். எப்படிப் பார்க்கினும் எம்பெருமானின் சிரசிலே அமரும் பாக்கியம் சந்திரபகவானுக்குக் கிடைத்ததென்றால் அதுவே பெரும் பாக்கியம்.

எனவே மாதம் ஒரு நாள்தானே; என்ன தான் வேலைகள் இருந்தாலும் 3ஆம் பிறை யைத் தேடித் தரிசிக்க மறந்துவிடாதீர்கள். முயன்று பாருங்கள். பூமியிலுள்ளவர்கள் மூன் றாம் பிறையைத் தரிசித்தால் குடும்ப ஒற் றுமை, மனச்சாந்தி, தேகாரோக்கியம், தீர்க்க மான கண்பார்வை ஆகியன கிடைக்குமெனக் கூறப்பட்டுள்ளது. முயல்வோமா?

## வாரியார் சுவாமிகளின் வாக்கு

பிறர் குற்றத்தை மன்னித்து விடுவது மனிதத்தன்மை.
மறந்து விடுவது தெய்வத்தன்மை.

படிப்பாலும் பணத்தாலும் கடவுளைக் காண முடியாது.
பக்தியினால்த்தான் கடவுளைக் காண முடியும்.

தனக்குள்ளேயே கடவுள் இருக்க சிலர் தரணியெங்கும் கடவுளைத்தேடுகிறார்கள்.

எந்த நேரமும் இறைவனுடைய திருநாமம் நினைக்கப்படுகிறதோ அது நம்முடைய நேரம்.
எது தருமத்தில் செலவழிந்ததோ அது நம்முடையது.

நான் நினைக்கிற தூய நினைவுகள் மற்றும் தீய நினைவுகள் காற்றில் அலைகளாகச் சென்று மீண்டும் நம்மிடமே வந்து ஒடுங்குகின்றன. நாம் எண்ணிய தீய எண்ணங்கள் நமக்கே தீங்கையும் நல்ல எண்ணங்கள் நல்லவற்றையும் செய்யும்.

*உடலுக்குத் தேகப்பயிற்சிபோல மனதிற்குப் புத்தகங்கள்.*

# தன்னை அறியாமையே மானுடப் பிறப்பின் சிறப்பை அறியாமைக்குக் காரணம் ஆகும்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

இறைவன் படைப்பில் பெருமையும் சிறப்பும் உடையவன் மானுடனாவான். ஆனால் அவன் தன்னை அறியாமையினால் மானுடப் பிறப்பின் சிறப்பை அறியமுடியாதவனாக இருக்கின்றான். நான் யார்? ஏன் பிறந்தேன்? என் கடமை என்ன? என்பதை ஒவ்வொரு மனிதனும் சிந்திப்பானாகில் தன்னை அறியும் வழி திறந்திடும். தன்னை அறிய விடாது மலம் தடுக்கின்றதென்று ஆய்வாளர் கூறுகின்றனர். தன்னை அறியும் வழியைக் காண்பதற்கு நல்ல சற்குரு வேண்டும் அல்லது திருவருட் சக்தி வேண்டுமென இறையருள் பெற்ற அறிஞர்கள் கூறுகின்றனர்.

இறைவன் வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு பூமியில் உயிரினங்களை படைக்கின்றான். முன்வினையின்படி ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிரினங்கள் பூமியில் பிறக்கின்றன. பூமியில் தோன்றிய உயிரினங்களில் அதிசிறந்த உயிரினமாக மனிதன் விளங்குகின்றான். இதனையே மூதறிஞர் ஔவைப்பாட்டி "அரிது அரிது மானுடராதல் அரிது" என்று இயம்பியுள்ளார். ஆறறிவு ஆளுமை படைத்த மனிதன் பூமியில் பிறந்ததும், சிற்றின்பமான மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசைகளில் மயங்கி, பேரின்பமென எண்ணி ஆசைகளைப் பெற அலைகின்றான். இந்த ஆசைகளையும் மனச்சாட்சி, நீதி என்ற நெறிகளினின்று பெறலாம். பொன்னை தர்ம வழியில் நின்று பெற்றுக்கொள்ளலாம். அதுபோல் மண் ஆசையையும் பெற்றுக் கொள்ளலாம். கற்பு நெறியில் நின்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் இல்லறவியலில் கூறிய படி பெண் ஆசையையும் தீர்த்துக் கொள்ளலாம். மானுடப் பிறப்பின் சிறப்பை உணர்த்தும் இல்லற வாழ்வாக அமையுமென்று வள்ளுவன் கூறுவதைக் காண்கின்றோம். மனிதன் எப்படியும் வாழலாமென்ற எண்ணக் கருவை கலைத்து விடும். நெறிப்பட்ட நல்லறம் புரியும் இல்லறமாக அமைந்துவிடும் என்பது அறிஞர் கூற்று ஆகும். "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" என்னும் குறளின்மூலம் இல்வாழ்வை சிறப்பித்துக் கூறுகின்றான். இல்லத்தரசி எப்படி இருக்க வேண்டுமென்று "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலான் பெண்" என்ற குறளின்மூலம் விளக்குகின்றார். எல்லா அறங்களிலும் இல்லறமே சிறப்புடையதென்றும் வள்ளுவர் கூறுகின்றார். இல்லற வாழ்வை நெறிப்பட்ட வாழ்க்கையாக அமைத்துக்கொண்டால், மானுடச் சிறப்பு அறியும் வாய்ப்பு கிடைக்கின்றது.

தன்னை அறிய வைத்தவன் தன் குரு செல்லப்பா சுவாமி என்று பின்வரும் பாடல் மூலம் யோகர்சுவாமி விளக்குகின்றார்.

"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்

*சோதனைகள் அதிகமாக இருந்தால் சுகம் பெரிய அளவில் வரப்போகிறது என்று அர்த்தம்.*

முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவர்க்கு அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்"

நல்லூர் தேரடியே இல்லிடமாகக் கொண்டு விசரன்போல் நடித்து செல்லப்பா சுவாமிகள் நல்லூரானை மனதில் இருத்திக் கொண்டார். இவரை அறியாத உணராத சிலர் "விசர் செல்லப்பா" என்று அழைத்தனர். செல்லப்பா சுவாமிகளும் யோக சுவாமிகளும் கூடிச் சமைப்பார்கள். ஒருகால் இருவரும் சாவகச்சேரியில் ஒரு குடிசையில் சமைத்தார்கள். கறி பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இந்நிலையில் "வேகும் உடலுக்கு ஊன் வேண்டுமா? என்று சொல்லி சட்டியை அடித்து உடைத்து விட்டு மாவிட்டபுரம் நோக்கி நடந்தார்களென வரலாறு கூறுகின்றது. யோக சுவாமி அவர்கள் எண்ணை இன்றி பழுதடைந்து வீதியோரத்தில் நின்ற வாகனமொன்றை, யாழ் வீதிகளில் ஓட்டிச்சென்று, அதிசயச் செயலை செய்தார் என்று அன்று கண்ட மக்கள் கூறியதை நாம் அறிவோம். இவர்கள் இருவரும் பல சித்துக் களைப் புரிந்தார்கள். கடலில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் வீட்டில் யோக சுவாமிகள் முற்றத்தில் ஏலையா ஏலையா என சவளால் அடித்துக்கொண்டு நின்றதை, மீன்பிடிக்கச் சென்றவரின் மனைவி உண்மை நிலையறியாது கலங்கிக்கொண்டு நின்றாள். யோக சுவாமியாரும் போய் விட்டார். கடலுக்குச் சென்ற கணவன் வள்ளம் புரண்ட கதையையும் தான் தத்தளித்த நிலையையும், பின் ஒருவாறு கரை சேர்ந்ததையும் கூற, யோக சுவாமிகளின் செயலை மனைவி கூறி இருவரும் யோக சுவாமிகளை போற்றினாரென்று வரலாறுமூலம் அறிகின்றோம். இவர்களைப்போல் கடையிற் சுவாமிகளும் கடைவீதிகளில் நின்று பல சித்துக்களைச் செய்து வந்தார். ஒருநாள் இரவு நகர்க் காவலர் இவரைப் பிடித்து ஒரு அறையில் பூட்டி திறப்பையும் கொண்டு வீடு சென்று மறுநாட்காலை அறையைத் திறந்து பார்த்த பொழுது அவரைக் காணவில்லை. பூட்டும் உடைக்கவில்லை. வேறு வழிகளும் திறந்திருக்கவில்லை. என்ன நடந்ததென்று அறியாது கலங்கிக்கொண்டு நகர்க் காவலர் நின்றனர். அப்பொழுது கடையிற் சுவாமிகள் குதூகலத்துடன் ஓடித்திரிவதைக் கண்டார்கள். கடையிற் சுவாமிகள் நிலை அறியாது, விசரனென எண்ணி சிறையில் அடைத்துவிட்டேனென்று எண்ணி ஓடிச்சென்று மன்னிப்புக் கேட்டதாக நூல் கூறுகின்றது. இந்தச் சித்தர்கள்மூலமும் மானுடப் பிறப்பின் சிறப்பு அறியக்கிடக்கின்றது.

மானுடப்பிறப்பின் சிறப்பை பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு இறை வழிபாட்டின் மூலம் அறிய வைக்கலாம். இறை அருள் பெற்ற மாணவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி இல்லறத்தில் நல்லறம் கண்டு விருந்தோம்பல் செய்து மானுடப்பிறப்பின் மகிமையை பெற்றுக்கொள்ளலாம். தன்னை அறியவேண்டுமாயின் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலயம் செல்லுங்கள். அங்கு நீங்கள் சென்று சந்நிதியான் ஆற்றில் மூழ்கியெழ வினைகள் அழிந்துபோகும். விபூதி உடல் எங்கும் பூச நோய்கள் அகன்றுவிடும். வீதி வலம்வர அவன் அருள் உங்கள் உள்ளத்தில் பதியும். எந்நிதியும் தரும் சந்நிதியானிடம், நிம்மதியையும் பெற்று, அவன் ஆசியுடன் இயங்கும் சந்நிதியான் ஆச்சிரமம் செல்லுங்கள். அங்கு அடியான் சந்நிதியான் திருவருளை உணரவைக்க கலைநிகழ்ச்சி நடைபெறுகின்றது. சந்நிதியான் பெருமையையும் திருவருளையும் பெற்று தேவா அமிர்தமான பிரசாதத்தை உண்டு செல்லுங்கள். அமுதத்தை உண்ட உங்களுக்கு மானுடப்பிறப்பின் சிறப்பை உணரவைக்குமென்பது திண்ணம்.

*ஊக்கத்துடன் உழைத்தால் அதிர்ஷ்டம் நம் வீட்டுக் கதவைத் தட்டும்.*

(தொடர் -14)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

எந்த மதத்திலும் காலப்போக்கில் தீமைகள் புகுந்து மதத்தின் புனிதத்தைக் கெடுத்ததுபோல இந்து மதத்திலும் அவ்வப் போது தீமைகள் புகுந்து மதத்தைக் களங் கப்படுத்தி வந்திருப்பதை மறுப்பதிற்கில்லை.

ஏனைய மதங்களில் புகுந்த சில தீமைகள், காலத்தின் கட்டாயத்தால் அந்த மதத்தின் கோட்பாடுகளாகவே நிலைத்தன. ஆனால் இந்து மதத்தில் அப்படிப்பட்ட பெரிய விபத்து எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. அதற் குக் காரணம் எந்த ஒரு குறிப்பிட்ட ஸ்தாப கரின் உபதேசங்களின் மீதும் இந்து மதம் கட்டப்படாததால், எதைப் பற்றியும் விவாதிக்க உரிமை பெற்றவனாக ஒரு இந்து இருந்தான்.

உதாரணமாக வேதங்கள்தான் எல் லாம் என்று மக்கள் நம்பியிருந்த காலத்தில், வேதங்கள் அனைத்தும் பித்தலாட்டங்கள் என்று சொல்லக்கூடியவரும் இருந்தார். அவர் பெரிய ஞானி. மிகச் சிறந்த சிந்தனையாளர். ஆயிரம் ஆயிரம் கேள்விகள் கேட்டு வேத விற்பன்னர்களைத் துளைத்து எடுத்தார் அம் மேதை சார்வாகர். அத்தோடு சார்வாகர், ஜாபளி போன்ற மேதைகள், "கடவுளே இல்லை" என்று சாதித்தார்கள். "கடவுள் வெறும் கற்பனை" என்று வாதித்தார்கள். அவர்கள் முன் வைத்த வாதங் களையும் அலட்சியப்படுத்திவிட முடியாது.

பின்னர் வந்த புத்தர் பல இந்துமதக் கோட்பாடுகளை மறுத்தார். அவருடைய பிரச் சாரம் புயல்போல இந்தியாவை ஆக்கிர மித்தது.

இதன் விளைவாக இந்துமத தத்து வங்கள் பற்றியும் சம்பிரதாயங்கள் பற்றியும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. நல்லவை நின்றன. தீயவை அழிந்துபோயின.

இந்து மதத்தின் தனிச்சிறப்பு இது தான். எதையும் ஏன் என்று கேட்காமல் ஒரு இந்து ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. அப்படி ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அவனை இந்துமதத்திலிருந்து ஒதுக்கிவிடவும் முடியாது.

இந்து மதம் ஒரு ஜனநாயக மதம். வாதப் பிரதிவாதங்களுக்கு இங்கு இடமுண்டு. அறிவாளிகள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் பட்டு இங்கு விசாரணை செய்யப்பட்டதில்லை.

பைபிளுக்கு விரோதமான விஞ்ஞான உண்மைகளைச் சொன்னார் என்பதற்காக "விஞ்ஞானி கலிலியோ" முதுமைப் பருவத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக் கப்பட்டார். 1992ஆம் ஆண்டுதான், (கலிலியோ இறந்தபின்னர்) கிறிஸ்துவ மதத் தலைவர் போப்பாண்டவர் தலைமையில் ஒரு அவை கூடி கலிலியோ சொன்னது சரிதான் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. இப்படியான வேடிக்கை நிகழ்வுகள் இந்து மதத்தில் இருந் ததில்லை.

மூதறிஞர் ராஜாஜி "பழைய சாத்திரங் களிலுள்ள விஞ்ஞானத்தையும் பூகோளத் தையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தில்லை. அவை போதிக்கும் வாழ்க்கை நெறி களை மட்டும் ஏற்றுக்கொண்டால் போதும்" என்று எழுதினார். நம்முடைய வேதங்களைப் பற்றி விமர்சிக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. "கீதையைக் கண்ணன் உபதேசிக்க வில்லை. ஆதிசங்கரர்தான் கீதையை எழுதி

*ஒரு நூல் நிலையக் கதவு திறக்கும்போது ஒரு சிறைச்சாலைக் கதவு மூடப்படுகிறது.*

மகாபாரதத்தில் இடைச் செருகலாகச் சேர்த்தார்" என்று சொல்லுகின்ற ஆராய்ச்சியாளர்களும் இருக்கிறார்கள். இந்துமதம் இந்த ஆய்வாளர்களைக் கண்டிப்பதும் இல்லை. தண்டிப்பதும் இல்லை. இது இந்துமதத்தின் பலவீனமல்ல. பலம். உண்மைகளைக் காணும் முயற்சிக்கு இந்துமதம் ஒருபோதும் தடை போட்டதில்லை. சிந்தனையைக் கட்டுப்படுத்தும் நோக்கம் இந்து மதத்திற்கு இல்லை.

இதற்குக் காரணம் இருக்கிறது. இந்து ஞானிகளே விஞ்ஞானிகளாக இருந்தார்கள். இந்து ஞானிகளே மருத்துவர்களாகவும், கணித மேதைகளாகவும், வான் ஆராய்ச்சி நிபுணர்களாகவும் விளங்கினார்கள். அறிவோடு கலந்து இந்துமதம் வளர்ந்தது.

இன்றைக்கும் இந்து மதத்தில் மூட நம்பிக்கைகள் இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஆனால் சில மேல்நாட்டினர் சித்தரித்துள்ளதைப்போல இந்துமதமே மூடநம்பிக்கைகளின் தொகுப்பு அல்ல.

இராமாயணக் கதையும் மகாபாரதக் கதையும் கற்பனைக் கதைகளாகக்கூட இருக்கலாம். அப்படி நினைக்கின்றவர்களும் கூட அந்த இதிகாசங்கள் உணர்த்துகின்ற நீதிகளையும், அதில் காணப்படுகின்ற பாத்திரப் படைப்புக்களையும், கதைப் பின்னலையும் பார்த்துப் பரவசம் அடைகிறார்கள். இந்து மதம் தொடர்ந்து ஜீவசக்தியுடன் விளங்கி வருவதற்கு இலக்கியங்களும் ஒரு காரணம்.

அதைப்போலவே இந்துக் கோவில்கள் இந்தியாவெங்கும் பரவி இருப்பதால், பல்வேறு விதமான சிற்பக்கலைகளுக்கும் சொந்தமானதாக இந்துமதம் விளங்கி வருகிறது.

இசைத் துறையிலும் அப்படியே, வடக்கே மீராவின் பஜனை என்றால் தெற்கே ஆண்டாளின் பாசுரங்கள். வடக்கே ஜெயதேவரின் கீர்த்தனைகள் என்றால் தெற்கே சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள். இப்படியாக எல்லா நிலைகளிலும் வளம்பெற்றதாக இந்து மதம் திகழ்ந்து வருகிறது.

இத்தகைய இந்து மதத்தினை ஓர் இந்துவாக ரசிப்பது ஒருநிலை. ரசனையுள்ள மனிதக் கண்ணோட்டத்துடன் ரசிப்பது இன்னொரு நிலை. பாடகர் ஜேசுதாஸ் கிருஷ்ண கானமும் திருப்புகழும் பாடுவதற்கு இதுவே காரணம்.

இந்து மதத்தில் காணப்படும் இதிகாச புராணங்கள், அவற்றிலுள்ள பாத்திரப்படைப்புகள் நமது வாழ்வுக்கு வழிகாட்டுபவையாகக் காணப்படுகின்றன.

தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் இன்றும் இராமாயணம், மகாபாரதம் போன்ற நிகழ்ச்சிகள் மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது எனக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

தொலைக்காட்சி நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்ட ஆரம்ப காலங்களில் நிகழ்ச்சி தொடங்குமுன் சில வீடுகளில் பக்திப்பரவசத்துடன் தங்களுடைய தொலைக்காட்சிப் பெட்டிக்கு கற்பூரம், சாம்பிராணி காட்டி வழிபாடும் செய்ததாக செய்திகள் உண்டு. முதலில் வட இந்தியாவில் சீதையாக நடித்த "தீபிகா" என்ற நடிகை சென்ற இடங்களிலெல்லாம் பெண்கள் அவர் காலில் விழுந்து வணங்கினார்களாம். இராமனாக நடித்தவருக்கு கிடைத்த மரியாதை சொல்லவே வேண்டாம். இராவணனாக நடித்தவர் பாதுகாப்புடன் இருக்க வேண்டியிருந்ததா, இல்லையா என்பது தெரியவில்லை. இதெல்லாம் மூடபக்திதான் என்றாலும் இந்தச் சம்பவங்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்த்துகிறது. இராமாயண இதிகாசம் இந்துக்களின் வாழ்க்கையில் எவ்வளவு ஆழமாக ஊடுருவி இருக்கிறது என்பதை இச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. இந்து கலாசாரம் இராமாயணம், மகாபாரதம் என்கிற இரண்டு இதிகாசங்களின்மீது உருவாகி

*அன்புள்ள மனம் சலனமற்று ஓடும் நதி.*

வந்திருப்பதை எவரும் மறந்துவிடமுடியாது. இராமனும் சீதையும் எல்லா இந்துக் குடும்பங்களிலும் வழிபாட்டுக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆண் இராமனைப் போலவும், பெண் சீதையைப் போலவும் வாழவேண்டும் என்றே பெரியவர்கள் ஆசீர்வதிக்கிறார்கள். இலட்சியத் தம்பதிகளுக்கு எடுத்துக்காட்டாகச் சீதையும் இராமனும் விளங்கி வருகிறார்கள்.

கைகேயி கேட்ட வரத்தினால் இராமன் காட்டுக்குப் போகவேண்டி நேரிடுகிறது. இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்றுதான் கைகேயி தசரதனிடம் கேட்கிறாளே தவிர, சீதையும் காட்டுக்குப்போக வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால் சீதையைப் பொறுத்த வரையில் இராமன் இருக்கும் இடம்தான் அவளுக்கு அயோத்தி. காட்டில் ஏற்படக்கூடிய துன்பங்களை இராமன் எவ்வளவோ உருக்கமாக சீதைக்கு எடுத்துச் சொல்கிறான். மற்றவர்களும் சொல்லுகிறார்கள். ஆனால் சீதை கேட்கவில்லை. தன்னுடைய அரண்மனை உடைகளைக் களைந்து மரவுரி தரித்து இராமன் முன் வந்து நிற்கிறாள். "கணவனுடைய சுகத்தில் பங்குகொள்வது மட்டும் ஒரு மனைவியின் கடமையல்ல, கணவனின் துயரத்திலும் பங்கு பெறுவதுதான் ஒரு மனைவியின் கடமை" என்பதை சீதை தன் செயல்மூலம் நிரூபித்துக் காட்டுகிறாள்.

இன்றைய பெண்களுக்கு சீதை ஒரு நல்ல பாடமாகக் காட்சி தருகிறாள். இன்று ஏதோ காரணங்களினால் வெளிநாடுகளுக்குச் சென்று உழைக்கும் ஆண்கள், இங்குள்ள மனைவிகள் என்பதை ஒப்புநோக்கிப் பாருங்கள். அக்னி சாட்சியாக மணம் முடித்து இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாமல் வாழலாம் என்று கணவனும் மனைவியும் செய்து கொள்கின்ற சத்தியம், திருமண மண்டபத்துடன் முடிந்துவிடக் கூடியது என்றால் சீதை அயோத்தியிலேயே இருந்திருப்பாள்; அல்லது மிதுலைக்குப் போய் ஜனக மகாராஜா வீட்டில் சௌகரியமாக வாழ்ந்திருப்பாள். ஆனால் பெண்ணுக்கு இலக்கணமாகத் திகழும் சீதை, இராமனுடன் சேர்ந்து எல்லாத் துயரங்களையும் அனுபவிக்கத் தயாராகிவிடுகிறாள்.

இலட்சியத் தாம்பத்தியம் என்பது இதுதான். இந்த ஒரு சம்பவத்தை மட்டும் பெண்கள் உணர்ந்து, பாடம் கற்றுக்கொண்டால் குடும்ப வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எத்தனையோ குழப்பங்களைத் தவிர்த்து விடலாம்.

இத்தகைய நீதிகள் பெண்ணுக்கு மட்டும்தானா? ஆண்களுக்கு இல்லையா? என்று கேட்பது என் செவியில் விழுகிறது. காட்டுக்குச் சென்ற இராமன் சீதையைப் பிரிந்து துடியாத் துடிக்கிறான். அவளை இராவணன் தூக்கிப்போய்விட்ட செய்தியை ஜடாயுமூலம் அறிகிறான். ஆனால் இலங்கையில் சீதை இராவணனால் எங்கே மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறாள் என்பதை அறிந்துவர அனுமன் அனுப்பப்படுகிறான். கற்பினுக்கோர் அணிகலத்தை அசோகவனத்தில் அனுமன் தரிசிக்கிறான். சீதை கொடுத்த சூளாமணியை அடையாளமாகப் பெற்றுக்கொண்டு அனுமன் திரும்புகிறான்.

அனுமன் வராதது கண்டு வேதனைக்கு உள்ளாகிறான் இராமன். சீதையில்லாமல் உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்கிற முடிவுக்கு வந்து, அக்னி வளர்த்து உயிர்விடத் தயாராகிறான். அனுமன் பறந்து வருகிறான். "கண்டேன் சீதையைக் கண்களால்" என்று சொல்லியவாறு வந்து விழுந்தான். ஆக சீதைக்கேற்பட்ட துயரத்தில் பங்கேற்று, அவள் இல்லாமல் நான் இல்லை என்கிற முடிவுக்கு இராமன் வருகிறானே

*அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.*

அதுதான் தாம்பத்தியம். ஒழுக்கம் வாழ்க்கை நெறிகள் என்பவை பெண்ணுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும்தான் என்பதை இராமாயணம் விளக்குகிறது.

இராமாயணம் வள்ளுவர் வாக்கு ஒன்றை மையப் பொருளாகக் கொண்ட இதிகாசம் ஆகும்.

**"பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு"**

அயலவன் மனைவியை, நெஞ்சாலும் நினைக்காத ஆண்மையே சான்றோர்க்குப் பெரிய அறம் ஆகும். அது அறம் மட்டும் அல்ல; ஆன்ற ஒழுக்கமும் ஆகும்.

இன்பத்தையே பெரிதாகக் கருதி மற்ற வனுக்குரிய மனைவியை விரும்பும் மடமைக் குணம், உலக வாழ்விற்கு அடிப்படையாக அமைந்துள்ள அறநெறியையும், பொருள் நெறியையும் அறிந்த மேலோரிடம் இருக்காது.

தீயவர்கள் அனைவரிலும், அயலான் மனைவியை அடைய விரும்பி அவள் வீட்டு வாசலில் ஏங்கி நிற்கும் அறிவிலியைப்போல், உலகில் வேறு எவருமே இரார். தம்மை "நல்லவர்" என்று, நம்பியவரின் மனைவியை அடைய விரும்புவோர், உண்மையாகச் செத் தவரேயன்றி, உயிரோடு வாழ்பவர் ஆகார்.

இவ்வாறு பல கருத்துக்களை உள் ளடக்கியது வள்ளுவரின் திருக்குறள். (அதிகாரம் 15- பிறன் இல்விழையாமை)

இந்தக் கருத்துக்களுடன் இராமாயணத் தின் இராவணன் எனும் கதாபாத்திரத்தை நோக்குவோமாயின், வரம் பல பெற்றிருந்தும் மாற்றான் மனைவியை விரும்பியது எவ்வளவு கொடூரமானது என்பதை இராவணனுக்கு ஏற் பட்ட முடிவு தெளிவாகக் காட்டுகிறது.

ஞானச்சுடருக்கு தொடர்- 14 எழுதிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்தேன். "4 வயது நிரம்பிய பெண் குழந்தை பாலியல் பலாத் காரத்துக்கு உட்படுத்தப்பட்டார்" என்பது செய்தி. இதைவிட அந்தக் குழந்தை விசாரணை யில் கூறிய செய்தி "அம்மாவுக்கும் எனக்கும் நடுவில் பக்கத்துவீட்டு மாமா படுத்திருந்தார்" பிள்ளை கூறிய மற்றைய விடயங்களைத் தவிர்க்கிறேன். இந்தச் சம்பவம் தமிழரின் பண் பாடு பற்றிய கேள்வியை எழுப்புகிறதல்லவா? நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என் பதனை அனைவரும் சிந்திக்கவேண்டிய தரு ணம் இது! சிந்தித்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளாவிடின், அழிந்துபோனவற்றில் தமிழ் கலாசார பண்பாடும் இடம்பெற்றுவிடும்.

இந்தச் சம்பவம் இராமாயணம் ஏன் எழுதப்பட்டது என்ற பேருண்மையை விளக் கியது. நல்ல வாழ்க்கை முறை, அண்ணனுக் காக தம்பி பின் தொடர்ந்து செல்லும் தூய சகோதர பாசம், மனிதனாகப் படைக்கப்பெற்ற இராமன் எனும் நாயகன் வேடனையும், குரங் கையும், அரக்கனையும் சகோதர வாஞ்சை யுடன் தழுவிக்கொண்டதும் இன்னும் தேவை யான பாடமாக அமைந்திருக்கிறது.

இராமாயணத்தின் ஒவ்வொரு கட்டத் திலும் ஏதோ ஒரு வாழ்க்கை நீதி புகட்டப்படு வதைக் காணலாம். ஒவ்வொரு பாத்திரமும் ஏதோ ஒரு தர்மத்துக்கு, நேரிடையாகவோ மறை முகமாகவோ எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இராமனின் மனைவி சீதையை உயர் வாகப் பார்க்கும் நாம் இலட்சுமணன் மனைவி ஊர்மிளையை மறந்துவிடுகிறோம். சீதை யாவது கானகத்துக்குச் சென்றாலும் இராம னோடு சேர்ந்து வாழ்கின்ற சுகத்தைப் பெறு கிறாள். ஆனால் ஊர்மிளையோ கணவன் இலட்சுமணனைப் பிரிந்து பதினான்கு ஆண்டு கள் தாம்பத்திய சுகத்தை அறியாத துறவு வாழ்க்கையினை மேற்கொள்ள வேண்டியவ ளாக இருக்கிறாள்.

*ஒருவனின் அறிவை அறிந்துகொள்வதற்கு அவனது பேச்சே அளவுகோல்.*

மைத்துனரின் வாழ்க்கைக் கஷ்டங்களைத் தன் கணவரும் பகிர்ந்துகொள்ள அனுமதித்து, தன்னுடைய இளமைக் காலத்தைத் தியாகம் செய்ய முன்வந்த ஊர்மிளை, இராமாயணத்தின் ஒப்பற்ற ஒரு கதாபாத்திரம்.

கூட்டுக் குடும்பத்தின் பாதுகாப்புக்காக ஒரு பெண் எந்த அளவுக்குத் தியாகம் செய்யமுடியும் என்பதற்கு ஊர்மிளை ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறாள்.

ஒரு இந்துக் குடும்பத்துக்கு வழிகாட்டுகின்ற அத்தனை அம்சங்களும் இராமாயணக் கதையில் இருப்பதால்த்தான், இந்துக் கலாசாரத்தின் ஊற்றுக் கண்ணாக இந்த இதிகாசம் விளங்குகிறது.

(தொடரும்...

## கார்த்திகேசா! திருக்கார்த்திகையில் பாடியே நிற்கிறோம் வா.

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா வா
தீபங்கள் ஏற்றுகிறோம் ஓம் முருகா வா
(ஓம் முருகா)

கலியுகத்தில் எமையாளும் கந்தா நீ வா
வலிகள் யாவும் விலக்கிடவே வா வா வா
சிவன் உமை மைந்தா எழுந்தே நீ வா
அவனி சிறக்கவே அப்பா நீ வா
ஐங்கரன் தம்பியே எங்களுக்காய் வா
பங்கமின்றி வாழ்வதற்கே பாலா நீ வா
மால் மருகா வா கால் பிடித்தோம் வா
முன்னின்று காத்திடும் முருகா நீ வா
வள்ளி தெய்வயானை மணாளனே வா
வள்ளலே வரோதயா வா வா வா
மண்ணிலே தீமைகள் போக்க மயிலோனே வா
கண்ணீரைத் துடைப்பதற்கே கார்த்திகேசா வா
வழிகள் கேட்டு நிற்கும் பக்தருக்காய் வா
வேலாயுதா வா வேலாயுதா வா
தேன் தினையில் விளக்கு வைத்திடவே வா
தீபங்கள் வீதியெங்கும் வா வா வா
திருக்கார்த்திகையில் பாடியே நிற்கிறோம் வா
திருவருள் தரவே தெய்வமே நீ வா.

– மீசாலையூர் கமலா –

*உண்மையே உள்ளத்தூய்மை, ஒழுக்கத்தின் உயிர்நாடி.*

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



*வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாமாக இருப்போம்.*



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...

புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல. ஆயினும் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கின்றன.



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...







சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக் கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் இருவருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டபோது....

*பணத்தால் பசியைப் போக்க முடியும். துக்கத்தைப் போக்க முடியாது.*





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமுதாயப் பணிகளின் வரிசையில் வடமராட்சி கிழக்கு- மருதங்கேணி பிரதேசசபை, வடமராட்சி வடக்கு பரு. பிரதேசசபை, யாழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் ஆகியவை ஏற்பாடு செய்த முதியோர்- மற்றும் மாற்று வலுவுடையோருக்கான உடைகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டபோது...

# நீடு வாழி!



– **திரு கி. குலசேகரன்** அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரமத் தலைமைப் பொறுப்பேற்று
சந்ததம் நற் சேவை செய்யும் மோகனதாஸ் சுவாமிகளே!
சிந்தனையில், செயலிலெல்லாம் பிறருக்கு உதவுகின்ற
சீரிய பணிகள் பலவால் சிறப்புற்று நிற்பவரே!
வந்ததையா உங்களினைத் தேடியுமே "யாழ் விருது"
வளமார்ந்த சேவைக்காய் கிடைத்த அரும் பரிசு!
சிந்தை மகிழ்ந்தோம்! மேலும் சிறப்புறவே வாழ்த்துகிறோம்!
சீர் பெற்றுச், செகம் புகழ நீடு வாழி!!

பட்டம், பதவிக்காய் ஆசை கொண்டே, பிறர்க்குப்
பந்தம் பிடித்துச் சுய கௌரவத்தைகூட நிதம்
விட்டுக் கொடுத்திங்கு வீணே அலையும் கெட்ட
வீணர்கள் வாழுகின்ற காலந்தன்னில்,
பட்டங்கள் உமைத் தேடி வருதல் கண்டோம்!
பண்புடையோர் உமை ஏற்றிப் போற்றக் கண்டோம்!
திட்டமிட்டுச் செயல் புரியும் திறமை கொண்டே
திக்கெட்டும் புகழ் பரவ நீடு வாழி!

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று பிறர்
மனங் குளிர சேவை செய்யும் திறமையோடு, மனப்
பக்குவமே கொண்டு, பணி புரிவதோடு, உயர்
பக்தி நெறியும் தளைத்தோங்கிடவே செய்கின்ற
சக்தியினை சந்நிதியான் அருளால் பெற்று, என்றும்
சமத்துவ நற் சேவை செய்யும் உங்கள் மீது
பக்தி கொண்டோம்! பன்னிருகை வேலன் அருளாலே,
பல்லாண்டு காலங்கள் வாழி!! வாழி!!

*பணத்தை இழந்தால் சொற்ப நட்டம், நேரத்தை இழந்தால் எல்லாமே நட்டம்.*

# ஞானச்சுடர் வாசகர்போட்டி 2018

## வினாக்கள்

01. சுயநலம் இல்லாமல் பணிபுரியும் இலட்சிய வாழ்வை எப்படிக் கூறலாம்?

02. சூரிய சதகம் பாடி இழந்த ஆரோக்கியத்தைப் பெற்றவர் யார்?

03. தஞ்சைவாணன் கோவை என்னும் நூலை இயற்றியவர் யார்?

04. பாலாவித் தீர்த்தத்தை செப்பனிட்ட பெருமைக்குரியவர் யார்?

05. மாமனிதன் என்று யாரைக் குறிப்பிடலாம்?

06. யானே பொய் என் நெஞ்சும் பொய் எனும் பாடலைப் பாடியவர் யார்?

07. கொடையாளியின் செல்வம் எதற்கு ஒப்பிடப்படுகின்றது?

08. திருவாசகம் என்பதன் பொருள் யாது?

09. விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவதன் நோக்கம் யாது?

10. மனிதப் பிறவி எடுத்ததன் பயன் யாது?

11. குருகுலக் காற்று என்மீது படாமல் போனது எனது துரதிஷ்டமே என்று கூறியவர் யார்?

12. திறமையை வளர்ப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

13. ஐந்தாங் குரவர் என்று கூறும் பெரியவர் யார்?

14. சகல ஆலயங்களுக்கும் நெல் வயல்களை சீர்வரிசையாக வழங்கிய மன்னன் யார்?

15. பெரிய பிரயத்தனங்களை மேற்கொள்வதற்கு எது அவசியம்?

16. உப்பிலி அப்பன் எனும் பெயர் கொண்ட சிவன் ஆலயம் அமைந்த இடம் யாது?

17. உடலுக்கு ஏற்படும் நோய்களுள் மிகக் கொடியது எது?

18. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை எனும் பாடலைப் பாடியவர் யார்?

19. பக்தி செய்வோர் இதயம் எத்தன்மையது?

20. நாயன்மார்களது வரலாறுகள் எமக்கு எதனைப் போதிக்கின்றது?

21. சோழ வேந்தனுடன் இணைந்து ஆலயத் திருப்பணிகள் செய்த பெரியவர் பெயர் கூறுக?

22. பிராமண சுவாமி என்று அழைக்கப்படும் மகான் யார்?

23. அரைநிமிட நேரம் எனும் கட்டுரைத் தொடரை எழுதியவர் யார்?

24. காசி மகாராஜாவின் வழித்தோன்றல்கள் தினமும் கலந்துகொள்ளும் பூசை எது?

25. இருளின் எழும் சுடரின் பின் புகுவார் என்பதன் பொருள் யாது?

*படியுங்கள், சிந்தியுங்கள், நெஞ்சில் நிறுத்துங்கள் உயருங்கள்.*




போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2018ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை **வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு** என்ற முகவரிக்கு 20.01.2019 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர்
## சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2019ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-*

*உங்களைப்பற்றி நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையே வெற்றி தரும்.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் மலையகக் கல்விப்பணி

– மோகனதாஸ் சுவாமிகள் –

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமய, சமூகப் பணிகளின் வரிசையில் மலையகத்தில் ஆற்றப்படும் பணிகளில் முதன்மையானது அங்குள்ள மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளுக்குரிய உதவிகளை வழங்குவதேயாகும். இச்செயற்பாட்டின் அடிப்படையில் நாம் பலமுறை எமது குழுவினரோடு நேரில் சென்று பல பாடசாலைகள், அறநெறிப் பாடசாலை களில் கல்வி கற்கும் மாணவர்களின் கோரிக்கைக்கு அமைவாகப் பலவிதமான கற்றல் செயற்பாட்டுக்குரிய உபகரணங்களை வழங்கி அவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த நம்மாலான வரை முயன்றோம்.



இந்த வகையில் 10.10.2018 புதன்கிழமை பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மிகவும் வறிய 53 மாணவர்களுக்காகிய புத்தகப் பைகளும்

பாடசாலைக்குரிய உபகரணங்களுடன் ஆன்மீகம் சார்ந்த நூல்களும் வழங்குவதற்காக எமது குழுவினருடன் சென்றிருந்தோம். மாணவர்கள் மத்தியில் அதனை வழங்கியபின் கல்லூரி அதிபர் நன்றி கூறும்பொழுது தமது கல்லூரியில் கல்வி கற்கும் இந்த ஆண்டு (2018) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (O/L) தோற்றப்போகும் மாணவர்களின் கற்றல் தரத்தை மேம் பாடடையச் செய்வதற்கு வடபுலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைக் கொண்டு ஒரு மீட்டல் வகுப்பை நடாத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். நாமும் கூடியவரை இச்செயற்பாட்டை செய்வதற்கு முனைகின்றோம் என்று கூறியதுடன் பண்டாரவளை ஸ்பிரிங்வெலி கோட்டக்காடு தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 55 மாணவர்களுக்குரிய புத்தகப்பை களுடன் கூடிய கற்றல் உபகரணங்களை வழங்கி எமது செயற்பாட்டை நிறைவு செய்து ஆச்சிரமம் திரும்பினோம்.

பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலய அதிபரின் வேண்டுகோளை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் எனும் முனைப்புடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாட்டுக்கு தன்னாலான ஆதரவை வழங்கி வருகின்ற ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்களோடு ஆலோசித்ததன் பிரகாரம், முடிந்தவரை ஆசிரியர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பினை தானே முன்னின்று ஏற்பாடு செய்வதாகக் கூறி அவரே அதற்குரிய முன் ஆயத்தங்களையும் மேற்கொண்டார். இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் ஆசிரியர்களான,

*திருவாளர்கள்*

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | - ஆறுமுகம் கடம்பன் |
| | ஆ. அரவிந்தன் |
| தமிழ் | - நாக. தமிழேந்திரன் |
| சமயம் | - மனோஜ் |
| | நி. பாபுதரன் |
| ஆங்கிலம் | - ப. தர்மகுமாரன் (ப. மதன்) |

ஆகியோர் எம்மோடு பெருமனதோடு பண்டாரவளைப் பயணத்தில் இணைந்து கொண்டனர். இவ்விடயம் சம்பந்தமாக பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலய அதிபரிடம் தொடர்பு கொண்டபோது எழுபத்தைந்து மாணவர்களுக்குரிய கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் எனும் கருத்தை முன் வைத்தார். அவர் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமயம், தமிழ் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர்களையும் அப் பாடத்திட்டத் திற்கு அமைவாக வினாப் பத்திரங்களையும் இங்கேயே தயார்ப்படுத்தி அதற்கமைவாக பாடத்தை நடாத்த முயற்சிப்பது எனும் எண்ணத்துடன் செயற்பட்டோம். இவ்வகையான பயிற்சி வகுப்பு இடம்பெறப் போவதைக் கேள்வியுற்ற அப்புத்தளை கோணமுட்டாவ தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு யோகேஸ்வரன் எம்மோடு தொடர்பினை ஏற்படுத்தி தமது பாடசாலை மாணவர்களில் பதினைந்து பேரை உள்ளடக்குமாறு கேட்டுக்கொண்டார். இவற்றிற்கு அமைவாக கேள்விப் பத்திரங்கள் 100 வரையில் எம்மால் தயார் செய்யப்பட்டு பாடங்களுக்குரிய ஆசிரியர்களுடன் 02.11.2018 வெள்ளிக்கிழமை இரவு ஆச்சிரமப் பேருந்தில் பயணித்து 3,4ஆந் திகதி சனி, ஞாயிறு தினங்களில் வகுப்பை நடத்தலாம் என்று தீர்மானம் எடுத்தபின், பாடசாலை அதிபரோடு தொடர்பினை ஏற்படுத்தி எமது முடிவை அறிவித்தோம்.

*எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புகள் வந்து குவியும்.*

அதனடிப்படையில் 02.11.2018 வெள்ளிக்கிமை இரவு எட்டு மணியளவில் எமது பேருந்து ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்டு யாழ் சென்று அங்கிருந்து இரா. செல்வவடிவேல் தலைமையிலான ஆசிரியர் குழுவினருடன் மொத்தம் பன்னிருவர் பதுளையை நோக்கிப் பயணித்தோம்.

சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் பதுளை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தை அடைந்து எமது காலைக் கடன்களை முடித்து காலை எட்டு மணியளவில் பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலயத்தை நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று. எமது வரவை அதிபர் அவர்கட்கு ஏற்கனவே தெரியப்படுத்தியதன் காரணமாக சகல முன்னேற் பாடுகளுடன் அதிபரும் மாணவர்களும் வருகை தந்திருந்தனர். வழியில் பண்டாரவளை பேருந்து தரிப்பிடத்தில் மீட்டல் வகுப்பிற்கென வருகை தந்திருந்த அப்புத்தளை கோணமுட்டாவ பாட சாலையின் மாணவர்கள் இருபதுபேர் எம்முடன் இணைந்து கொண்டனர். (தொடரும்...

**மலவிருளாஞ்ஞை நீக்குவது பதஞ்சலி பாலன் சந்நிதி வேலவனே**

பிள்ளை மதியணிந்த பெம்மான் திருவடியை யென்றும்
உள்ளுமன் பர்க்குறாத பொருளுண்டோ பெருமானே
மெள்ள நறுநெய் விழைந்து விளக்கும் அடியார்க்குத் தினமும்
கள்ளவொலியுங் கற்பாந்தக வாறும் துள்ளநின்ற வேலவனே!

அத்தியழகித்த ஆறுமுகப் பெருமான் திருக்கமலபாத யோகத்தை
ஏத்துபவர்க் கென்றுமி சையாப்பொருளுண்டோ வேலே!
சாத்திய வில்வம்தனக்குத் தளர்விலா முக்கனிப் பாமாலை புனைந்தேற்றும்
முத்தமயில் வாகனத் தெய்வமீந்த தானத்தை மோகனாற்றும் வரம் சந்நிதியானே!

பேருரில்லாப் பெம்மான் திருவடியை கணத்தில் துதிக்க துலங்கிடும் வேலருளே!
காயமும் ஐம்பாவம் முற்றுந் தாழ்வோர்கள் தினம் ஆச்சிரம வேலணைக்கு நேர்
வாயிழையாற் கோயில் வகுத்த மோகனதாஸ் சுவாமிகளென்றும் மாசிலா மருந்துதானம்
தூயகுலச் சுற்றம் சூழ்ந்து தொல் லுலகத்தைக் காப்பதும் ஞானதானமே யென்பார் வேலன்!

ஆதியந்தம் நடுவின்றி யகண்டவருள் ஒன்றாகிமெய்
சோதியான மறைவேல் தொன்மை ஞானமனுவாகி யென்றும்
நீதியாகக் கணித்துவர நிகரிலாதனை யுரைசெய்த வேல்
தீதிலாது அருளெனக்கு சித்தியாகச் செய்தருளிய சந்நிதிவேலே!

உடலினுக்குயிரே போல் உயிருக்குயிரானாய் வேலவனே!
உடலுயிர்க்கு அறிவுநல்கி உடலினைக் காப்பாய் தேவனே!
உடலுயிரெனப் பிரிவுநீங்கா ஒற்றுமைப் பொருளாவாய் வேலவனே!
உடனுறையுயிர்க்கு மெட்டா ஒளிப்பெருஞ் சோதியே வேலா!

தெளிக்கத்தக்கவர்க் கருள்செய்யும் தேவனே செல்வச்சந்நிதியே!
அளிக்கத்தக்கவரகன்று போய்த்தக்கதில்லாது பயின்றார் வேலா!
களிக்கத்தக்க வாழ்வுபதவிகள் கைகொள்ளப் புரங்கொண்டதே வனே!
விழிக்கத்தக்க சூழ்ச்சியாலெமை வேண்டாதருள் பூண்பாய் சந்நிதியே!

-க. தெய்வேந்திரம்-

# மார்கழி மாத வாராந்த நிகழ்வுகள்

07.12.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :– "கலைநிகழ்வு"

வழங்குபவர்கள் :– காரைநகர் கிழவன்காடு

கலாமன்ற மாணவர்கள்

---

14.12.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

21.12.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :– "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள் :– முருகன் அடியார்கள்

(திருவாசக விழா)

---

28.12.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மார்கழி மாத வெளியீடு

வெளியீட்டுரை :– திரு சோ. பரமநாதன் அவர்கள்

(கிராம சேவையாளர், குப்பிளான்)

252ஆவது மலர்

மதிப்பீட்டுரை :– திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

(இளை. பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

